
பக். 05

பக். 06

பக். 07

பக். 23

21 FEB 2014


கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை

# உதயன்

பக்கம் : 26
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 | கதிர்: 087 | வள்ளுவர் ஆண்டு: 2045 | மாசி 09, வெள்ளி 21.02.2014


## தென்னாபிரிக்காவின் அழைப்பு வரவில்லை

### *சம்பந்தன் கூறுகிறார்*

*கொழும்பு,பெப்.21*
*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் தென்னாபிரிக்காவுக்கு வருகை தரும் என்று அந்த நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராஹிம் தெரிவித்திருந்த நிலையில், அவ்வாறான எந்த அழைப்புக்களும் தங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.*

21 ஆம் பக்கம் பார்க்க


*நேற்று புதைகுழி தோண்டும் பணியின் போது மீட்கப்பட்ட எலும்புக்கூடு*

## 75

மன்னார், பெப். 21
மன்னார் மனிதப் புதைகுழியில் தோண்டத் தோண்ட எலும்புக்கூடுகள் வெளிக்கிளம்புகின்றன. குறித்த புதைகுழியிலிருந்து நேற்றும் 5 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

21 ஆம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் படைகளுக்கு காணி பறிப்பு

### *நுணாவிலில் சில காணிகளுக்கு சுவீகரிப்பு அறிவித்தல்கள்*

யாழ்ப்பாணம்,பெப்ரவரி 21
யாழ்.மாவட்டத்தில் மீண்டும் இராணுவ முகாம்களுக்கான காணி சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டு வருகின்றன. நுணாவிலில் இவ்வாறு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள் 7 பேரும் அவற்றை இராணுவத்தினருக்கு வழங்குவதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.
யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் மார்ச் மாதம் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகம் திறக்கப்பட்டு இரண்டு மாத காலத்தினுள், இராணுவம் மற்றும் கடற்படைக்கான காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் முழுமுரப்படுத்தப்பட்டிருந்தன.

***தாமதமடைந்த திட்டம்***

இதன் பின்னர் குறித்த காணி சுவீகரிப்பு அலுவலர்கள் தமது பதவியில் இருந்து விலகி வெளியேறியிருந்தனர். இதனால் குறித்த காணி சுவீக

21 ஆம் பக்கம் பார்க்க

## சட்டவிரோதமாக பனை தறித்த ஐவர் கைது

*யாழ்ப்பாணம், பெப். 21*
*சட்டவிரோதமாகப் பனை மரங்கள் தறித்த ஐந்து பேரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.*
*ஊர்காவற்றுறை, கரம்பொன்பகுதியில் உள்ள காணி ஒன்றில் ஐந்து பேரும் சட்டவிரோதமாகப் பனை மரங்களைத் தறித்துள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த*

21 ஆம் பக்கம் பார்க்க

# முருகன், சாந்தன், பேரறிவாளன் விடுதலைக்கு இடைக்காலத் தடை

### *இந்திய உயர் நீதிமன்றம் நேற்று விதித்தது*

கொழும்பு, பெப். 21
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு இன்னமும் சிறையில் இருக்கும் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி ஆகியோர் உட்பட ஏழு பேரை விடுதலை செய்யத் தமிழக அரசு எடுத்த முடிவுக்கு இந்திய உயர்நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை விதித்துள்ளது.
தமிழக அரசின் முடிவை எதிர்த்து மத்திய அரசு நேற்று தாக்கல் செய்த மறுஆய்வு மனுவை அவசர வழக்காக ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் இந்த இடைக்காலத்

21 ஆம் பக்கம் பார்க்க

## நான் சாகிறத்துக்கு முதல் மகனை விடுவியுங்கோ

### சோனியாவிடம் கெஞ்சும் சாந்தனின் தாய்

*யாழ்ப்பாணம்,பெப்.21*
*'நான் சாக முதல் என்ர கையால பிள்ளைக்குச் சாப்பாடு குடுக்கவாவது. பிள்ளையை மன்னித்து விடுவியுங்கோ' என்று சோனியா காந்தியிடம் கெஞ்சிக் கேட்கிறார் சாந்தனின் தாயார்.*

21 ஆம் பக்கம் பார்க்க

# 58 வீதம் நெல் அழிவு


யாழ்ப்பாணம்.பெப்.21
வடக்கு மாகாணத்தில் இந்த வருடம் மழை இல்லாத காரணத்தால் விவசாயிகள் 58 வீதமான நெல் அழிவைச் சந்தித்துள்ளனர் என்று வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர்.சி.சிவகுமார் தெரிவித்தார்.
நெல் உற்பத்தியில் 42 வீதமான நெல் விளைச்சலே கிடைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வடக்கு மாகாணத்தில் நெற்செய்கைக்காக 99 ஆயிரத்து 609 ஹெக்ரேயர் நிலப்பரப்பு நிர்ணயிக்கப்பட்டுள்

21 ஆம் பக்கம் பார்க்க

## ராணுவக் குடியிருப்பு வளைவு அகற்றல்

யாழ்ப்பாணம்,பெப்.21
வலி.வடக்கில் நிறுவப்பட்டிருந்த 'இராணுவக் குடியிருப்புக்குச் சொந்தமானது' எனக் குறிப்பிடும் வளைவு திடீரென

21 ஆம் பக்கம் பார்க்க


*இந்தியாவின் தென் மண்டல இராணுவக் கட்டளைத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் அசோக் சிங் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தார். அவரைப் பலாலியில் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா வரவேற்றார். அவருக்கு அங்கு செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது. பின்னர் பலாலி விமான நிலையத்துக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள 1987 ஆம் ஆண்டு இங்கு கொல்லப்பட்ட இந்தியப் படையினரின் நினைவுத் தூபியில் இந்தியத் தளபதி அஞ்சலி செலுத்தினார். (த-86)*

## வடக்கு மாகாண சபையின் தீர்மானம் கேலிக்குரியது

### *விமான போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு*

*யாழ்ப்பாணம்,பெப்.21*
*பலாலி, திருகோணமலை விமான நிலையங்களிலிருந்து இந்தியாவுக்கு நேரடி விமானசேவை ஆரம்பிப்பது பொருத்தமற்றது என்றும், வடக்கு மாகாண சபையின் தீர்மானம் கேலிக்குரியதொன்று எனவும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிரியங்க ஜயரத்ன தெரிவித்துள்ளார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.*
*வடக்கு மாகாண சபையின் ஆறாவது அமர்வு கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றது. இதன் போது ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால், பலாலி, திருகோணமலை விமான நிலையங்களிலிருந்து இந்தியாவுக்கு நேரடி விமான சேவை நடத்தப்படவேண்டும் என்று பிரேரணை*

21 ஆம் பக்கம் பார்க்க

## கமல் தொடர்ந்தும் மறியலில்

யாழ்ப்பாணம், பெப். 21
நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷயனின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரும் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவருமான கந்தசாமி கமலேந்திரனுக்கு (கமல்)எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறி


21 ஆம் பக்கம் பார்க்க

# பாதுகாப்பு வலயம், பாலியல் பிரச்சினைகள் உள்ளிட்ட பல சவால்களுக்குள் யாழ். மக்கள்

### *பிரிட்டன் தூதுவர் ஜோன் ரங்கின் தெரிவிப்பு*

கொழும்பு,பெப்.21
யாழ்ப்பாண மக்கள் உயர் பாதுகாப்பு வலயம், பாலியல் ரீதியான பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் எனப் பிரிட்டன் தூதுவர் ஜோன் ரங்கின் தெரிவித்துள்ளார்.
யாழ்.மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை, இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரங்கின் குழுவினர் வருகை தந்திருந்தனர். இந்தக் குழுவினர் யாழ்.பொது

21 ஆம் பக்கம் பார்க்க



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்த இந்தியாவின் தெற்கு மண்டல இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் அசோக்சிங், நல்லூர்க் கந்தனை வழிபட்டுத் தேங்காய் உடைத்த வேளையில்... (ஒ-21)

# வடக்கு மாகாண சபையின் தீர்மானங்கள் கிடப்பிலா?

### 39 தீர்மானங்களுக்கு உரிய பதிலில்லை

யாழ்ப்பாணம்,பெப்.21

வடக்கு மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட 47 தீர்மானங்களில் 39 தீர்மானங்களுக்குச் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் பதிலளிக்கவில்லை. வடக்கு முதலமைச்சரின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட 15 பிரேரணைகளுக்கும் பதில் வழங்கப்படவில்லை என்று தீர்மானங்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் அமர்வு கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமானது. இதுவரை ஆறு அமர்வுகள் நடந்தேறியுள்ளன. கடந்த மாதம் இடம்பெற்ற ஐந்தாவது அமர்வு வரை நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் வடக்கு மாகாணப் பேரவைச் செயலகத்தினால் முன்னேற்ற அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை 49 பிரேரணைகள் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இரு பிரேரணைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 47 பிரேரணைகளும் தீர்மானங்களாக ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர், அவை நடைமுறைப்படுத்துவதற்காகத் திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

அவ்வாறு தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தாலும். அவற்றில் 8 தீர்மானகளுக்கே சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் அறியப்படுத்தியுள்ளன.

எஞ்சிய 39 தீர்மானங்களுக்கும் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என்பது தொடர்பில் எந்தப் பதிலும் குறிப்பிடப்படவில்லை.

இந்த 39 தீர்மானங்களுக்குள் 15 தீர்மானங்கள் முதலமைச்சரின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும், அவை தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அவரும் பதிலளிக்கவில்லை என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## வண்ணை சிவன் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் பெரும்திருவிழா (சிவன் திருவிழா) எதிர்வரும் 27 ஆம் திகதி சிவராத்திரியன்று முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த் திருவிழா பதினெட்டாம் நாளான மார்ச் 02 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் காலை 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் மாலை 4 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். திருவிழாக்கள் தினமும் காலை 9 மணிக்கும் மாலை 6 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் காலம் ஆறு மாதங்கள் நீடிப்பு

கொழும்பு,பெப்.21

காணமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும்ஜனாதிபதிஆணைக் குழுவின் காலம் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஒகஸ்ட் 12 ஆம் திகதி வரை ஆணைக் குழுவின் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

காணமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டது. கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஜனாதிபதியினால் அதற்கு ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை வடக்குக் கிழக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக இந்த ஆணைக்குழு அமைக்கப் பட்டிருந்தது. இதுவரை 16 ஆயிரம் முறைப்பாடுகளை ஆணைக்குழுபெற்றுக்கொண்டுள்ளது.

இதற்கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் 18-21 ஆம் திகதி வரை முதலாவது பகிரங்க அமர்வையும், யாழ்.மாவட்டத்தில் கடந்த 14-17 ஆம் திகதி வரை இரண்டாவது பகிரங்க அமர்வையும் ஆணைக்குழு நடத்தியிருந்தது.

இந்த நிலையில் ஆணைக் குழுவின் எஞ்சிய முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக ஆணைக்குழுவின் காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு ஜனாதிபதி நீடித்துள்ளார் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (த-5)

# தற்காலிகமாக உணவகம் 19ஆவது விடுதியில் திறப்பு

### யாழ்.போதனா வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ்.போதனா வைத்தியசாலை உணவகம் முன்னர் கண்விடுதியாக இயங்கிய 19 ஆம்இலக்க விடுதியில் தற்காலிகமாக இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் இயங்கவுள்ளது என்று வைத்தியசாலைத் தரப்புத் தெரிவித்தது.

இன்று தொடக்கம் அந்த விடுதியில் சுடு நீர் விநியோகிக்கப்படும். தொடர்ந்து தேநீர் மற்றும் பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்ட உணவுகள் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முன்னர் உணவகம் இயங்கிய இடத்தைப் புனரமைப்புச் செய்யயும் வரை தற்காலிகமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலை உணவகம் சுகாதார சீர்கேடாக இயங்கிய நிலையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் உணவக உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த உணவகத்தைப் புனரமைப்புச் செய்து அது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க யாழ். நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. அதன்படி இரண்டாவது தடவையாக நேற்று நீதிமன்றில் இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பொதுசுகாதாரப் பரிசோதகர்களான பு.ஆறுமுகதாசன், ப.கிசோக்குமார் மற்றும் வைத்தியசாலை பொது சுகாதாரப் பரிசோதகர் முரளி ஆகியோர் நேற்று அறிக்கை சமர்ப்பித்தனர்.

அதன்போது உணவகத்தைத் தற்காலிகமாக வேறு இடத்தில் இயங்கவைப்பதற்கான ஒழுங்குகளை முதலில் மேற்கொள்ளுமாறு நீதிமன்றினால் கூறப்பட்டது.

வைத்தியசாலை உணவகம் கடந்த ஒருவாரத்துக்கும் மேலாகப் பூட்டப்பட்டிருப்பதனால் வைத்தியசாலையில் உள்ள நோயாளர்கள், நோயாளர்களின் உறவினர்கள் மட்டுமன்றி வைத்தியசாலைப் பணியாளர்களும் தேநீர் கூட அருந்த முடியாது அவதிப்படுகின்றனர். குறிப்பாக வைத்தியசாலைக்கு வெளியில் இருந்தே அனைத்துவகை உணவுவகைகளையும் அதிக விலைகொடுத்து வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இலங்கை அரசுக்கு மேலும் அவகாசம் வழுங்கக்கூடாது

### அமெரிக்க அதிகாரிகளிடம் ரவிகரன் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.21

இலங்கைக் எதிராக அடுத்த மாதம் ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்படும் தீர்மான வரைவு, மேலும் கால அவகாசம் வழுங்குவதாக இருக்கக்கூடாதென்று அமெரிக்கத் தூதரக அரசியல் விவகார அதிகாரிகளிடம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகார அதிகாரி மைக்கல் ஏ எர்வினுடன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் சந்திப்பு நடத்தினார்.

**இனப்பரம்பல் மாற்றியமைப்பு**

இந்தச் சந்திப்பில், தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் இனப் பரம்பலை மாற்றியமைக்கும் நோக்குடன் சிங்களக் குடியேற்றங்கள் அரச அதிகாரத்தின் துணையுடன் ஆயுதமுனையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இனப்பரம்பல் மாற்றியமைக்கப்பட்டு விட்டது. தற்போது வடக்கு மாகாணத்தில் காணி சுவீகரிப்பு என்ற பெயரில் பெருமளவு காணிகளும், மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் பெருமளவு காணிகளும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்துக்காக தமிழர்களிடமிருந்து அபகரிக்கப்பட்டுள்ளன.

**குடியேற்றத்துக்கு நீங்களும் காரணம்**

அமெரிக்க அரசினால் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில், இத்தகைய நிலப்பறிப்புக்கள் எதுவும் இடம்பெறவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட பின்னரே நில அபகரிப்புக்கள், குடியேற்றங்கள் என்பன வேகம் பெற்றுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு உதவியவர்களும் இந்தக் குடியேற்றங்கள் தற்போது இடம்பெறுவதற்கு துணைபோனவர்களே.

இலங்கை அரசுக்கு எதிராக கடந்த 2012, 2013 ஆம் ஆண்டுகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அத்துடன் போர் முடிவடைந்து 4 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை அரசுக்கு நல்லிணக்கத்துக்கும் பொறுப்புக் கூறுதலுக்கும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு கால அவகாசத்தை குடியேற்றங்களைச் செய்வதற்கும், நில அபகரிப்பு மேற்கொள்வதற்குமே பயன்படுத்தியுள்ளது.

எனவே இந்த ஆண்டு கொண்டு வரப்படுகின்ற தீர்மானமானது, இலங்கை அரசுக்குக் கால அவகாசத்தை வழங்காமல் பொறுப்புக்கூறலையும், நல்லிணக்கத்தையும் நிறைவேற்றியே தீர வேண்டும் என்று கிடுக்கிப்பிடி கொண்டதாக அமைய வேண்டும் என்று தூதரக அதிகாரிகளிடம் ரவிகரன் வலியுறுத்தியுள்ளார். (த-5)

# போர்க்குற்ற விசாரணைக்கு இந்தியா ஆதரவு

### இந்தியன் ரெலிகிராப் கூறுகிறது

புதுடில்லி,பெப் 21

இலங்கைக்கு எதிரான சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்று அரச ஆதாரங்களை மேற்கோள் காட்டி இந்தியன் ரெலிகிராப் ஊடகம்செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் சர்வதேச விசாரணையைக் கோரும் பிரேரணையை பிரிட்டனும், அமெரிக்காவும் இணைந்து முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**வலுவாகும் கோரிக்கை**

இறுதிக்கட்டப்போரில் இலங்கை இராணுவத்தினரால் போர்க் குற்றங்கள் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படுவது தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை இந்தியா வலியுறுத்தும். எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதால், அதனை இலக்காகக் கொண்டு இந்திய அரசு இவ்வாறு செயற்படும் என்று ரெலிகிராப் குறிப்பிட்டுள்ளது.

பிரிட்டன் உத்தியோகப்பற்ற வகையில் இந்திய அரசுக்கு, இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணைக்கான அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது. இந்த நிலையில் பிராந்திய வல்லரசான இந்தியாவின் ஆதரவானது சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையை மேலும் வலுவானதாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**அரசியல் முக்கியம்**

இந்திய அரசைப் பொறுத்தவரையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்த நிலையில் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக இந்திய அரசு, கொழும்புடனான உறவைவிட அரசியல் நிலைப்பாடுகளையே முக்கியமாக எடுத்துக்கொள்ளும்.

ஏற்கனவே கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் புறக்கணித்திருந்தார். தமிழகக் கட்சிகளின் [illegible] எடுத்[illegible]தார். இலங்கையின் இறு[illegible] பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்ற எண்ண அலை, தமிழர்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றது.

இதனால் அரசியல் நலனை முன்னிறுத்தி இந்தியா, சர்வதேச விசாரணையை இலங்கைக்கு எதிராகக் கோரும் என்று இந்திய அரசின் முக்கியஸ்தரை மேற்கோள்காட்டி ரெலிகிராப் செய்தி வெளியிட்டுள்ளது. (த-5)

# மீண்டும் உ.கிழங்கை வாங்க சம்மதம் தெரிவித்தது சதொச

## நாளைமுதல் கொள்வனவு ஆரம்பம்

யாழ்ப்பாணம்.பெப்.21
விற்பனைக்குத் தயாராக இருக்கும் 45 வீதமான உள்ளூர் ரெட்லேடி இன உருளைக் கிழங்கை மீண்டும் கொள்வனவு செய்வதற்கு சதொச நிறுவனம் உடன்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு விற்பனைக் கூட்டுறவுச் சம்மேளனத் தலைவர் ச.தெய்வேந்திரம் தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உள்ளூர் ரெட்லேடி இன உருளைக் கிழங்கை சந்தைப்படுத்த முடியாத நிலையை விவசாயிகள் எதிர்கொண்டு வந்த நிலையில் சதொச நிறுவனம் ஒரு கிலோ உருளைக் கிழங்கை 70 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதற்கு உடன்பட்டதை அடுத்து 74 ஆயிரம் கிலோ கிராம் உருளைக்கிழங்கை மட்டுமே இதுவரை கொள்வனவு செய்தது. எனினும் சதொச நிறுவனத்தில் கொள்வனவு செய்யப்பட்ட உருளைக்கிழங்குகள் தேக்கம் அடைந்ததை அடுத்து கொள்வனவை இடை நிறுத்தி இருந்தது.

இந்த நிலையில் இன்னும் 20 தினங்களுக்குள் கிழங்கை அறுவடை செய்ய வேண்டி இருப்பதுடன் 45 வீதமானவை இன்னும் அறுவடை செய்ய வேண்டியுள்ளது. இது தொடர்பாக விவசாயத் திணைக்களத்துக்கு தெரியப்படுத்தியதை அடுத்து கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக பிரதி அமைச்சர் ஹெமால் குணசேகர, வட மாகாண சபை உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் நேரடியாக யாழ் மாவட்ட உருளைக்கிழங்கு விவசாயிகளைச் சந்தித்து நேற்று கலந்துரையாடினர். அதை அடுத்து மீண்டும் உருளைக்கிழங்கை கொள்வனவு செய்வதற்கு உடன்பட்டுள்ளனர்



விவசாயிகளுடனான சந்திப்பில் வட மாகாண சபை உறுப்பினர் அங்கஜன் மற்றும் உள்நாட்டு வர்த்தக பிரதி அமைச்சர் ஹெமால் குணசேகர

நாளை சனிக்கிழமை தொடக்கம் மீண்டும் உருளைக் கிழங்கு விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும்"- என்றார்.

இதேவேளை சதொச நிறுவனத்தின் செயற்பாட்டை பார்வையிட்ட பிரதி அமைச்சர், "இங்கு ஒழுங்கான நடைமுறைகள் மற்றும் சுத்தம் பேணப்படாமை மற்றும் கணக்கின் நிலுவை, களஞ்சிய வரவு, செலவு நிலுவைகள் சீராகப் பேணப்படாமை தொடர்பில் அங்குள்ள முகாமையாளரிடம் கேள்விகளை எழுப்பினார்.

மேலும் இரண்டு மணித்தியாலங்களுக்குள் 'மக்கள் இலகுவாக பெறக் கூடிய வகையில் பொருள்களை ஒழுங்கமைத்து வைப்பதுடன் வர்த்தக நிறுவனத்தை சுத்தப்படுத்தி வைத்திருக்குமாறும் தாம் மீண்டும் வந்து பார்வையிட்டுச் செல்வேன் எனவும் உத்தரவிட்டுச் சென்றார். (வ-14)

## சட்டவிரோத மீன்பிடி மாட்டினார் மீனவர்

வலி.தென்மேற்கு, பெப்.21
கொக்கிளாய் கடல் நீரேரியில் தடை செய்யப்பட்ட முக்கூட்டு வலையைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த கடற்றொழிலாளர் ஒருவர் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

வலைகளைக் கைப்பற்றிய அதிகாரிகள் மீனவரைக் கைது செய்து முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். நீதி வான் அவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் வலையை அழிக்கும் படியும் உத்தரவிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் கடல் நீரேரியில் மீன் உற்பத்திக்கும், வளர்ச்சிக்கும் இடையூறாக இருக் கும் தடைசெய்யப்பட்டவலைகளைப் பயன்படுத்த வேண் டாம்என்று அதிகாரிகளால் ஏற்கனவே அறிவிக்கப்பட் டுள்ளது.

இந்த நிலையில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்கப்படுவதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து முல்லை மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் த.பிரபாகரன் தலைமையில் சென்ற அதிகாரிகள் கொக்கி ளாய் கடல் நீரேரியைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தியபோது தடை செய்யப்பட்ட முக்கூட்டு வலையைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குறித்த மீனவர் அகப்பட்டார்.

அவரை கையும் மெய்யுமாகப் பிடித்த அதிகாரிகள் அவர் பயன்படுத்திய முக்கூட்டு வலையையும் கடலேரியில் அநாதரவான நிலையிலிருந்த முக்கூட்டு வலைத் தொகுதியையும் கைப்பற்றி முல்லைத்தீவு நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தி னர்.

இதேவேளை தடைசெய்யப்பட்டுள்ள வலைகளைப் பயன்படுத்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும் என்று நீரியல் வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ-115)

## பசு வதையை இலங்கையில் முற்றாகத் தடை செய்யுங்கள்

### ஜனாதிபதிக்கு சமய நிறுவனங்களின் இணையம் கடிதம்

யாழ்ப்பாணம் பெப்.21
இலங்கையில் பசுவதையை முற்றாகத் தடை செய்யக் கோரி, பசுக்கள் இடங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை மேற்படி இணையம், ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத் துள்ளது. அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் சுதேச சிங்கள, தமிழ் பண்பாடு, கலாசாரங்களின்படி இலங்கைத் தீவில் பசுவதை என்பது எக்காலத்திலும் இருந்தது இல்லை. வெளிநாட்டுப் படையெடுப்புக்கள், கலாசார ஊடுருவல்களினாலேயே பசுவதை செய்தல், மாட்டிறைச்சி உண்ணல் பழக்கம் இலங்கையில் ஏற்பட்டுள்ளது.

பாதிப்புக்கள்

கொடிய பாவம் இலங்கை மாதாவைச் சூழ்ந்து இலங்கைத் தீவின் புனிதம் கெட்டுப் போகின்றது. பூரண நிறையுணவாகிய பாலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு இலங்கை மக்களின் ஆரோக்கியம் கெட்டு நோயாளிகள் ஆகின்றனர். இறக்கின்றனர்.

நிறையுணவாகிய பாலுக்காக வெளிநாடுகளிடம் இருந்து பாலுணவை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. அந்நிய செலாவணி வீணாகின்றது.

மனித உடலுக்குத் தீங்கில்லாத இயற்கைப் பசளையாகிய மாட்டெரு பற்றாக்குறையால் இரசாயன உரப் பாவனை அதிகரித்து குடிதண்ணீரும் விவசாய உற்பத்திப் பொருள்களும், நச்சுத்தன்மையை அடைந்து இலங்கை மக்கள் ஆரோக்கியம் கெட்டு நோயாளிகள் ஆகின்றனர். இறக்கின்றனர்.

விவசாயிகள் பசளைத் தேவைக்காக வெளி நாடுகளிலிருந்து இரசாயன உரங் களை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. அந்நியசெலாவணிவீணாகின்றது.

இலங்கையின் பௌத்த, இந்து சமயங்களும் வழிபாட்டு முறைகளும் சீரழிக்கப்பட்டு அவமதிக்கப்படுகின்றார்கள்.

எனவே, இலங்கைத்தீவின் 70 வீத பௌத்த சிங்கள மக்களும், 15 வீதமான தமிழ் மக்களுமான மொத்தம் 85 வீதமான மக்களது கோரிக்கைக்கு - மதிப்பளித்து உடனடியாக பசுவதை செய்தலையும் மாடுகளைக் கொல்வதையும் முற்றாகத் தடைசெய்து உத வுமாறு வேண்டுகின்றோம். பசு வதைக்கான தண்டனையையும் அதிகரிக்குமாறு வேண் டுகின்றோம்.

2014 ஆம் ஆண்டு சிவராத்திரி விரத பிரார்த்தனையாக இந்த வருடம் இந்துக்களால் பசுவதையை தடை செய்தலை முன்னெடுக்கின்றோம். பசுவதையைத் தடைசெய்வது தொடர்பாக ஆன்மிக ரீதியான அடையாள உண்ணா நோன்பையும் மேற்கொள்ளவுள்ளோம் - என்றுள்ளது. (ஓ)

## வடக்கில் அமெ. அபிவிருத்திப் பணிகள்; நிராகரித்த திட்டம் மீள் பரிசீலனைக்கு

யாழ்ப்பாணம்.பெப்.21
அமெரிக்க அரசால் வடக்கில் மூன்று பாடசாலைகள் புனரமைப்புச் செய்ய முன்னெடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு வடக்கு மாகாண சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்த நிலையில், மேற்படி திட்டத்தை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இலங்கை அரச உயர் அதிகாரிகளை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்க உதவி

கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம் மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி பாடசாலை, மன்னார் மாவட்டத்தில் முசலி மகா வித்தியாலயம் ஆகியவற்றை முழுமையான வசதிகளுடன் புனரமைக்க அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடம் முன்வந்திருந்தது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சால், மத்திய கல்வி அமைச்சின் அனுமதிக்காக அனுப்பப்பட்ட இந்த யோசனையை, கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார். ஆனால், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டு வர முடிவு செய்திருந்த பின்னணியில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தத் திட்டத்தை அமைச்சரவையில் நிராகரித்திருந்தார்.

அமெரிக்க பசுபிக் கட்டளைப் பீடத்தால் முன்வைக்கப்பட்ட மூன்று பாடசாலைகளை நவீன வசதிகள் கொண்டதாக புனரமைக்கும் இந்தத் திட்டம், இருமுனை நோக்கம் கொண்டதாகும். அடிப்படையில் இது கல்வி நோக்கம் கொண்டதாக இருந்தாலும், தேசியப் பேரிடர் ஏதேனும் நிகழ்ந்தால், நூற்றுக்கணக் கானோருக்குப் புகலிடம் வழங்கும் நலன்புரி நிலையமாகவும் இதனைப் பயன் படுத்தலாம்.

மீள நடைமுறைப்படுத்தல்

நாடு கடந்த மனிதாபிமான இடர் உதவித் திட்டத்தின் கீழ் இந்த உதவியை வழங்க பசுபிக் கட்டளைப் பீடம் முடிவு செய்திருந்தது.

அமைச்சரவையால் குறித்த திட்டம் நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் கடந்த 18 ஆம் திகதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், அமெரிக்கத் தூதரகம் மற்றும் இலங்கை அரசுக்கு அவற்றை அனுப்பி வைப்பது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் நிராகரிக்கப்பட்ட மேற்படி திட்டத்தை மீளவும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள இலங்கை அமைச்சரவை தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## நடமாடும் சேவை

ஆவணத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற் கான இலவச நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை யாழ்.பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்டுள்ள மக்களில் இதுவரை தமது பிறப்பு, இறப்பு பதிவுகளுக்குட்படுத்தாது இருப்பவர்களுக்கும் இந்தப் பதிவுகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்பவர்களுக்கும் பிறப்புச் சான்றிதழ்களில் திருத்தங்களை மேற்கொள்ள விரும்புபவர்களுக்கும் தேசிய அடையாள அட்டைக்குமான இந்த நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

சர்வோதய நீதிச்சேவை இயக்கத்தின் அனுசரணையுடன் இலவச சேவையாக இந்த நடமாடும் சேவை நடை பெறும் என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஓ)

## 'புகை எமது வாழ்வுக்கு பகை' விழிப்புணர்வுப் பேரணி இன்று

வலி .வடக்கு, பெப். 21
தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, உடுவில் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி பணிமனை என்பன இணைந்து சுகாதார அமைச்சின் நூற்றியொரு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு 'புகை எமது வாழ்வுக்கு பகை' என்னும் தொனிப் பொருளில் விழிப்புணர்வுப் பேரணிஒன்றைநடத்தவுள்ளன.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்துக்கு முன்னால் உள்ள தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்வுள்ள விழிப்புணர்வுப் பேரணி மல்லாகம் சந்தியில் நிறைவடையும். அதனைத் தொடர்ந்து மல்லாகம் சந்தியில் இருந்து உடுவில் பிரதேச சுகாதார வைத்திய திகாரி தலைமையிலான குழு வினர் சுன்னாகம் பஸ் நிலையம் வரை இந்த விழிப்புணர் வுப் பேரணியைத் தொடர்ந்து நடத்தவுள்ளனர்.

விழிப்புணர்வுப் பேரணியில் தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலகங்களின் அலுவலர்கள் மற்றும் பிரதேச சபைகளின் அலுவலர்கள் உட்பட பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் எனப் பலரும் கலந்து கொள்ள வுள்ளனர்.

குறிப்பாக சிவதொண்டர் அமைப்புகள் மற்றும் சிவ மங்கையர் கழக அமைப்புக்களும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-86)

# எனது பெற்றோரை மன்னித்து விடுங்கள்

*ராகுலுக்கு நளினியின் மகள் கோரிக்கை*

சென்னை, பெப்.21
எனது பெற்றோரை மன் னித்து விடுங்கள் என்று முருகன்-நளினியின் மகள் அரித்ரா, ராகுல் காந்திக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

ராஜிவ்காந்தி கொலை வழக்கு கைதிகள் சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ராபர்ட் பயஸ், ஜெயகுமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேரும் விடுதலை செய்யப் படுவார்கள் என்று நேற்று முன்தினம் சட்டசபையில் முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்தார்.

மத்திய அரசு 3 தினங்களுக்குள் தனது கருத்தை தெரிவிக்காவிட்டால் மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறியிருந்தார்.

முதல்வர் ஜெயலலிதாவின் இந்த அறிவிப்புக்கு காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

**தற்போதும் நான் எனது பெற்றோர்களுடன் இருக்க விரும்புகிறேன். அவர்கள் குற்றம் செய்திருந்தாலும் அதற்கான தண்டனையை போதுமான அளவு அனுபவித்து விட்டனர்.**



அரித்ரா

இந்தநிலையில் தனது பெற்றோரை மன்னித்து விடுமாறு காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்திக்கு முருகன், நளினி தம்பதியினரின் மகள் அரித்ரா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து தனியார் செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில்,

"ராகுல் காந்தியிடம் மிகவும் வருந்திமன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் விரும் பிய ஒருவரின் இழப்பை என்னால் புரிந்து கொள்ளமுடியும். எனது பெற்றோர்கள் மன் னிக்கப்பட போதுமான தகுதி கொண்டுள்ளனர்.என் பெற்றோருக்கு கொடுக்கப்பட்ட தண்டனையால் நான் பாதிக்கப்பட்டேன். எனது பெற்றோர்கள் உயிருடன் இருந்தும், அவர்களுடன் நான் இருந்ததில்லை. தற்போதும் நான் எனது பெற்றோர்களுடன் இருக்க விரும்புகிறேன். அவர்கள் குற்றம் செய்திருந்தாலும் அதற்கான தண்டனையை போதுமான அளவு அனுபவித்து விட்டனர். தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்தான் இதனைச் சாதித்துள்ளார். நான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்பதை என்னால் வெளிப்படுத்த முடியவில்லை. எனது பெற்றோர்கள் கண்டிப்பாக ஒருநாள் வெளியே வருவார்கள் என்று எனக்குத் தெரியும். அவர்கள் நிரபராதிகள்"-என்று மனமுருகினார். (வ)

## இரணைமடு குடி தண்ணீர் விநியோக அறிக்கை விரைவில்

*வடக்கு முதல்வர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப்.21
கிளிநொச்சி - யாழ்ப்பாணம் குடி தண்ணீர் விநியோக திட்டம் தொடர்பான நிபுணர் குழு அறிக்கை என்னிடம் கிடைத்துள்ளது. அதனை ஆய்வு செய்து விரைவில் வெளியிடுவேன். இவ்வாறு நேற்று கிளிநொச்சியில் தெரிவித்தார். வட மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.

கிளிநொச்சியில் முதலமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் குடி தண்ணீர் விநியோகத் திட்டம் தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை தற்போது எனக்கு கிடைத்துள்ளது. அதனை ஆய்வு செய்து விரைவில் வெளியிடவுள்ளேன் என்றார்.

அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் குறித்து அவர் எதனையும் கூறவில்லை. (ஜ-55)

## லைசோல் அருந்தியவர் சாவு

யாழ்ப்பாணம், பெப்.21
பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் மன நிலை பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் அங்கு வைக்கப்பட்டிருந்த லைசோல் மருந்தை உட்கொண்டு உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

சம்பவத்தில் கற்கோவளத்தைச் சேர்ந்த எஸ்.சுப்பிரமணியம் (வயது - 50) என்பவரே உயிரிழந்துள்ளார். சம்பவ தினம் மனநோயாளர் விடுதியில் வைக்கப்பட்டிருந்த லைசோலை அவர் அருந்தியுள்ளார் என்றும் வைத்திய சாலை ஊழியர்களின் அசட்டையால் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஜ-288,173)

## மூவரின் விடுதலை குறித்து ராகுல் காந்தி அதிருப்தி

சென்னை, பெப்.21
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்ட வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி உள்ளிட்ட ஏழுபேர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற தமிழக அரசின் அறிவிப்பு குறித்து ராகுல் காந்தி அதிருப்தி வெளியிட் டுள்ளார்.

ராஜிவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற 7 பேரை விடுதலை செய்ய தமிழக அமைச்சரவையில்நேற்று முன்தினம் தீர்மானிக்கப் பட்டது.

இதற்கு காங்கிரஸ் கட்சியினர் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர். இது குறித்து அமேதி தொகுதியில் பரப்புரை மேற்கொண்டுள்ள காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி கூறுகையில்,

"நான் தூக்குத் தண்டனைக்கு எதிரானவன். தூக்குத் தண்டனை விதிப்பதால், என் தந்தையும் திரும்ப வரப் போவது இல்லை. ஆனால், ஒரு நாட்டின் பிரதமரைக் கொன்றவர்களையே தண்டிக்காமல் விட்டால் பின்னர் சாதாரண மக்கள் அரசிடம் இருந்து நீதியை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

ராஜீவ் காந்தி என் தந்தை என்பதற்காக இதை நான் சொல்லவில்லை. நாட்டின் நலனுக்காக மட்டுமே சொல்கிறேன். ஏனெனில், சட்டம் அனைவருக்கும் பொதுவானது. இதை நான் உங்கள் முடிவுக்கே விடுகிறேன்" - என் றார். (வ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.21
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடக்கு மாகாணத்தில் உள்ள சகல எரிபொருள் விற்பனை நிலைய முகவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சகல எரிபொருள் விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

## கிளிநொச்சியில் தமிழ்ப் பெண்களை இராணுவத்தில் இணைய வற்புறுத்தல்

*முதலமைச்சர், அமைச்சரிடம் மக்கள் முறையீடு*

கிளிநொச்சி, பெப்.21
கிளிநொச்சி, வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் வீடுகளுக்கு செல்லும் இராணுவத்தினர் அங்குள்ள பெண்களை குறிப்பாக யுவதிகளை தொண்டர் படை அணியில் சேருமாறு வற்புறுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் வீதிகளில் செல்லும் யுவதிகளை மறித்தும் அவர்களின் பெயர் விபரங்களை பெற்றுக் கொண்டு இராணுவத்தில் இணையுமாறு வற்புறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இந்த சம்பவம் குறித்து வட மாகாண முதலமைச்சர் மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோரிடம் அப்பகுதி மக்கள் நேற்று முறையிட்டனர்.

தாம் வீடுகளில் பெண் பிள்ளைகளை வைத்திருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் எனவே இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் முதலமைச்சர் மற்றும் அமைச்சரிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்திலும் தொண்டர் படையணியில் இணையுமாறு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (ஜ-55-400)


## மரண அறிவித்தல்

திருமதி **மீனாட்சி சங்கரன்**



நவபுரம் கைதடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சி சங்கரன் (20.02.2014) வியாழக் கிழமை காலை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னவன் - பறுவதம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற சி.சங்கரனின் (மாம்பழம்) அன்புமனைவியும் காலஞ் சென்ற சின்னவன் - முதலியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ச.தங்கராசா (பிரதேசசபை உறுப்பினர் சாவகச்சேரி) காலஞ் சென்ற ச.சிங்கராசா - மணி (வர்த்தகர்) மற்றும் ச.தம்பிராசா (மின்சாரசபை யாழ்ப்பாணம்), திருமதி அரியரத்தினம் புஸ்பராணி, திருமதி சிறீஸ்கந்தராசா தங்கராணி (பாப்பா), திருமதி பஞ்சலிங்கம் இந்திராணி (ரதி), ச.தவேந்திரன் (நவம் - ஜேர்மனி) ஆகியோரின் அருமைத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நவபுரம், கைதடி.**
**தொ.பே. 077 4737483**

தகவல் :
குடும்பத்தினர்


## இலங்கை கொள்ளைக் குழு இத்தாலியில் கைது

இலங்கையர்கள் எட்டுப் பேரை உள்ளடக்கிய கொள்ளையில் ஈடுபடும் குழுவொன்றை இத்தாலி பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இத்தாலியின் சிசிலியே மெஷினா நகரின் கெரப்னோரி பொலிஸார் அவர்களைக் கைது செய்துள்ளனர்.

சிசிலியே நகரை கேந்திர நிலையமாகக் கொண்டு இந்தக் கொள்ளைக்குழு இயங்கி வந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கொள்ளையிடப் பயன்படுத்தப்பட்ட கத்தி, இரும்புக் கம்பி என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டு இந்தக் கொள்ளைக் குழுவினர் மெஷினா நகரில் இலங்கையர் ஒருவரைக் கடுமையாகத் தாக்கி அவரிடம் இருந்து பணம் மற்றும் பொருள்களைக் கொள்ளையிட்டதாக முதல் முறையாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. (வ)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



வைகோ

## என்ன பேசுகிறோம் என்பதையே அறியாதவர்

*ராகுல் மீது வைகோ காட்டம்*

மதுரை, பெப்.21
என்ன பேசுகிறோம், என்ன செய்கிறோம் என்பதை அறியாமலேயே ராகுல் காந்தி உள்ளார் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரின் தூக்கு தண்டனையை, ஆயுள் தண்டனையாக குறைத்து உச்ச நீதி மன்றம் உத்தரவிட்டது. மேலும் அவர்களை விடுதலை செய்வது குறித்து மாநில அரசு முடிவெடுக்கலாம் என்றும் தீர்ப்பளித்தது.

அதையடுத்து மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டு சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி உள்பட 7 பேர் விடுதலை செய்யப்படுவார்கள் என்று முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் சட்டசபையில் அறிவித்தார். தமிழக அரசின் இந்த அறிவிப்புக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் தமிழ் ஆர்வலர்களும் பாராட்டுத் தெரிவித்தனர். இந்நிலையில் தமிழக அரசின் இந்த முடிவுக்கு காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். (வ)

# செயற்கைமுறை சினைப்படுத்தலுக்கு மேலதிக கட்டணம் செலுத்த வேண்டாம்

### கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் மக்களுக்கு அறிவுறுத்து

அச்சுவேலி, பெப்.21

"கால்நடைகளுக்கான செயற்கை முறைச் சினைப்படுத்தலுக்கு 50 ரூபா மட்டும் செலுத்தி அவற்றுக்கான பற்றுச் சீட்டையும் பெற்றுக் கொள்ளுங்கள். அவ்வாறு உத்தியோக பூர்வமாக பற்றுச்சீட்டு வழங்கப்படாமல் மேலதிக கட்டணம் அறவிட முயன்றால் அது தொடர்பாக அறியத்தரவும்" என்று யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்த லிங்கம் அறிவித்துள்ளார்.

இது குறித்து பணிப்பாளர் மேலும் தகவல் தெரிவிக்கையில்:

"கால்நடை வளர்ப்போரின் வசதியைக் கருத்தில் கொண்டும், பாலின் உற்பத்தி அளவை மேம்படுத்துவதற்கும் அரசு பல்வேறு நல உதவித்திட்டங்களையும், மானிய உதவிகளையும் நடை முறைப்படுத்தி வருகின்றது. அத்துடன் அவற்றைச் சீரான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கால்நடை வைத்திய அதிகாரிகளுக்கு வாகன வசதி மற்றும் மேலதிக கொடுப்பனவுகளையும் மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக அரசு வழங்கிவருகின்றது. இந்த நிலையில் ஆடு, மாடு வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்களிடம் மேலதிக அறவீடுகளை மேற்கொள்வது சட்ட விரோதமான செயற்பாடாகும்.

யாழ்.மாவட்டத்தில் பண்ணையாளர்களிடமும் ஆடு, மாடு வளர்ப்போரிடமும் மேலதிகமான அறவீடுகள் மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்தவகையான குறைபாடுகள் தொடர்பாக திருநெல்வேலியில் உள்ள எமது அலுவலகத்துக்கு கடித மூலமோ அல்லது 021-2222387 இலக்க தொலைபேசி மூலமோ தொடர்பு கொண்டு அறியத்தரலாம்.

செயற்கை முறைச் சினைப்படுத்தலுக்கு உரிய "உறை நிலை" விந்துக்கான மானிய கட்டணமாக 50 ரூபா மட்டும் செலுத்தவும். நிரந்தர நியமனம் உள்ள அலுவலர்களுக்குப் புறம்பாக தொண்டு நிலையிலும், ஓய்வு நிலையிலும் சிலர் செயற்கை முறைச் சினைப்படுத்தல் வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். எனவே ஆடு, மாடு வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் தமது சுய விருப்ப அடிப்படையில் உதவினாலும், நிரந்தர சேவையில் உள்ள அலுவலர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் உதவிகளை வழங்க வேண்டியது இல்லை - என்றார். (வ-11)

## சந்தேகத்துக்கிடமாக நடமாடிய தந்தையும் மகனும் மறியலில்

சண்டிலிப்பாய், மாசியப்பிட்டி பகுதியில் அதிகாலை நேரம் குறடு, கப்பிளின் சாவி உள்ளிட்ட பொருள்களுடன் நடமாடிய தந்தையும் மகனும் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய் அதிகாலை 3.30மணி யளவில் இருவரும் நடமாடித் திரிந்தபோதே இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இருவரும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர்கள். விசாரணையின் போது ஓரிடத்தில் திருடிய சைக்கிளையே அவர்கள் வைத்திருந்துள்ளனர் என்று தெரியவந்தது.

அதிகாலை நேரம் அவர்கள் அவ்வாறு குறடு, ஸ்குறுட்ரைவர், கப்பிளின் சாவி என்பவற்றை வைத்திருந்ததற்கான காரணம் தொடர்பில் விசா ரணை மேற்கொண்டபோது அவர்கள் உரிய பதில் வழங்கியிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## இத்தாவில் சந்திக்குரிய பெயர்ப்பலகை நடப்படுமா?

பளை, பெப்.21

ஏ-9 வீதியில் இத்தாவில் சந்திக்குரிய பெயர்ப்பலகை இல்லாததால் வாகனங்களில் வருவோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எழுதுமட்டுவாழ் தொடக்கம் இத்தாவில் சந்திவரை ஏ-9 வீதியின் இரு மருங்கிலும் குடியிருப்புகள் இல்லாததால் ஒரே பற்றைக் காடாகக் காணப்படுகிறது.

இதனால் வாகனங்களில் பயணிப்போர் இடம்தெரியாமல் ஒரு மைல் தூரத்துக்கு அப்பால் உள்ள கச்சாய் வெளிச் சந்தியில் இறங்கி நடந்து வரவேண்டியுள்ளது.

ஏ-9 வீதியில் பிரிவு எல்லைப் பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டுள்ள போதிலும் இத்தாவில் பிரிவுக்கு பெயர்ப் பலகை வைக்கப்படாதது குறித்துக் கவலை தெரிவிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் உள்ள பாடசாலையில் கடமை புரியும் ஆசிரியர்கள் பெரும்பாலான நாள்களில் ஒரு மைலுக்கு அப்பால் இறங்கி நடந்து வந்த தாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# விவசாயிகளுக்கு லாண்ட்மாஸ்டர் விவசாய அமைச்சு வழங்கியது

### 10 நீரிறைக்கும் இயந்திரங்களும் கையளிப்பு

யாழ்ப்பாணம்.பெப்.21

யாழ்.மாவட்ட செவிப்புலன் வலுவுற்றோர்களின் விவசாய செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் வடமாகாண விவசாய அமைச்சால் லாண்ட் மாஸ்டர் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

விவசாய அமைச்சின் நிதியிலிருந்து 7 இலட்சத்து 84 ஆயிரத்து 500 ரூபா இதற்கெனச் செலவிடப்பட்டுள்ளது.

4 இலட்சம் 24 ஆயிரத்து 500 பெறுமதியான லான்ட்மாஸ்டர் ஒன்றும் தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்குஒவ்வொன்றும் 36 ஆயிரம் பெறு மதியான 10 தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட செவிப்புலனற்றோர்கள் இணைந்து தமது அமைப்பின் ஊடாக விவசாயப்பண்ணை அமைத்து சிறு தொழில் முயற்சியை மேற்கொண்டு வரும் நிலையில் அதை இலகுபடுத்துவதற்கு ஏதுவாக வட மாகண விவசாய அமைச்சிடம் லாண்ட் மாஸ்டர் கோரிவிண்ணப்பித்திருந்தனர். அதனடிப்படையில் இந்த லாண்ட் மாஸ்டர் வழங்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை, பயனாளிகள் நிலத்தைப் பண்படுத்தவும், உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத் துவதற்கும் இந்த லாண்ட்மாஸ்டர் பயனளித்துள்ளது என்று யாழ்.செவிப்புலனற்றோர் சங்கத்தின் ஆலோசகர் செல்வரஞ்சன் தெரிவித்தார்.

இதனைவிட யாழ்.மாவட்டம் மற்றும் வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த 10 பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.



பயனாளி ஒருவரிடம் லான்ட்மாஸ்டரைக் கையளிக்கிறார் விவசாய அமைச்சர்.

வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பயனாளிகளுக்கு லாண்ட் மாஸ்டரைக் கையளித்தார். வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் யு. எல்.எம் ஹால்தீன், கைதடி நவீல்ட் பாடசாலையின் அதிபர் மகேந்திரன் மற்றும் விவ சாயத் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டு லான்ட் மாஸ்டரையும் நீரிறைக்கும் இயந்திரங்களையும் பயனாளிகளுக்கு வழங்கினர். (வ-14)

## கால்நடை அபிவிருத்தி கூ. சங்கம் இன்று ஆரம்பம்

ஊர்காவற்றுறை,பெப்.21

ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவில் புதிதாக கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்துவைக்கப்படும் என்று ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் தெரிவித்தார்.

இன்று முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இதற்கான கூட்டம் இடம்பெறும். யாழ்.கூட்டுறவு உதவி ஆணையாளர் மற்றும் கால்நடை வளர்ப்போர் இதில் கலந்து கொள்வர்.

இதேவேளை ஊர்காவற்றுறைப் பகுதியில் கால்நடை வைத்திய நிலையம் ஒன்றும் விரைவில் திறந்து வைக்கப் படவுள்ளது. (ஒ-7)


## வைத்திய அத்தியட்சகரின் விடுதி உடைத்து கைபேசி திருட்டு

வலி .வடக்கு, பெப். 21

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் வைத்திய அத்தியட்சகரின் விடுதியை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்து சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி மற்றும் ஐபாட் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

மருத்துவர் எம். உமாசங்கர் நேற்று முன்தினம் நண்பகல் விடுதிக்குச் சென்று விட்டு வைத்தியசாலைக்கு திரும்பி வந்த பின்னர் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறையிடப் பட்டுள்ளது.

ஏற்கெனவே விடுதிக்கு அண்மையாகவுள்ள புற்று நோய் வைத்தியசாலையில் நோயாளர்களின் பாவனைக்கு வைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டிதிருடப்பட்டிருந்தது (வ-86)



யாழ்.பண்ணைப் பாலத்தில் இருந்து அல்லைப்பிட்டி வரையான பகுதிகளில் 'காப்பெற்' வீதி அமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மண்டைதீவு சந்திக்கு அருகில் வீதி அகலிப்பு வேலைகள் இடம்பெறுவதைக் காணலாம். (ஒ-7)

# செம்மணிப் பகுதியில் எரிபொருள் நிலையம்

### நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.21

நல்லூர், செம்மணி பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை அமைக்கக் கோரும் தீர்மானம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.


யாழ்.கண்டி வீதி செம்மணி வீதிச் சந்தியில் படையினர் தங்கியிருந்த பகுதி தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை அமைப்பதால் வாகனங்களுக்கு இலகுவான முறையில் எரிபொருள் நிரப்ப முடியும் என்பதுடன் வேலை வாய்ப்பற்றோரின் தேவைகளையும் ஓரளவு பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்.

பிரதேச சபையும் அதனூடாக போதிய வருமானம் பெறக் கூடியதாக இருக்கும் என்பதால் இது தொடர்பான பிரேரணையைச் சமர்ப்பிப்பதாக உறுப்பினர் கி.தருமரட்ணம் தெரிவித்தார்.

பிரேரணையை ஏகமனதாக ஏற்றுக்கொள்வதாக உறுப்பினர் கள் தெரிவித்தனர். அதை அடுத்து இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்று தவிசாளர் குறிப்பிட்டார். (வ-7)

# 210 மில்.ரூபா செலவில் பாடசாலைக்கு கட்டடம்

பளை வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலைக்கு 210 மில்லியன் ரூபா செலவில் இரு மாடி வகுப்பறைத் தொகுதிகள் உட்பட கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நாட்டில் அசாதாரண நிலை ஏற்பட்ட காலத்தில் பாடசாலையின் கட்டடங்கள் அனைத் தும் தரை மட்டமாகியிருந்தன. கடந்த 2012 ஆம் ஆண்டு இத்தாவில் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்ததையடுத்து போரூட் நிறுவனத்தினரால் தற்காலிக கொட்டில்கள் அமைக்கப்பட்டுவகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த நிலையில் சுவிஸ் அபிவிருத் திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தின் உதவியுடன் இருமாடிவகுப்பறைத் தொகுதி, சமையலறை, பாதுகாப்பு அறை, கழிப்பறைத் தொகுதி போன்றவை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்தவருடம்கட்டட வேலைகள் பூர்த்தி செய் யப்பட்டு வகுப்பறைத்தொகுதிகையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)



அமைக்கப்பட்டு வரும் கட்டடத்தின் தோற்றம்

## அ.தி.மு.கவில் இணைந்தார் பண்ருட்டி ராமச்சந்திரன்

சென்னை, பெப்.21

தே.மு.தி.கவில் இருந்து விலகிய தமிழக சட்டசபையின் முன்னாள் உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரன் முதலமைச்சர் ஜெயலலிதா முன்னிலையில் அதிமுகவில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.கவில் அவைத் தலைவராக இருந்த பண்ருட்டிராமச்சந்திரன் அண்மையில் சட்டசபை உறுப்பினர் பதவியில் இருந்து விலகிய தோடு அரசியலில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார். அதனிடையே அண்மையில் பண்ருட்டி ராமச்சந்திரனுக்கு அண்ணா விருது வழங்கி முதல்வர் ஜெயலலிதா கௌரவித்தார்.

இந்நிலையில், முதலமைச்சர் ஜெயலலிதாவை நேற்று பண்ருட்டிராமச்சந்திரன் நேரில் சந்தித்து தம்மை அ.தி.மு.கவில் இணைத்துக் கொண்டுள்ளார். (ந)

# தெலுங்கானா விவகாரத்தால் கொந்தளிக்கின்றது ஆந்திரா

## குடியரசு தலைவர் ஆட்சி அமைக்கப்படலாம்

புதுடில்லி, பெப்.21

தெலுங்கானா சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆந்திராவின் சீமாந்திரா பகுதியில் கடும் கொந்தளிப்பான சூழல் உருவாகியுள்ளது.

அங்கு தொடர் எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்று வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சீமாந்திரா பகுதியைச் சேர்ந்த ஆந்திர முதலமைச்சர் கிரண்குமார் ரெட்டியும் தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

இந்த நிலையில் ஆந்திர மாநில அரசியல் நிலைவரம் குறித்து ஆளுநர் தனது அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளார். அதேநேரத்தில் அடுத்த அரசு அமையும் வரை காபந்து முதல்வராக நீடிக்கும்படி கிரண் குமார் ரெட்டியை ஆளுநர் கேட்கவில்லை என்று ஆளுநர் மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



தெலுங்கானா மாநிலம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பதவி விலகிய ஆந்திர முதலமைச்சர் கிரண்குமார் ரெட்டி தனது பதவி விலகலுக்கான கடிதத்தை ஆளுநர் நரசிம்மனிடம் கையளித்தார்.

கடலோர ஆந்திரா மற்றும் ராயலசீமா பகுதியைச் சேர்ந்த சில காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே தங்கள் பதவிகளில் இருந்து விலகப் போகின்றோம் என்று அறிவித்துள்ளதால் புதிய அரசு அமைப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் ஆந்திராவில் குடியரசுத்தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்துவதற்கே அதிக அளவு வாய்ப்புக்கள் உள்ளன என்று கூறப்படுகின்றது. (ந)

## மதவாத சக்திகளுடன் கூட்டணி வேண்டாம்

### தே.மு.தி.கவிடம் கோருகின்றார் திருமா

சென்னை, பெப்.21

மதவாத சக்திகளுடனும், சாதி அடிப்படைச் சக்திகளுடனும் தே.மு. தி.க. தலைவர் விஜயகாந்த் கூட்டணி சேரக் கூடாது என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாரதிய ஜனதாவின் ஆட்சி மத்தியில் அமையாமல் தடுக்க எத்தனை கட்சிகளை தி.மு.க. கூட்டணிக்கு அழைத்தாலும் அவற்றை விடுதலை சிறுத்தைகள் வரவேற்கும். கூட்டணி தொடர்பாக தே.மு.தி.க. சிறந்த முடிவை எடுக்கும் என்று நம்புகின்றேன்." என்று தெரிவித்துள்ளார். (ந)

# மாறிவிட்டார் கெஜ்ரிவால்

## குற்றஞ்சாட்டுகின்றார் ஹசாரே

புதுடில்லி, பெப்.21

அரவிந்த் கெஜ்ரிவால் மாறிவிட்டார். அவருக்கு நாட்டின் பிரதமராகும் கனவு இருப்பதை உணர முடிகிறது என்று கூறியுள்ளார் சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே.

ஊழலுக்கு எதிராக போராடுபவரும், சமூக ஆர்வலருமான காந்தியவாதி அன்னாஹசாரே தனியார் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதுடில்லியின் முன்னாள் முதலமைச்சரும் ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கெஜ்ரிவால் மாறிவிட்டார். புதுடில்லி முதலமைச்சர் பதவியில் இருந்து விலகிய அரவிந்த் கெஜ்ரிவால், உடனடியாக முதலமைச்சருக்கான அரச வீட்டில் இருந்து வெளியேறி இருக்க வேண்டும். ஆனால், கெஜ்ரிவால் அதனைச் செய்யவில்லை. கெஜ்ரிவாலுக்கு நாட்டின் பிரதமராகும் கனவு இருப்பதை உணர முடிகிறது" என்று தெரிவித்துள்ளார். (ந)

# ரஜினிகாந்த் ஆதரவை பா.ஜ.கவுக்கு கேட்போம்

## இல.கணேசன் கூறுகின்றார்

சென்னை, பெப்.21

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது எமக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று நடிகர் ரஜினிகாந்தை நேரில் சந்தித்துக் கேட்கவுள்ளோம் என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.க. மூத்த தலைவர் இல.கணேசன்.

சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரஜினிகாந்த் எல்லோருக்கும் பொதுவானவர். அவரைப் பிரச்சினைகளுக்கு உட்படுத்த நான் விரும்பவில்லை. தேர்தல் நேரத்தில் அவர் மோடிக்கு ஆதரவு தெரிவிப்பார் என்ற நம்பிக்கை உள்ளது. நாட்டு நலனில் அக்கறை கொண்டவர் ரஜினி. எனவே தேர்தல் சமயத்தில் அவர் இந்த முடிவை எடுப்பார். ஆனால் இது விடயமாக இதுவரை நாங்கள் அவரை அணுகவில்லை. அதற்கான நேரமும் இதுவல்ல. நேரம் வரும் போது அவரையும் அணுகி ஆதரவு கேட்போம்" என்று தெரிவித்தார். (ந)

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் மூத்த ஆசிரியர்

திருவாளர்

கனகசபை முத்துலிங்கம் அவர்களின்

சேவை நலன் பாராட்டு



இந்துமா கடலின் முத்தன்ன
இந்துவின் முதுசொத்தாய்
இன் தமிழின் வித்தாகி
இங்கிருந்தார் பல்லாண்டு
பண்புடைப் பெருந்தகையில்
படைத்தவர் மனம் மகிழ
வினைத்திறம் பல இயற்றி
விளையுலகத்தை ஏற்றி வைத்தீர்
இளைப்பாறும் காலம் வந்து
இந்துவை நீங்கினாலும் –உன்தன்
தடம் பதித்தீர் நன்றே இங்கு
தாமோதரன் மறவார் என்றும் வாழ்க

பிறப்பு : 21.02.1954, அல்லாரை தெற்கு, மீசாலை

ஆரம்பக்கல்வி: அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

இடைநிலைக்கல்வி: யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி

உயர்கல்வி: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (1979-1983) BA

ஆசிரியர் சேவை : யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி (1984-1985)

ஆசிரிய நியமனம் : 1985 மார்கழி

வ/நெடுங்கேணி ம.வி. 1986 - 1989

வ/ புதுக்குளம் ம.வி. 1989 - 1991

யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி 1991 -2014

Best Wishes

ஆசிரிய சகோதரத்துவம்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(29767)(5.6)

# கடித்து விட்டு காத்திருந்து ரசித்த பாம்பு

இந்தூர், பெப்.21

மத்திய பிரதேச மாநிலத்தில் ஒருவர் பாம்பு கடித்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார். கடித்த பாம்பு அவர் சாகும் வரை காத்திருந்து ரசித்துள்ளது.

மத்திய பிரதேச மாநிலம் இந் தூரிலுள்ள அமருஜாலா பகுதி யில் தனது குடும்பத்தோடு உறங்கிக்கொண்டிருந்த ஒருவரை நள்ளிரவில் பாம்பு ஒன்று கடித்தது. அதைக் கண்டுவிட்ட பாம்பு கடித்தவரின் மனைவி கணவரை உடனடியாக மருத்துவ மனைக்கு கொண்டு செல்ல முயற்சித்துள்ளார். ஆனால் வீட்டின் வாசலின் அருகே நடு வழியில் நின்ற பாம்பு அவர்களை வெளியே செல்ல விடவில்லை. அவர்கள் பல்வேறு வழிகளில் முயற்சி செய்தும் பாம்பு அங்கிருந்து செல்ல மறுத்து விட்டது. முழு இரவும் அங்கேயே இருந்த பாம்பு மறுநாள் காலையிலும் அங்கிருந்து செல்ல மறுத்ததுடன் யாரையும் அருகே செல்லவும் விடவில்லை. அதனால் அதனை அடித்துக் கொல்லவும் முடியவில்லை.

ஒன்றும் செய்ய முடியாத நிலையில் அந்த பெண் வீட்டின் சுவரை இடித்து கணவரை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றுள்ளார். ஆனால் அங்கு கொண்டு செல்லும் வழியிலேயே அவர் இறந்துவிட்டார் என்று மருத்துவர்கள் கூறி விட்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து பயத்தால் உறைந்து போயுள்ளனர் அந்தப் பகுதி மக்கள். (ந)

நல்லூர் பிரதேச சபை, நல்லூர் உப அலுவலகம்

ஆதனப்பெயர் மாற்றம்

**1217/7, பருத்தித்துறை வீதி, வட்டாரம் -01**

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் -01 பருத்தித்துறை வீதியிலுள்ள 1217 / 7 எனும் ஆதனம் எமது பதிவேட்டின் பிரகாரம் சொந்தக் காரர் உ.கோ.சோதிநாதன் எனும் பெயரில் காணப் படுகின்றது.


யாழ்ப்பாண மேல்நீதிமன்ற வலய பிரசித்த நொத்தாரிசு கனகரத்தினம் கேசவன் அவர்களால் வரையப்பட்ட 13898 / 09.05.2013 ஆம் இலக்க உறுதிமூலம் இவ் ஆதனமானது சிவபாதசுந்தரம் கைம்பெண் உமாராணி என்பவரிடமிருந்து யோகேந்திரராஜா பெண் ரதிராணி என்பவரை வந்தடைந்துள்ளது.

யோகேந்திரராஜா பெண் ரதிராணி என்பவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது யோகேந்திரராஜா பெண் ரதிராணி என்பவரிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ப.வசந்தகுமார்,
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

(அ/12528)(3.0.4)



சோமாலியா வில் தற்போது சுமார் 8 இலட்சத்து 50 ஆயிரம் பேர் உணவின்றித் தவித்து வருகின்றனர் என்று அறிக்கையிட்டுள்ளது ஐக்கிய நாடுகள் சபை. ஐ.நா.வின் மனித உரிமைகள் திட்டங்களின் இயக்குநர் ஜோன் ஜிங்கின் சோமாலியச் சுற்றுப் பயணத்தின் பின்னரே இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது ஐ.நா. 2011 ஆம் ஆண்டு பஞ்சம் காரணமாகச் சோமாலியாவில் 2 இலட்சத்து 60 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். அங்குள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 933 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைத் திரட்ட வேண்டும் என்று ஐ.நா. கோரிக்கை விடுத்திருந்தபோதும் இதுவரை 36 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியே சேகரிக்கப்பட்டுள்ளது.

## ஆசியாவின் சிறந்த நகரம் சிங்கப்பூர்



சிங்கப்பூர் - கோப்புப் படம்

நியூயோர்க், பெப்.21

ஆசியக் கண்டத்தில் சிறந்த நகரங்கள் பட்டியலில் முதலிடத்தைப்பெற்றுள்ளது சிங்கப்பூர். மெர்சர் கன்சல்டிங் குரூப் என்ற நிறுவனம் சர்வதேச ரீதியில் நடத்திய ஆய்வின் மூலமே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆய்வின்படி ஆசியாவின் சிறந்த நகரங்களாக ஜப்பான் தலைநகர் டோக்கியோ 2 ஆவது இடத்திலும், ஜப்பானைச் சேர்ந்த கோபே, யோகஹாமா, ஒசாகா ஆகிய நகரங்கள் அடுத்த 3 இடங்களைப் பிடித்துள்ளன. இந்தப் பட்டியலில் வங்கதேச தலைநகர் தாகா கடைசி இடத்தைப் பெற்றுள்ளது.

சர்வதேச அளவில் ஆஸ்திரிய நாட்டின் வியன்னா நகரம் சிறந்த நகரமாகத் தேர்வாகியுள்ளது. (ற)

# சிரிய அமைதிப் பேச்சை மீளவும் ஆரம்பியுங்கள்

### வலியுறுத்துகின்றார் பான் கீ-மூன்

நியூயோர்க், பெப்.21

சிரிய அமைதிப் பேச்சுகள் இடைநிறுத்தப்படாது தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையாளர் பான் கீ-மூன்.

சிரிய அமைதிப் பேச்சின் அடுத்த கட்ட நகர்வு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



பான் கீ-மூன்

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜெனீவாவில் நடைபெற்ற சிரிய அமைதிப் பேச்சுக்கள் சரியான திசையை நோக்கியே நகர்ந்துள்ளன. பேச்சுக்களும் சிறப்பாக நடைபெற்றன. இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு இரு தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். மூன்றாண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு விரைவில் அடுத்த கட்டப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

சிரியாவில் மோதல்களில் ஈடுபடும் தரப்பினர் இது வரை இரு தடவைகள் பேச்சுக்களில் கலந்துகொண்டிருந்தனர். எனினும் அந்தப் பேச்சுக்களில் முன்னேற்றகரமான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. அதையடுத்து அடுத்த கட்டப் பேச்சுக்கான திகதி எதுவும் குறிப்பிடப் படாமலேயே இரண்டாவது கட்டப் பேச்சுக்கள் முடிவுற்றிருந்தன. (ற)

## எதிர்க்கட்சித் தலைவர் சரண்; வெனிசுவேலாவில் பதற்றம்

கராக்கஸ், பெப்.21

வெனிசுவேலாவில் அரசுக்கு எதிரான போராட்டங்களுக்கு தலைமை தாங்கிய எதிர்க்கட்சிதலைவர் லியோபோல்டோ லோபெஸ் தாமாகவே முன்வந்து பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

லோபெஸைக் கைது செய்யுமாறு நிக்கோலஸ் மதுரோ தலைமையிலான வெனிசுவேலா அரசு உத்தரவிட்டிருந்த நிலையிலேயே அவர் இவ்வாறு சரணடைந்துள்ளார்.

அதேவேளை, லோபாஸ் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளபோதும் அவரது ஆதரவாளர்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தலைநகர் கராகஸின் செயற்பாடுகளை முடக்கிய போராட்டக்காரர்கள் லியோபோல்டோ லோபெஸுக்கு ஆதரவான கோசங்களை யும் எழுப்பினர்.

போராட்டங்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ, நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துள்ளார். (ற)

## தலிபான் அமைப்பினருடன் பேச்சுக்கள் இனி இல்லை

### அமெரிக்க அரசு திட்டவட்டம்

நியூயோர்க், பெப்.21





ஜே கோர்னி

தலிபான் அமைப்பினருடன் எந்தப் பேச்சுக்களிலும் ஈடுபடப் போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது அமெரிக்கா.

வெள்ளை மாளிகையின் செய்தித்துறை செயலாளர் ஜே கோர்னி செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தலிபான்களுடன் இனி எந்த விதப் பேச்சுக்களிலும் ஈடுபடப் போவதில்லை. 2009 ஆம் ஆண்டு தலிபான்களால் கடத்தப்பட்ட அமெரிக்க இராணுவ அதிகாரி ரொபெர்ட் பெர்க்டாலை விடுதலை செய்தால் மட்டுமே அவர்களுடனான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

**அமெரிக்க இராணுவ அதிகாரி ரொபெர்ட் பெர்க்டாலை விடுதலை செய்தால் மட்டுமே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும்.**

நீண்ட நாள்களாக கடத்தி வைக்கப்பட்டிருக்கும் இராணுவ அதிகாரி பெர்க்டாலை பத்திரமாக மீட்பதற்கு அமெரிக்கா தொடர்ந்து பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. அவரை மீட்பதற்கு ராணுவம் மற்றும் உளவுத் துறை மூலம் நாள் தோறும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேவேளை, ஆப்கனின் அமைதி நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை இராணுவ அதிகாரி பெர்க்டாலின் விடுதலைக்குப் பதிலாக அமெரிக்காவின் குவாண்டனாமோ சிறையில் உள்ள தலிபான் களை விடுதலை செய்ய அமெரிக்க அரசு பரிசீலித்து வருகிறது என்ற தகவலை ஜே கோர்னி மறுக்கவில்லை. (ற)

## பனிப்பொழிவு காரணமாக குறைந்துள்ள குற்றங்கள்

நியூயோர்க், பெப்.21



கோப்புப் படம்

அமெரிக்காவில் பனிப்பொழிவு காரணமாக குற்றங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

அமெரிக்காவின் மத்திய மற்றும் மேற்குப் பகுதிகளில் கடுமையான பனிப் பொழிவு காணப்படுகின்றது. அதனால் 2014 ஆம் ஆண்டின் உள்ளூர் குற்றப் பதிவுகள் கணிசமாக குறைந்துள்ளன எனத் தெரிய வந்துள்ளது.

இந்தமாதம் முதல் வாரம் வரையிலும் 112 துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் 39 சதவீதம் குறைவாகும் என சிக்காகோ பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதேபோன்று 28 கொலை வழக்குகள் பதிவாகியுள்ளன. இதுவும் 36 சதவீதம் குறைவடைந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

அதிகளவில் குற்றங்கள் நடைபெறும் நகரமாக சிக்காகோ திகழ்ந்து வருகிறது. 2012 ஆம் ஆண்டில் இந்நகரில் மட்டும் 500 கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ற)

## சக்கை போடு போடுகிறார் 'ஜேம்ஸ் பொண்ட்' ஒபாமா

இஸ்லாமாபாத், பெப்.21





ஆண்களின் பாலியல் உணர்வுகளைத் தூண்டும் 'வயாக்ரா' மாத்திரைகளுக்கு பாகிஸ்தானில் நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது.

அதைச் சாதகமாகப் பயன்படுத்தி அயல் நாடான ஆப்கனில் இருந்து சிலர் போலி வயாக்ரா மாத்திரைகளை வரவழைத்து, பாகிஸ்தானின் பெஷாவர் உள்ளிட்ட பல நகரங்களில் விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த போலி வயாக்ரா மாத்திரைப் பெட்டிகளில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா 'ஜேம்ஸ் பாண்ட்' பாணியில் துப்பாக்கியுடன் நிற்பது போன்ற படம் அச்சிடப்பட்டுள்ளது என்பது தான் இதில் குறிப்பிடத்தக்க விடயம்.

"வலிமை மற்றும் அதிகாரத்தின் அடையாளம்" என்ற அடைமொழி வாசகத்துடன் ஒபாமா துப்பாகியுடன் மிரட்டும் பெட்டிகளில் அடைக்கப்பட்ட இந்த போலி வயாக்ரா மாத்திரைகள் பாகிஸ்தானில் விற்பனையில் சக்கை போடு போட்டு வருகின்றன. (ற)

**கடைகள் வாடகைக்கு**

நல்லூர் முத்திரைச்சந்தி,
பருத்தித்துறை வீதியில் தொடர்
கடைகள் வாடகைக்குண்டு.
(நல்லூர் கோயிலுக்கு அண்மையில்)
தொடர்பு:077 959 1849 (44939)(3.6.4)

**வாடகைக்கு விடப்படும்**

JCB-2750/= (1 மணித்தியாலத்திற்கு)
Excuvatar-2250/= (1மணித்தியாலத்திற்கு)
DOZER -2250/= (1மணித்தியாலத்திற்கு)
மற்றும் டிராக்டர், பவுசர், கரியர்,
தட்டுலொறி என்பன வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:072 226 3778, 071 416 7878 (44940)(3.6.4)

# அறிவித்தல்

## வாக்காளர் இடாப்பின் பதிவு தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு சனசமூக அமைப்புக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல்

2014ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பு மீளாய்வுடன் தொடர்புடைய பூர்வாங்க நடவடிக்கைகள் 01.05.2014 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, அது தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தில் தேர்தல்கள் திணைக்களத்திற்கு தொண்டர் அடிப்படையில் ஒத்துழைப்பு வழங்கக்கூடிய சுயாதீன மற்றும் யதார்த்தபூர்வமான சனசமூக அமைப்புக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தகைய அமைப்புகளிடமிருந்து தகவல்களை 24.02.2014 ஆம் திகதி முதல் 24.03.2014 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளமையால், இது தொடர்பாக அக்கறை காட்டுகின்ற நிறுவனங்கள் தமது நிறுவனத்தின் பெயர், முகவரி, குறிக்கோள்கள் மற்றும் ஏனைய தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை **2014 மார்ச் மாதம் 24** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு **தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை, இராஜகிரிய** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**தேர்தல்கள் செயலகம்,**
**சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**
**2014 பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி**

(C/12521) (10.6.3)

**மஹிந்த தேசப்பிரிய,**
**தேர்தல்கள் ஆணையாளர்.**

# தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பாதீர்கள்

*ஆஸி.தூதருக்கு அன்ரனி ஜெயநாதன் கடிதம்*

தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை தங்கள் நாட்டை நாடி வந்த ஆதரவற்ற நிலையில் அங்கு சென்ற தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதைத் தயவு செய்து நிறுத்துங்கள்-இவ்வாறு ஆஸ்திரேலிய தூதர் றொபின் மூடியிடம் அன்ரனி ஜெயநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆஸ்திரேலிய தூதர் றொபின் மூடிக்கு வடமாகாண பிரதி அவைத் தலைவரும் முல்லை மாவட்ட உறுப்பினரும் இறுதிக் கட்ட உச்சப் போரை நேரடியாக அனுபவித்தவருமான அன்ரனி ஜெயநாதன் இதுகுறித்து அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் போராலும் அதனைத் தொடர்ந்து நிலவிய அச்சுறுத்தல் காரணமாகவும் வாழ்வாதாரம் முற்றாக அழிந்தமையாலும் உயிர் பாதுகாப்பின்மை காரணமாகவும் தங்கள் நாட்டுக்கு புகலிடம் கோரி இலங்கை யின் வடமாகாண தமிழர்கள் சென்றனர்.

அவர்களை ஆஸ்திரேலிய அரசு மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது குறித்து மிகவும் கவலையடைகின்றேன். புகலிடம் கோரி தங்கள் நாட்டில் தஞ்சம் அடைந்தவர்கள் இலங்கையில் பாதுகாப்பாக வாழ முடியாதவர்கள்.

அவர்களைத் திருப்பி அனுப்பினால் இலங்கையில் அவர்கள் வாழ்வதற்கான வாழ்வாதார வழிகள் எதுவுமேயில்லை.

31.12.2013 வரை புகலிடம் கோரிவந்த தமிழர்கள்ளை யாவது இலங்கைக்கு திருப்பி அனுப்பாது பாதுகாக்குமாறு வேண்டுகின்றேன்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும்வரை அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்- என்றுள்ளது. (வ)

# சிறகுவலை தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தில் இன்று கடற்றொழில் கிராமிய அமைப்புக்களுடன் நடைபெறவிருந்த சிறகு வலை தொடர்பான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என்று உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் சிறகுவலைத் தொழிலில் ஈடுபடும் சகல கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் தலைவர், செயலாளர் ஆகிய இருவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

**மணிவிழாக் கண்டு மாண்புற்றீர்**

கல்விப்புலத்தில் கணித
ஆசானாய் உலா வந்து
இன்று 2014.02.21 இல்
அகவை அறுபது காணும்
திருவளர்

**அப்புத்துரை பிரதாபன்**

அவர்களை இந்நாளில்
மனமுவந்து வாழ்த்துகின்றோம்.



Best Wishes
வாழ்த்துவோர்:
**கல்விச்சமூகம்,**
**யா/உடுவில் மான்ஸ் ம.வி**
(44936)(10.6.3)
Best Wishes!



# பல்லவராயன்கட்டுப் பாடசாலையை மீள ஆரம்பிக்குமாறு வேண்டுகோள்

பூநகரி,பெப்.21
பல்லவராயன்கட்டு அ.த.க. பாடசாலையை மீள ஆரம்பிப்பதற்கு ஆவன செய்யுமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
போர்ச் சூழல் காரணமாக மூடப்பட்ட இந்தப் பாடசாலை இன்னமும் மீள இயங்காததால் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் அங்கிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஜெயபுரம் மகா வித்தியாலயத்துக்கு நடந்து செல்லும் அவல நிலை காணப்படுகின்றது.
பூநகரிக் கல்விக் கோட்டத்தில் உள்ள 30 பாடசாலைகளில் 24 பாடசாலைகள் இயங்குகின்றன. ஆறு பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. பல்லவராயன்கட்டு அ.த.க., பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தியாலயம், கௌதாரிமுனை அ.த.க., செட்டியகுறிச்சி அ.த.க., அத்தாய் முத்துக்குமார சுவாமி வித்தியாலயம், தம்பி ராய் அ.த.க.பாடசாலை என்பனவே மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.
மேலும் பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தியாலயத்தை கிராஞ்சிக்குளம், வேரவில் ஆகிய கிராமங்களுக்கு இடையில் இயங்கச் செய்யுமாறு இந்தப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
மக்கள் மீளக்குடியமரும் நிலைக்கேற்றவாறு பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் பணியில் வலயக் கல்விப் பணிமனை ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## கிராம அலுவலர் தெரிவு

வவுனியா,பெப்.21
கடந்த ஆண்டு இடம்பெற்ற கிராம அலுவலர்களுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி அதில் தேர்வு பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
இதன் பிரகாரம் வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் 16 பேரும், வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலகப் பிரிவில் 03 பேரும், வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் 02 பேரும், வவுனியா தெற்கு (சிங்கள) பிரதேச செயலகப் பிரிவில் 03 பேருமாக மொத்தமாக 24 பேர் தெரிவாகியுள்ளனர். (க-402)



திருவையாற்றில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது

# முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி மீட்புக்கான அமைப்பு

முல்லைத்தீவு, பெப்.21
முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி மீட்புக்கென அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
கடந்த 14 ஆம் திகதி புதுக்குடியிருப்பு நான்காம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஆதி பராசக்தி அறிவியல் கல்லூரியில் ஒன்று கூடிய மக்கள் இந்த அமைப்பைஉருவாக்கியுள்ளனர்.

**கடந்த 14 ஆம் திகதி புதுக்குடியிருப்பு நான்காம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஆதி பராசக்தி அறிவியல் கல்லூரியில் ஒன்று கூடிய மக்கள் இந்த அமைப்பை உருவாக்கியுள்ளனர்.**

இந்த அமைப்பின் செயலாளராக வடமாகாண சபை உறுப்பினரான மருத்துவர் சி.சிவமோகனும், ஆலோசகர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான வீ.கனகசுந்தரசுவாமி, திருமதி மேரிகமலா குணசீலன் ஆகியோரும்-செயற்குழு உறுப்பினர்களாக ஒவ்வொரு கிராமங்களில் இருந்தும் ஐந்து உறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.
மேலும் அங்கு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. நீண்ட காலமாக இராணுவம் தமது பொறுப்பில் வைத்திருக்கும் மக்களுக்குரிய காணிகளை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளல், காணிகளுக்கான உரிமைப் பத்திரங்கள் வழங்கல், பிரதேசசபைகள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றுக்குரிய காணிகள், கட்டடங்களில் குடியிருக்கும் இராணுவத்தினரை வெளியேற்றி அவற்றை விடுவித்தல் என்பனவே அத்தீர்மானங்களாகும். (க-402)

## கிளிநொச்சியில் ஒன்றுகூடல்

கிளிநொச்சி, பெப்.21
கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூக பிரதிகளுக்கும் பொது நிறுவன பிரதிகளுக்கும் இடையிலான ஒன்று கூடல் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த ஒன்று கூடலில் கிளிநொச்சி மாவட்ட நிலைமை தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (க-18)

# நிலக்கடலைச் செய்கைக்கான கலந்துரையாடல் வன்னியில்

கிளிநொச்சி,பெப்.21
கிளிநொச்சி மாவட்டத்தில் நிலக்கடலை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் விவசாயிகளுடனான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.
சுமார் 450 ஏக்கரில் நிலக்கடலையை உற்பத்தி செய்யும் வகையில் கிராமங்கள் தோறும் இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.
உலக உணவு விவசாய நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாவட்டத்தின் பல கிராமங்களிலும் நிலக்கடலை உற்பத்தி மேற்கொள்ளப்படுவதற்கான இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
பூநகரியின் செல்விபுரம், முழங்காவில், திருவையாறு, வட்டக்கச்சியின் புழுதியாற்றுப் பகுதி ஆகிய இடங்களில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதில் வர்த்தக நோக்கங்களுக்கென 400 ஏக்கரிலும், விதைக்காக 50 ஏக்கரிலும் செய்கைகள் மேற்கொள்ளப்படும்.
இந்தப் பகுதிகளில் விவசாயிகளுடனான கலந்துரையாடல்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# மண் அகழ்வு தொடர்பாக முறைப்பாடு

கிளிநொச்சி மாவட்டம் பூநகரியின் கிராஞ்சி கிழக்குப் பகுதிகளான இலவன்குடா, பிருந்தாவனம் ஆகிய இடங்களில் இராணுவத்தினர் தொடர்ந்து மணல் அகழ்வில் ஈடுபடுவதாகக் கிராம மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.
நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், மு.சந்திரகுமார், பூநகரிப் பிரதேச செயலர், கிராஞ்சி கிராம அலுவலர் ஆகியோரிடம் இவ்விதம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் இராணுவத்தினர் மணல் அகழ்வில் ஈடுபட் டுள்ள பகுதியூடாக கடல் நீர் கிராமத்தினுள் புகக்கூடிய அபாய நிலையும் உருவாகி யுள்ளது.
கிராஞ்சியில் அகழ்ந் தெடுக்கப்படும் மணல் ஏ-32 வீதியில் உள்ள இராணுவத்தினரின் முகாமுக்கும், பூநகரி, பல்லவராயன்கட்டு, பாலாவி போன்ற பகுதிகளுக்கும் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்படுவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.
கடந்த ஆண்டு இந்த இடத்தில் இராணுவத்தினர் மண் அகழ்வில் ஈடுபட்டபோது பூநகரிப் பிரதேச செயலர் பொலிஸாரின் உதவியுடன் அதனைத் தடுத்து நிறுத்தியதாகவும் கிராஞ்சி மக்கள் தெரிவித்தனர்.
ஆனால் தற்போது இராணுவத்தினர் கூடாரம் அமைத்து மண் அகழ்வில் ஈடுபட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

# அதிகரித்த விலையில் மீன்கள் விற்பனை

மல்லாவி, பெப்.21
மல்லாவி பொதுச் சந்தையில் அதிகரித்த விலையில் மீன் விற்பனை செய்யப்படுவதால் நுகர்வோர் மீனை வாங்க முடியாத நிலையில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
மன்னரார் தொடக்கம் நாச்சிக்குடா வரையும் உள்ள கடற்கரைப் பகுதிகளில் பிடிக்கப்படும் மீன்களைக் கொள்வனவு செய்யும் வியாபாரிகள் மல்லாவி, துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள சந்தைகளில் ஒரு கிலோ 500 ரூபா தொடக்கம் 600 ரூபா வரையில் விற்பனைசெய்துவருகின்றனர்.
இதனால் வறுமை நிலையில் உள்ளமக்கள்மீனைவாங்கமுடியாத நிலையில் அவலப் படுவதைக் காண முடிகின்றது. (க-415)

# சிறப்பான சேவையை எதிர்பார்க்கும் ஒட்டுசுட்டான் கால்நடை வளர்ப்போர்

## ஒட்டுசுட்டான் கால்நடை மருத்துவ நிலையத்திலிருந்து

முல்லைத்தீவு, பெப்.21
ஒட்டுசுட்டான் கால்நடை மருத்துவ நிலையம் சிறப்பான வகையில் இயங்குமாயின் தமது கால்நடைகளின் இறப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியுமென இங்குள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-
கற்சிலைமடுவிலுள்ள கால்நடை வளர்ப்பாளரின் நல்லினக் காளையொன்று கடந்த 10 ஆம் திகதி நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.
அதன் உரிமையாளர் அன்றைய தினமே ஒட்டுசுட்டான் கால்நடை மருத்துவ நிலையத்துக்குச் சென்று இது தொடர்பாக அறிவித்துள்ளார்.
ஆனால் 13 ஆம் திகதி வரை எவரும் வரவில்லை. இந்த நிலையில் கால்நடை இறந்துள்ளது.
கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களுக்கான தடுப்பு மருந்துகளை வழங்குவதிலும் தாமதம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இங்குள்ள கால்நடை மருத்துவர்களுக்குத் தமிழ் தெரியாததால் சிரமங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-500)

## முல்லை பொலிஸ் நிலையத்தில் தமிழ் தெரிந்தவர்கள் இல்லாத நிலை

முல்லைத்தீவு, பெப்.21
முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் தமிழ் தெரிந்த பொலிஸார்எவரும்கடமையில்இல்லை என பதிலளித்தார் நேற்று முன்தினம் இரவு அங்கு கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர்.
பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதாகத் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தெரிவித்தனர்.
இது குறித்து உறுதிப்படுத்தும் நோக்கில் உதயன் அலுவலக தொலைபேசியில் இருந்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தின் தொலைபேசி இலக் கத்துடன் நேற்றுமுன்தினம் இரவு 8.18 மணியளவில் தொடர்பு கொண்ட போது அங்கு கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோ கத்தர் ஒருவர் தமக்குத் தமிழ் தெரியாது என்றும், வேறு தமிழ் தெரிந்த எவரும் அங்கு இல்லை எனவும் அரைகுறைத் தமிழில் பதிலளித்து விட்டு இணைப்பைத் துண்டித்து விட்டார். (ஐ)

# உவர் ஆபத்திலிருந்து பாதுகாக்கக் கோரிக்கை

கிளிநொச்சி,பெப்.21
பூநகரியின் கிராஞ்சிக் கிராமத்தை உவர் ஆபத்திலிருந்து பாதுகாக்குமாறு அங்கு மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்கள் வேண்டுகோள் விடுத்துள் ளன.
கிராஞ்சியின் தெற்குப் பகுதியூடாக கடல் நீர் கிராமத்தினுள் பரவி வருவதன் காரணமாக இந்தக் கிராமம் எதிர்காலத்தில் முழுமையாக உவராக மாறும் அபாயம் உருவாகியுள்ளது.
சுமார் 504 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ள இந்தக் கிராமத்தில் உவர் காரணமாகப் பெரும் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.
ஆகவே இந்தக் கிராமத்தைப் பாதுகாக் கும் பொருட்டு உடனடியாக உவர்த் தடுப்பணை ஒன்றை அமைக்குமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத் துள் ளனர். (க-18)

**கிராஞ்சியின் தெற்குப் பகுதியூடாக கடல் நீர் கிராமத்தினுள் பரவி வருவதன் காரணமாக இந்தக் கிராமம் எதிர்காலத்தில் முழுமையாக உவ ராக மாறும் அபாயம் உருவாகியுள்ளது.**

# சந்தை வாய்ப்பு இல்லாததால் மிளகாய்ச் செய்கையில் பாதிப்பு

முல்லைத்தீவு, பெப்.21
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள சிறாட்டிகுளம் கிராமத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மிளகாய்க்கு சந்தை வாய்ப்புக்கள் இல்லாததால் மிளகாய்ச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிறாட்டிகுளம் கிராமத்தில் 46 ஏக்கர் நிலப்பரப்பில் மிளகாய்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இந்தச் செய்கையில் விவசாயிகளும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.
ஆனால் உற்பத்தி செய்யப்பட்ட மிளகாயை விற்பனை செய்வதற்கான சந்தை வாய்ப்புகள் இல்லாததால் விவசாயிகள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.
பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இந்தப் பகுதி விவசாயிகள் காணப்படுகின்றனர்.
இவர்கள் மிளகாய்ச் செய்கையின் மூலமாகத் தமது வாழ்வாதாரத்தை ஓரளவாவது மேம்படுத்த முடியுமென நம்பியிருந்தனர்.
இந்த நிலையில் தம்மால் உற்பத்தி செய்யப்பட்ட மிளகாயை விற்பனை செய்வதற்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர். (க-18)

# 35 வீதமான காணிகள் படையினரால் அபகரிப்பு

## தமிழருக்கு பல்வேறு நெருக்கடிகள் என்கிறார் யோகேஸ் எம்.பி.

வடக்கு,கிழக்கு பகுதிகளில் சுமார் 35 வீதமான காணிகளை இராணுவம் அபகரித்துள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

காணி கொள்முதல் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதி தொடர்பாக நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசால் காணி தொடர்பாக என்னென்ன திருத்தச் சட்டவரைவு கொண்டு வரப்பட்டாலும் அது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு பெரும் பாதிப்பையே அடிக்கடி ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

இன்று கிழக்கு மாகாணத்தில் பலகாணிகள் அரசால் திட்டமிட்ட செயற்பாட்டின் அடிப்படையில் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

செங்கலடி பிரதேசத்தில் வேப்பவட்டவான், ஈரளக்குளம், மாவடிஓடை, சின்னப்புல்லுமலை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய 3897 ஹெக்ரெயரையும், புதூர் பகுதியில் 51 ஹெக்ரெயரையும், வவுணதீவு பிரதேசத்தில் குறிஞ்சாமுனைப் பகுதியில் 600 ஹெக்ரெயர் நிலத்தையும் கரும்புச் செய்கைக்காக அரசு அபகரிக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்த நடவடிக்கை அந்தப் பகுதி மக்களின் வாழ்வாதார செயற்பாட்டுக்கு இடையூறு விளைவிக்கும். அத்தோடு விவசாய நிலமாக இருந்து கொண்டிருக்கின்ற அந்த மண்ணின் வளம் பாதிப்புக்குள்ளாகி பயனற்ற நிலைக்கு செல்வதற்கும் வழிவகுப்பதாகவே அமைகின்றது.




யோகேஸ்வரன்

பொதுவாக கரும்புச் செய்கை மூலம் மண்ணின் வளம் பாதிக்கப்படுவதால் எதிர்காலத்தில் விவசாயிகள் வாழ்வாதார ரீதியில் பாதிப்புக்கு உள்ளாக்கக் கூடிய சூழல் உருவாகின்றது. 23000 ஹெக்ரெயர் நிலத்தையும் தமது வனபரிபாலன காணியிலிருந்தும், மகாவலி அபிவிருத்திச் சபையிலிருந்தும் சுவீகரிக்க அரசு திட்டமிட்டிருக்கின்றது.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காணிகள் பெரும்பான்மையினத்தவர்களால் அத்துமீறிப் பயிர்ச் செய்கை என்ற ரீதியில் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக பல முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அவற்றுக்கு இதுவரையில் சரியான தீர்வுஎதுவும்கிடைக்கவில்லை.

வவுணதீவு, செங்கலடி, பட்டிப்பளை ஆகிய பிரதேசங்களில் 25000 ஏக்கருக்கு மேற்பட்ட தமிழ் மக்களுடைய காணிகள் பெரும்பான்மை இன மக்களால் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

இன்று இராணுவ வீடமைப்புத் திட்டம் என்ற ரீதியில் வாகரை பனிச்சங்கேணியில் கிரிமிச்சை சந்திப்பகுதியில் 1000 ஏக்கர் காணியை அரசு சுவீகரித்துள்ளது-என்றார். (ச)



விபத்தில் மோதுண்ட பஸ்

# பஸ் - லொறி மோதி 10 பேர் படுகாயம்

மட்டக்களப்பு,பெப்.21

மட்டக்களப்பு-பதுளை செங்கலடி வீதியில் கரடியனாறு பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் லொறியும் நேருக்கு நேர் மோதியதில் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு புல்லுமலையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த பஸ் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது என்று கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் உட்பட 10பேரும் கரடியனாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் சாரதியின் நிலை கவலைக்கிடமாக இருந்ததால் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்று கரடிய னாறு வைத்தியசாலை வட்டா ரங்கள் தெரிவித்தன.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# இளைஞன் கைது

மட்டக்களப்பு,பெப்.21

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊறணி கொத்துக்குளத்து மாரியம்மன் கோயிலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பணத் திருட்டு தொடர்பில் சந்தேகத்தில் இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஆலயத்தின் பணத்தட்டில் வைக்கப்பட்டிருந்த 1,57050 பணம்திருடப்பட்டதுஎன்று மட்டக்களப்புப்பொலிஸில் முறையிடப்பட்டதற்கமைய இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர். (ச)




எட்டாம் திருவிழா
இன்று (21.02.2014)வெள்ளிக்கிழமை

"திருவாதிரையில் திருநடனம் புரிபவரே உன்
ஆருத்ரா தரிசனம்காண அவனியே விழித்திடுமே
அதிகாலையில் ஆசாரசீலராய் அணிவகுத்திடுவர்
ஐங்கரன் தந்தையை ஆவலுடன் மனதிருத்திடவே"

அனுசரணை:
எட்டாம் திருவிழா உபயகாரர்களும்
கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தாவும்.
(சி/12101)(2-6-3)

# ஆசிரியர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்

## கிழக்கு ஆளுநரிடம் தவம் வேண்டுகோள்

மட்டக்களப்பு,பெப்.21

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் உள்ள மேலதிக ஆசிரியர்களைக் கொண்டு பொத்துவில் கோட்ட ஆசிரியர் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எல்.தவம், கிழக்கு மாகாண ஆளுனர் ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரமவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



ஏ.எல்.தவம்

பொத்துவில் கோட்டக் கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தவம், கிழக்கு மாகாண ஆளுநரை அவரது அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியபோதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் 187 ஆசிரியர்கள் மேலதிகமாகக் கடமையாற்றி வருகின்றனர். பொத்துவில் கல்விக் கோட்டத்தில் பல வருடங்களாக ஆசிரிய ஆளணித் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதற்கு உரிய கல்வி அதிகாரிகள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று மாகாண சபை உறுப்பினர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே பொத்துவில் கோட்ட ஆசிரியர் சமமின்மையை அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் மேலதிகமாக கடமையாற்றும் ஆசிரியர்களைக் கொண்டு நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டதையடுத்து ஆளுநர் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார் என்று மாகாணசபை உறுப்பினர்தவம்கூறினார்.(ச)

**கடை விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம், கன்னாதிட்டி சந்தியில் அமைந்துள்ள மூன்று அறைகளுடன் கூடிய வியாபார நிலையம் (கடை) விற்பனைக்குண்டு. (44857)(7.6.3)

தொடர்பு : 077 172 7241, 077 022 2232

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**

Robin EY 28 மின்சாரப் பிறப்பாக்கிகள் 2 விற்பனைக்குண்டு.
28.02.2014, இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இல: 021 222 6525
அலுவலக நேரம்: காலை 8.00-மாலை 5.00 வரையும்
செயலாளர் தி.செல்வமனோகரன்
(சி/12516)(3.6.4)

**காண விரும்புகிறோம்**

படத்தில் பெற்றி எனும்
கிளியுடன் இருக்கும்
சங்கரனின் தந்தையாரான
**சின்னத்தம்பியை**
**கண்டி அம்மா**
காணவிரும்புகிறார்.
இந்தத் தகவலை
சின்னத்தம்பியிடம் தெரிவித்து
**போதகர் ஐயாவை**
தொடர்புகொள்ளவும்.

077 063 9711
**(போதகர் ஐயா)**
சாவகச்சேரி.
(44919) (45.6.3)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**
**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும்**
**பரீட்சைகள் அலகு**

## வெளிவாரிப் பரீட்சைகள் 2011

1. கலைமுதற் தேர்வு 2011 (வெளிவாரி)

மேற்படி பரீட்சையை 03.03.2014 திங்கட்கிழமை தொடக்கம் 22.03.2014 சனிக்கிழமை வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 26.02.2014 புதன்கிழமை தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு
**021 222 3612**
என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்** - 19.02.2014

# முழு முகத்தையும் மூடும் தலைக்கவசத்துக்கு தடை

கொழும்பு,பெப்.21
முழு முகத்தையும் மறைக்கும் தலைக்கவசத்தைத் தடை செய்வதற்கான சட்டங்களுக்கு தேவை எழுந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.
முழு முகத்தையும் மூடி மறைக்கும் வகையிலான தலைக்கவசம் அணிந்து சென்ற ஆயுததாரிகளால் நீர்கொழும்பில் நகைக்கடை மற்றும் நாணய பரிவர்த்தனை நிலையத்தில் 20 மில்லியன் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டது.
அதனையடுத்தே இந்த வகையான தலைக்கவசங்கள் அணிவதைத் தடைசெய்வதற்கான சட்டங்களுக்கான தேவை எழுந்துள்ளது என்று அவர் கூறினார். (ச)


அஜித் ரோஹன

# மூடப்பட்டுள்ளது தொழுகை அறை

## பௌசியின் உத்தரவும் உதாசீனம்

கொழும்பு,பெப்.21
கொழும்பு பொது வைத்தியசாலையில் வைத்திய பேராசிரியர் றிஸ்வி சரீப் தலைமையில் 41 ஆம் இலக்க விடுதியில் திறக்கப்பட்ட தொழுகை அறை மூடப்பட்ட நிலையில் சிரேஷ்ட அமைச்சர் பௌசியால் மீளத் திறக்குமாறு உத்தரவிடப்பட்டும் இன்று வரை மீளத் திறக்கப்படவில்லை.
இவ்வாறு கொழும்பு வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கத்தில் அங்கம் வகிக்கின்ற அஸ்ரப் ஹுசைன் தெரிவித்தார்.
இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
திறக்கப்பட்ட தொழுகை அறை வைத்தியசாலைக்குள் உள்ள பன்சலையின் பௌத்த குருவினாலும் அவரது ஆதரவாளர்களினாலும் இழுத்துமுடப்பட்டுள்ளது.
இந்தநிலையில் ஏ.எச்.எம்.பௌசியைக் கொண்டு கடந்த புதன் கிழமை தொழுகை அறை திறந்து வைக்கப்பட்டது.
ஆனால் தற்போது வைத்தியசாலைப் பணிப்பாளரின் உத்தரவுக்கு அமைய பொறியியலாளர்களினால் தொழுகை அறை முகப்புக்கள் உடைக்கப்பட்டு அவை மாற்றப்படுவதாகவும் அறிய முடிகின்றது-என்றார். (ச-10)

# இலங்கைச் சிறைகளில் வாடும் கைதிகளையும் விடுவியுங்கள்

## தமிழக அரசின் நடவடிக்கையை முன்மாதிரியாக கொண்டு செயற்பட வேண்டும் என்கிறார் மனோ

யாழ்ப்பாணம்,பெப்.21
ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளை தமிழக அரசு விடுதலை செய்த, நிலைப்பாட்டை முன்மாதிரியாகக் கொண்டு, இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் குற்ற தண்டனை கைதிகளுக்கும், நீதிமன்ற விசாரணைக் கைதிகளுக்கும், பொலிஸ் விசாரணைக் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்க வேண்டும்.
இவ்வாறு இலங்கை அரசைக் கோருவதாக, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.
அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ராஜீவ்காந்தி கொலைக்குற்றவாளிகள் ஏழு பேருக்கு பொது மன்னிப்பு அளித்து விடுவிக்கப் போவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
அதற்கு முன்னர் இந்த வழக்கில் தூக்குத் தண் டனை விதிக்கப்பட்டிருந்த மூன்று கைதிகளின் தண்ட னையை ஆயுள் தண்டனை யாக மாற்றி உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருந்தது.
சுமார் 25 வருடங்களாக சிறை வாசம் இருந்த இந்த அரசியல் கொலை குற்றவாளிகளுக்கு இன்று தமிழக அரசும், உயர் நீதிமன்றமும் நிவாரணம் வழங்கி இருப்பதை ஜனநாயக மக்கள் முன்னணி வரவேற்கின்றது.


மனோ கணேசன்

### மறந்து விட்டோம்

இலங்கை அரசு தானே உருவாக்கிய கற்றுக்கொண்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றத் தவறிவிட்டது. மனித உரிமை மீறல்கள், அரசியல் தீர்வு ஆகியவை தொடர்பில் உலகுக்கு அளித்த உறுதிமொழிகள் எதையும் நிறைவேற்ற தவறிவிட்டது.
அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக வெறுமனே காலத்தைக் கடத்தி வந்துள்ளது.
2009 ஆம் ஆண்டு மே மாதம் போர் முடிந்து சில நாள்களுக்குள் ஐ.நா மனித உரிமை சபையில், இலங்கை தொடர்பாக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைப் பற்றி யாரும் பேசுவது இல்லை.
அதை அனைவரும் மறந்து விட்டார்கள். அந்தத் தீர்மானம் ஏறக்குறைய இலங்கை அரசை, பயங்கரவாதத்தை ஒழித்தமைக்காகப் பாராட்டிக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஆகும்.

### தார்மீக பொறுப்புண்டு

பயங்கரவாதத்தை ஒழித்தமைக்கு பாராட்டுத் தெரிவித்துவிட்டு, தேசிய நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக்கும்படி இலங்கை அரசை அந்தத் தீர்மானம் வலியுறுத்தியது. போருக்கு முன்னின்று உதவி செய்து, பெருந்தொகையான அப்பாவி மக்களின் மரணங்களுக்குக் காரணமாக இருந்த மேற்கத்தைய நாடுகளும், இந்தியாவும் இத்தகைய ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டதில் உடன்பட்டன.
ஆகவே மேற்கத்தைய நாடுகளும், இந்தியாவும் தமக்கு எதிராகச் சதி செய்கின்றன என்று இலங்கை அரசு சொல்வது பொய்.
அவர்களும் ஒன்று சேர்ந்துதான் இலங்கையில் போர் செய்தார்கள். அதனால் தான் அவர்களுக்கும், இந்தியாவுக்கும் இலங்கை தொடர்பில் இன்று தார்மீக பொறுப்பு இருக்கின்றது.

### உத்தமர் யாருமில்லை

இங்கே யாரும் உத்தமர்கள் கிடையாது. எல்லோரும் சேர்ந்து தமிழ் மக்களைசொல்லொண்ணாத் துன்பத்தில் அமிழ்த்தி விட்டார்கள். ஆகவே இன்று எல்லோரும் சேர்ந்து தான் நிவாரணம் தேட வேண்டும். -என்றார். (ச-5)

# புலிகளை அழித்தபோது கூட்டமைப்பையும் தடைசெய்திருக்க வேண்டும்

## அரசின் தவறால் ஜெனிவாவில் அழுத்தம் என்கிறார் பிரதி அமைச்சர் சரத் வீரசேகர

கொழும்பு,பெப்.21
"2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து, போரை முடிவுக்குக்கொண்டு வந்தபோதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தடைசெய்திருக்க வேண்டும். அன்று அவ்வாறு செய்திருந்தால் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அரசுக்கு இவ்வளவு அழுத்தங்களும், பிரேரணைகளும் வந்திருக்காது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்யாதமை அரசு விட்ட மாபெரும் வரலாற்றுத் தவறு."
இவ்வாறு பிரதியமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு மருதானையில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.
இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி 25 ஆவது ஜெனீவாக் கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது. இதன்போது இலங் கைக்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் பிரேரணைகளைக் கொண்டு வரவுள்ளன. இறுதிப் போரின்போது பிரபாகரனைக் கொல்லவேண்டாம் என சர்வதேசம் கூறியது. ஆனால், அன்று நாம் அவரைக் கொல்லாமல் வீட்டிருந்தால் இன்று இன்னும் பல ஆயிரக் கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டிருக்கும். ஐ.நா மனித உரிமைகள் சபை இலங்கைக்கு எதிராக இவ்வாறான அழுத்தங்களை கொண்டு வருவதற்கு தமிழ்த் தேசியக் கூட் டமைப்பே முக்கிய காரணம்.


சரத் வீரசேகர

இவர்கள் சர்வதேசத்துக்குச் சென்று இலங்கை குறித்து பொய்யான தகவல்களைக் கூறுவதாலேயே இன்று இலங்கை இவ்வாறான பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டிருக்கிறது.
2009 ஆம் ஆண்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடை செய்திருக்க வேண்டும்.
ஹிட்லர், முபாரக், சதாம் ஹுசைன் போன்றவர்கள் கொல்லப்பட்டபோது அவர்களின் கட்சிகளும் தடைசெய்யப்பட்டன. அதேபோன்று இந்தக் கூட்ட மைப்பையும் நாம் தடை செய்திருக்கவேண்டும். ஆனால், அவ்வாறு செய்யாது அரசு விட்ட வரலாற்றுத் தவறே இன்று ஜெனிவா அழுத்தங்களுக்குக் காரணமாக இருக்கின்றது - என்றார். (ச)

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



க.தணிகாசலம், த.வசந்தி, த.பாமினி, த.விதுஷா,
கி.ஜெகீரன், ஜெ.பத்மலோஜினி, ஜெ.லிபியன்
திதி: 21.02.2014
நிஜமாக நீங்கள் மறைந்து ஐந்தாண்டுகள் ஆனதோ!
நீங்கள் இல்லா மனை பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து – தினம் தினம் நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் – உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்
அல்வாய் தெற்கு.
மகன்: தனம்ஜெயன்,
அகிலன் குடும்பத்தினர்.
(44933)(3.6.4)

மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி
திருமதி
கமலாதேவி
மகாலிங்கம்
(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)
அன்னையின்
மடியில்
23.10.1945
ஆண்டவன்
அடியில்
24.02.2011
திதி: அபரபக்க ஸப்தமி
21.02.2014 வெள்ளிக்கிழமை



ஆண்டுகள் மூன்று ஆனதம்மா -ஆறவில்லை எம் மனசு
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
அல்லாரைப்பதியில் அமர்ந்திருக்கும் அறுகம்புலத்து
விநாயகனின் பாதம் பணிகின்றோம்.
ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!
சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை
கணவர், குடும்பத்தினர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மக்களின் சுகநலம் பேணுவதில் ஒன்றிணைந்த செயற்பாடு அவசியம்

சிகரெட், மதுபானம் போன்ற தீய பழக்கங்களிலிருந்து இந்த நாட்டின் எதிர்காலச் சந்ததியைப் பாதுகாப்பது அரசின் தலையாய கடமையாகும். அதனை நாடி நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்ட சட்டம் சிகரெட் பாவனையை ஓரளவு கட்டுப்படுத்த உதவும் என்று நம்பலாம். எனினும், முழுமையாகக் கட்டுப்படுத்தாது. காரணம், இந்தச் சட்டம் சிகரெட் உற்பத்தியாளர்களை பெரிய அளவில் கட்டுப்படுத்தவில்லை. சிகரெட் பாவனையாளர்களையே கட்டுப்படுத்துகிறது.

தனித்தனியாக அல்லாமல் பெட்டியாக சிகரெட் வாங்குவோரைக் கருத்தில் கொண்டதாகவே இச் சட்டம் வரையப்பட்டுள்ளது. புகைப்பிடிப்பதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைச் சுட்டிக்காட்டும் வகையில் சிகரெட் பெட்டிகளில் எச்சரிக்கைப் படங்களை வெளியிட வற்புறுத்தும் இந்தச் சட்டத்துக்கு, எதிர்க்கட்சிகள் உட்பட சகல கட்சிகளும் ஆதரவு வழங்கி ஏகமனதாக நிறைவேற்றியுள்ளன. இதன் பிரகாரம் சிகரெட் பைக்கெட்டின் முன் பக்கத்தில் 80சதவீத பகுதியிலும் பின்பக்கத்தில் 80சதவீத பகுதியிலும் எச்சரிக்கைப் படங்கள் இடம்பெற வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிகரெட் பெட்டிகளில் இத்தகைய எச்சரிக்கைப் படங்கள் இலங்கைக்குப் புதிதாக இருக்கலாம். ஆனால் நூறுக்கு மேற்பட்ட உலக நாடுகளில் இது அமுலில் இருந்து வருகிறது. ஆஸ்திரேலியா உட்பட சில நாடுகளில் சிகரெட் பெட்டியில் கிட்டத்தட்ட நூறு வீதம் இத்தகைய படங்கள் இடம்பெறுகின்றன. புகைப்பதால் ஏற்படும் வாய்ப்புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் விதத்தில் படங்கள் இடம்பெறவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிகரெட் பாவனையைக் கட்டுப்படுத்த அரசு வரிவிதிப்பு முறை உட்படப் பல்வேறு முறைகளையும் கையாண்டு தோற்றுப்போன நிலையிலேயே, தற்பொழுது சிகரெட் பெட்டிகளில் எச்சரிக்கைப் படங்களைப் பிரசுரிக்கும் நடைமுறை செயற்படுத்தப்படுகிறது. அதற்கும் அப்பால், சிகரெட் பெட்டிகளில் எச்சரிக்கைப் படங்களைப் பிரசுரிப்பதுடன் மேலும் சில கட்டுப்பாடுகளை விதிப்பது அவசியமாகும்.

புகையிலை உற்பத்தி நிறுவனங்கள் இளைஞர்களைக் குறிவைத்து நடத்தும் பிரசாரங்கள் நிறுத்தப்படவேண்டும். சிகரெட் நிறுவனங்களிடமிருந்து சுகாதாரப் பாதுகாப்பு வரியை அறவிடுவதன் மூலம் சிகரெட் பாவனையினால் நோய்வாய்ப்படுவோரின் சிகிச்சைக்குச் செலவிடப்படும் பணத்தில் ஒரு பகுதியை ஈடுசெய்வது குறித்தும் கருத்தில் கொள்ள வேண்டும்.

புகையிலை உற்பத்திப் பொருள் மற்றும் மதுபானப் பாவனை காரணமாக இலங்கையில் வருடாந்தம் சுமார் 20 ஆயிரம் பேர் நோய்களுக்கு உள்ளாகிறார்கள் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அரசு இலவச வைத்தியசேவைக்காக கோடிக்கணக்கான பணத்தைச் செலவிடுகிறது. இப்பணத்தில் ஒருபகுதி சிகரெட் மற்றும் மதுபாவனையாளர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு விரயமாவது இந்த நாட்டுக்குப் பெரும் சாபக்கேடாகும்.

நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் லட்சக்கணக்கானோர் வாழும்போது நாட்டில் பாவனையிலுள்ள சிகரெட், மது காரணமாக நோய்வாய்ப்பட்டவர்களுக்கு அரசு பெருந்தொகையான பணத்தை இலவச வைத்தியசேவை என்ற பெயரில் செலவிடுகிறது.

அரசு புகையிலை உற்பத்திப் பொருள் பாவனைக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் போதைவஸ்துப் பொருள்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படவேண்டும். புகையிலை உற்பத்திப் பொருள் போன்று போதை வஸ்துப் பொருள்களும் உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியவை. சமீப காலத்தில் மதுசார உற்பத்திக்குத் தேவையான எதனோல் சுங்கப் பகுதியினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள செய்திகள் ஊடகங்களில் வெளிவந்துள்ளன.

இந்த மோசடியில் அரசியல்வாதிகளுக்கும் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்பட்டது. அரசியல்வாதிகள் மத்தியில் மட்டும் அன்றி, சுங்கப்பகுதியினர், பொலிஸார் மத்தியிலும் ஊழல் இருப்பதால் இத்தகைய மோசடிகளைக் கட்டுப்படுத்துவது சுலபமானதல்ல. சிகரெட் பாவனை, போதைப் பொருள் பாவனை இவை இரண்டையும் ஒழிப்பதன் மூலமே ஆரோக்கியமான சமுதாயம் ஒன்றை உருவாக்க முடியும்.

# நீதிக்கு கிடைத்த வெற்றி

ராஜராஜன்

மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாக கடந்த 23 ஆண்டுகளாகச் சிறைவாசம் அனுபவித்து வரும் ஏழு பேரும் சிறையிலிருந்து சுதந்திரப் பறவைகளாகச் சிறகடித்து வெளியே வருவதற்கான காலம் கனிந்துள்ளது.

இந்த ஏழு பேரில் முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோர் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு தூக்குக் கயிற்றில் தொங்கும் அந்த நாளுக்காகக் காத்திருந்தனர். ஏனைய நால்வரும் ஆயுள் கைதிகளாகத் தமது ஆயுளை சிறையில் கரைத்துக் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் இந்திய உயர் நீதிமன்றம் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்து முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோரை விடுதலை செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தலைமையிலான தமிழக அமைச் சரவை உடனடியாகக் கூடி ஏழு பேரை யும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதெனத் தீர்மானித்துள்ளது. இதனால் ராஜீவ் கொலை வழக் கின் குற்றவாளிகள் விடுதலையாகி வெளியே வருவதற்கான ஒளிக்கீற்று பிரகாசமாகத் தெரிகின்றது.

இந்திய நாட்டின் மிகவும் பெருமை வாய்ந்த நேரு குடும்பத்தின் வாரிசான ராஜீவ் காந்தி 1991 ஆம் ஆண்டு தமிழ் நாட்டின் ஸ்ரீபெரும்புதூரில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சென்றபோது தற்கொலைக் குண்டுதாரி ஒருவரால் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணமெனக் குற்றம் சாட்டப் பட்டனர். அதன் பிரகாரம் பலர் கைது செய்யப்பட கொலையின் சூத்திரதாரியெனக் கூறப்பட்ட ஒற்றைக் கண் சிவராஜனும் அவரது சகாக்கள் சிலரும் தற்கொலை செய்து கொண்டனர்.

மேலும் இந்தக் கொலையில் முக்கிய குற்றவாளிகளாக இனம் காணப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ஜெயக்குமார், ரவிச்சந்திரன், றொபேர்ட் பயஸ் ஆகியோருக்கு தடா நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தாலும் பின்னர் பின்னால் குறிப்பிடப்பட்ட நால்வருக்கும் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

இந்த ஏழு பேரின் விடுதலை தொடர்பாக அவர்களது குடும்பத்தினரும், உலகம் பூராவுமுள்ள இன உணர்வுள்ள தமிழ் நெஞ்சங்களும் மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளன. கடந்த 23 ஆண்டுகளாக சிறைக் கூடத்தில் அடைபட்டுத் தமது இளமைக் காலத்தையும், மன நிம்மதியையும் இழந்த இந்த ஏழு பேரும் விடுதலையாகி வெளியே வருகின்றமையை ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் விடுதலையின் அடையாளமாகக் கொள்பவர்களும் இல்லாமல் இல்லை.

ஆனால் இவர்களின் விடுதலை ராஜீவ் காந்தியின் குடும்பத்தவர்களுக்கும் காங்கிரஸ் கட்சியினருக்கும் கடும் சினத்தை ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. ராஜீவின் மகனான ராகுல்காந்தி இது தொடர்பாகத் தெரிவிக்கையில்:-


'ஒரு முன்னாள் பிரதமரைக் கொன்ற கொலையாளிகளே விடுதலையானால் சாதாரண பொதுமக்களின் நிலை என்ன' என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

ராஜீவ்காந்தி என்ற தனிமனிதன் தனது அதிகாரத்தின் பலத்தைக் கொண்டு ஈழத் தமிழர்களுக்குப் புரிந்த அநியாயங்கள் எண்ணிலடங்காதவை. தமது தாயாரான அன்னை இந்திராகாந்தி ஈழத் தமிழர்கள்பால் கொண்டிருந்த அன்பையும், அனுதாபத்தையும் சிறிதும் கருத்தில்கொள்ளாது தமது அகம்பாவத்துடன் நடந்து கொண்டார். 1987 ஆம் ஆண்டு அமைதிப்படை என்ற பெயரில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் காலடி வைத்த ராஜீவ் காந்தியின் இந்தியப்படையினர் தமிழர்களுக்கு இழைத்த கொடுமைகள் எண்ணிலடங்காதவை. பலர் கொல்லப்பட்டனர். வேறு பலர் காணாமற்போயினர். ஏராளமான தமிழ்ப் பெண்கள் பாலியல் ரீதியிலான கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குள் புலிகளை அழித்து முடிப்பதென்ற ராஜீவின் எண்ணத்தைச் செயலுருவில் நிறைவேற்றி வைப்பதற்கு இங்கு வந்த இந்தியப்படையினர் தம் முள் பலரை இழந்து நின்ற பரிதாப நிலையே இங்கு காணப்பட்டது. உல கின் இரண்டாவது மிகப்பெரிய இராணுவமான இந்தியப் படை அந்தப் பெருமையை இழந்து அவமானத்தில் மூழ்கியது. சீன, பாகிஸ்தான் நாடுகளுடனான போரின் போது இழந்த படை வீரர்களின் எண்ணிக்கையை விடப் புலிகளுடனான போரின்போது அதிகளவானவர்களை இழக்க வேண்டிய அவலமும் அவர்களுக்கு நேர்ந்தது. இறுதியில் இழப்புக்களுடனும், தாங்க முடியாத அவமானத்துடனும் இந்தியப் படையினர் தமது தாயகத்துக்குத் திரும்பிச் சென்றனர்.


மேலும் 1987 இல் உருவாக்கப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் இலங்கைத் தமிழர்களுக்குச் சிறிதும் உதவவில்லை. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட மாகாண சபைகள் அதிகாரங்கள் எதுவுமற்ற வெறும் காற்றுப்போன பைகளாகவே இன்று காணப்படுகின்றன. தமிழர் தரப்பின் ஒப்புதலின்றி தான்தோன்றித் தனமாக ராஜீவ் நடந்து கொண்டதன் விளைவு தான் இது.

மேலும் ராஜீவின் கொலையின் போது சில முக்கிய புள்ளிகளுக்குத் தொடர்பிருப்பதாகப் பல தடவைகள் கூறப்பட்டு அவர்களது கொலை தொடர்பான விசாரணைகளும் ஒரு தலைப்பட்சமாக நடந்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டது. ஆனால் இவை எதுவுமே கருத்தில் கொள்ளப்படவில்லை. ஒரு சிலர் தண்டிக்கப்பட்டே ஆக வேண்டும் என்ற வகையிலேயே





பேரறிவாளன்



முருகன்



சாந்தன்

விசாரணைகள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


இந்த நிலையில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் உண்மையிலேயே குற்றவாளிகள் தானா என்ற ஐயம் பலரிடமும் எழுந்ததைக் காண முடிந் தது. இதன் காரணமாகவே அவர்களின் விடுதலை தொடர்பான ஆர்வமும், எதிர்பார்ப்பும் உலகெங்கும் வாழும் தமிழர்களிடையே எழுந்தன.

தற்போது குற்றவாளிகள் ஏழு பேரின் விடுதலை தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் நடவடிக்கை தொர்டர் பாகப் பரவலாகப் பாராட்டுத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் ஜெயலலிதா வின் கடந்த கால நடவடிக்கைகளைத் தெரிந்து வைத்திருந்தவர்கள் அவர் மீது உண்மையிலேயே நன்றி உணர்வு டன் நடந்து கொள்ள மாட்டார்கள். செல்வி ஜெயலலிதா ஒருபோதுமே ஈழத்தில் நடந்த புலிகளின் போராட் டத்துக்கு ஆதரவு வழங்கியவர் அல்ல. மாறாக புலிகளைக் கடுமையாக விமர் சித்து வந்தவர் அவர். மேலும் பிரபா கரன் உலகத் தமிழர்களின் தலைவராக மதிக்கப்படுவதா என்ற காழ்ப்புணர்வும் அவரிடம் காணப்பட்டது. கடந்த இறுதிப் போரின்போது அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போது 'போர் என்றால் மக்களும் கொல் லப்படுவதில் ஆச்சரியம் இல்லை' என சர்வசாதாரணமாகக் கூறியதும் இவர்தான்.

இந்த நிலையில் விரைவில் இடம்பெறப் போகும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலை அவர் தமக்குச் சாதகமாக மாற்றுவதற்குத் திட்டமிட்டு வருகின்றார். வாய்ப்புக் கிடைத்தால் பிரதமர் பதவியை ஏற்பதற்கான குறிக்கோளும் அவரிடம் உண்டு. இந்த நிலையில் தமிழ் நாட்டில் தமது செல்வாக்கை அதிகரிக்கும் நோக்கத்தின் அடிப்படையிலேயே ராஜீவ் காந்தி கொலையின் குற்றவாளிகளை விடுதலை செய்யும் முடிவை அவர் மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது.

எது எப்படியோ யாரும் நன்மை அடைந்து விட்டுப் போகட்டும், அதில் கவலையில்லை. ஆனால் குற்றம் இழைக்காதவர்கள் தண்டனையை அனுபவிப்பது மிகக் கொடுமையானது. இதில் நீதி தேவதை தனது கருணையைப் பொழிந்து விட்டாள் என்றுதான் கூற வேண்டும்.

# சாரணியத்தை உலகுக்கு அறிமுகம் செய்த பேடன்பவல் பிரபு



**சாரணியத்தை உலகுக்கு தந்த தந்தை பேடன் பவல் பிரபுவின் 157 ஆவது பிறந்த தினம் நாளையாகும் (பெப்ரவரி 22). அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

இ.தில்லைவாசன்
*ஜனாதிபதி சாரணன்*
*உதவி மாவட்ட சாரண ஆணையாளர்*
*யாழ்ப்பாணம்.*

சாரணியத்தின் தந்தையின் பிறந்த தினத்தையொட்டி அவரது வாழ்க்கை வரலாற்றை உலக மக்கள் அறியச் செய்வது சாரணர்களின் கடமையாகும்.

"என்னால் கூடுமான வரையில் எனது சமயத்துக்கும் தேசத்துக்கும் எனது கடமைகளைச் செய்வேன் என்றும், எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரியவும் சாரண விதிகளுக்கு அமைந்து பணிந்து நடக்கவும் என் கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்" என்ற உன்னத சாரணிய வாக்குறுதியை சாரணிய தந்தை உலகுக்குத் தந்துள்ளார்.

இந்த உலகில் சாரணச் சிறார்கள் சிறந்த உன்னதமான மனிதர்களாய் வாழ்வதற்கான வாழ்க்கை முறைகளை "பத்து சாரண விதிகளாக" சாரணத் தந்தை வகுத்துள்ளார்.

சாரணச் சிறார்கள் உலக வாழ்க்கைக்கு வேண்டிய சகல துறைகளையும் கற்று சிறந்து விளங்குவதற்காக தகுதிகாண் சின்னங்களை உருவாக்கியுள்ளார். தகுதிகாண் சின்னங்களைப் பெறுவதற்கு ஒவ்வொரு துறைகளிலும் அதாவது சித்திரக்கலை, படப்பிடிப்புக்கலை, மொழிபெயர்ப்புக்கலை, முதலுதவிக்கலை, நீச்சல் கலை, மரங்கள், மிருகங்கள், பறவைகள் பற்றி அறிதல், பாசறை அமைக்கும் கலை, துவிச்சக்கரவண்டி திருத்தும் கலை, குடும்பத்தில் மகிழ்ச்சியாக வாழ்தல், சமையல் கலை, விளையாட்டுக்கள் என அறுபதுக்கும் மேற்பட்ட கலைகளில் சாரணர்கள் தேர்ச்சி பெறுதல் வேண்டும். கல்லூரிக் கல்வி மூலம் ஒரு துறையில் மட்டும் பாண்டித்தியம் பெறும் சாரணன் சாரணிய வாழ்க்கையில் தான் பெற்ற சகலதுறை தேர்ச்சிகளுடன் உலகில் சகல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்ற பூரண மனிதனாக வாழ வழி அமைத்துள்ளார் சாரணியத் தந்தை.



சாரணியத்தின் தந்தை எனப் போற்றப்படும் பேடன்பவல் 1857 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி இங்கிலாந்திலே இலண்டன் நகரிலே கென்றீற்ரா கிறேசிக்கும் றொபேட் கிறேஸ் பேடன் பவலுக்கும் ஏழாவது குழந்தையாகப் பிறந்தார். இவருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் இராபர்ட்டு ஸ்டீவன்சன் சிமித் பேடன்பவல் ஆகும்.

பேடன்பவல் கல்வி கற்கும் காலத்தில் கல்லூரிக்கு அருகில் உள்ள குறுங்காட்டில் மிருகங்கள், பறவைகளை பின் தொடர்ந்து சென்று அவற்றின் வாழ்க்கை முறைகளை அவதானித்து வந்தார். தனது நான்கு சகோதரர்களுடனும் இங்கிலாந்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பாசறை வாசங்கள் அமைத்து வாழ்ந்து வெட்டவெளி வாழ்க்கையை வெகு இன்பமாகக் கழித்து வந்தார். அத்துடன் சித்திரக்கலையிலும் மிகவும் சிறந்து விளங்கினார்.

19 வயதிலே படிப்பில் பட்டம் பெற்று இராணுவத்திலே இணைந்தார். 26 வயதில் தளபதியாக பதவி உயர்வு பெற்றார். பேடன்பவலின் சாரணியத் திறமையையும் சுவடு தொடரும் திறமையையும் கண்டு சுதேசிகள் "இம்பீசா" என்று பெயரிட்டு அழைத்தனர். இதன் பொருள் "ஒரு போதும் துயில் கொள்ளா ஓநாய்" என்பதாகும். 1899 ஆம் ஆண்டில் "உபதளகர்த்தர்" பதவிக்கு உயர்த்தப்பட்டார். 1900 ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி மேப்கிங் நகரம் காப்பாற்றப்பட்டது. பேடன்பவல் "மேஜர் ஜெனரல்" ஆக பதவி பெற்றார். 1901 ஆம் ஆண்டு பெரும் வெற்றி வீரனாக தாய்நாடு திரும்பினார். இந்தியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் தான்பெற்ற அனுபவங்களையும் சிறுவர் நூல்களையும் படித்து 1903 ஆம் ஆண்டு "சாரணியத்துக்கான துணை" என்னும் நூலை பகுதி பகுதியாக எழுதினார். பேடன்பவல் தனது 50 ஆவது வயதில் இங்கிலாந்துக் கால்வாயில் அமைந்துள்ள "பிறவுன்சி தீவிலே" இருபது சாரணச் சிறார்களுடன் பாசறை வாசம் அமைத்து சாரணப் பயிற்சிகளை வழங்கினார்.

51 வயதில் "இளைஞர் சாரணியம்" என்னும் நூலை வெளியிட்டார். இந்த நூல் பாடசாலைகளில் பாடநூலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

52 ஆவது வயதில் இராணுவத்தில் இருந்து விலகி இரண்டாவது வாழ்க்கையை சாரணியத்துக்காக வாழ்ந்தார். பேடன்பவலின் சகோதரி செல்வி அக்னல் முதலாவதாக பெண் சாரணராகச் சேர்ந்தார்.

53 ஆவது வயதில் பெண்கள் சாரணியத்தையும் கடற் சாரணர் பிரிவையும் ஆரம்பித்தார்.

1912 ஆம் ஆண்டில் ஒலைவ் சென்கிளயர் சோம்ஸ் என்பவரைத் திருமணம் புரிந்து கொண்டதன் பயனாக மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையானார்.

1912 ஆம் ஆண்டிலேயே இலங்கையில் மாத்தளைக் கிறிஸ்தவக் கல்லூரியில் F.G.ஸ்ரீ பன் அவர்களால் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது.

1916 இல் "யாழ்ப்பாண மண்ணில்" ஐந்து கல்லூரிகளில் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவையே அவையாகும்.

அதே ஆண்டில் சாரணியத் தந்தையால் 6½ வயது தொடக்கம் 11 வயதினருக்கான குருளைச் சாரணர் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1918 ஆம் ஆண்டில் 18 வயது தொடக்கம் 24 வயதினருக்கான திரிசாரணர் பிரிவை ஆரம்பித்தார். இலங்கையில் கடற் சாரணியமும் ஆரம்பிக்கப்பட்டது.

64 வயதிலும், 77 வயதிலும் சாரணியத் தந்தை பாரியாருடன் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டார். அந்தப் பயணத்தின்போது யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்தார். சாரணத் தந்தை யாழ். மண்ணில் காலடி வைத்தமையின் பயனாக இன்று யாழ்ப்பாண சாரணியம் 100 ஆவது சாரணிய ஆண்டை நோக்கி வளர்ந்து வருகின்றமை குறப்பிடத்தக்க விடயமாகும்.

1941-01-08 இல் கென்னிய பிரதேசத்திலே மிகவும் இயற்கை அழகு வாய்ந்த மலை அடிவார நைஜீரிய கிராமத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து 84 வயதுக்கு ஒரு மாத காலத்துக்கு முன்னதாக இறைவனடி சேர்ந்தார்.

சாரணியத் தந்தை அவர்கள் "இளைஞர் சாரணியம்" என்னும் நூலின் முகவுரையில் கூறியதாவது:-

ஓர் உண்மையான சாரணன் மீது மற்ற இளைஞர்களும் பெரியோரும் நம்பிக்கை கொள்ளலாம். எவ்வளவு கஷ்டம் வந்தாலும் தன் கடமையை ஆற்றத் தயங்கமாட்டான். எவ்வளவு இடரும் துன்பமும் முன்னிருந்தாலும் எந்நேரமும் இன்முகம்காட்டி நடப்பான் என்றும் பெருமையாகப் பாராட்டி நடப்பர்.

சாரணியத் தந்தையின் நம்பிக்கைக்கு அமைவாக சாரணிய வாக்குறுதியையும் சாரணிய விதிகளையும் சாரணர்கள் கடைப்பிடித்து சமயத்துக்கும் தேசத்துக்கும் பிறருக்கும் உதவி புரிகின்ற நல் ஒழுக்கமுடைய கலை, கலாசார விழுமியங்களுக்கு அமைவாக நற்பிரஜைகளாக உலகில் வாழ்வதற்காக சாரணியத் தந்தை சாரணியத்தைத் தந்துள்ளார்.

# செந்தமிழை பாதுகாப்போம்

**உலகின் பரந்துபட்ட பல்லாயிரக் கணக்கான மொழிகளின் தாய்மொழி தினம் இன்று பெப்ரவரி 21 ஆகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமகிறது.**

சியாமளா சிவகுமார்,
ஆசிரியர் (பரந்தன் இ.ம.வி.)

மனிதனை ஏனைய விலங்குகளிலிருந்து வேறுபடுத்தி, தனித்துவத்தைக் கொடுப்பது பேச்சு. இந்தப் பேச்சானது இன்று நேற்று வந்த ஒன்றல்ல. அது நீண்ட பரிமாணத்தைக் கொண்டது. பேச்சாற்றலானது மொழியுடன் மிக நெருங்கிய தொடர்புடையது. மொழிகள் யாவும் ஒரு சமூகத் தின் கலாசார, விழுமிய கோட்பாடுகளின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

தாய் மொழி என்றால் என்ன? என்பதற்கு பல தரப்பட்டோர் பலதரப்பட்ட வரைவிலக்கணங்களைக் கூறியுள்ளனர். "ஒருவரின் தாய், தந்தை பேசும் மொழியே தாய் மொழி" எனச் சிலர் வரைவிலக்கணப் படுத்தியுள்ளனர். இன்னும்சிலர் 'பிள்ளை வளரும் சூழலில் எந்த மொழி யைக் கற்றுக் கொள்கிறதோ அதுவே தாய்மொழி' எனக் கூறியுள்ளனர். இவ்விதம் பல்வேறு வரைவிலக் கணங்கள் கூறப்பட்டாலும் "ஒருவன் தனது விருப்பு வெறுப்பு, ஆசை, உணர்வு என்பவற்றைச் சிந்தித்து வெளிப்படுத்தும் மொழியே தாய் மொழி" என பொதுவாக வரை விலக் கணப்படுத்தியுள்ளனர். ஒருவன் சிறு பராயம் முதல் தனது உணர்வுகளை வெளி யிடப் பிரயோகிக்கும் மொழி தாய்மொழி.

அண்மைக் காலமாக பெரும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் ஒரு விடயமாக உலகமொழிகள் ஒன்றையொன்று விழுங்கி விடும் அளவில் நிலைமை மோசமடைந்து வருகின்றமை கண்கூடு. இதனாலேயே தாய்மொழிதினத்தை ஒவ்வொருவரும் கொண்டாட வேண்டிய சூழல் உரு வாகியுள்ளது.

முதன் முதலில் தாய்மொழித்தினம் கொண்டாட வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது? என நோக்குவது இன்றைய நாளில் அவசியமாகின்றது.

1952 இல் கிழக்கு பாகிஸ்தான் என அழைக்கப்பட்ட வங்காள தேசத் திலே வங்காள மொழியைத் தவிர்த்து உருது மொழியையே அங்கீகரிக்கப்பட்ட மொழியாக அந்த நாட்டரசு பிரகடனப் படுத்தியிருந்தது. இதனால் அந்த நாட்டுப் பல்கலைக்கழக மாணவர்கள் வங்க மொழியை தாய் மொழியாக அங்கீகரிக்க வேண்டுமெனப் போராடினர். இந்தப் போராட்டத்தில் பல மாணவர்கள் உயிரிழந்தனர். இதனைக்கண்ணுற்ற ஐ.நா. சபையின் யுனெஸ்கோ அமைப்பினர் ஆச்சரியமுற்றனர். ஒரு மொழிக்காக தமது உயிர்களை இழந்த மாணவர்களை நினைவு கூரும் வகையில் யுனெஸ்கோ 1999 ஆம் ஆண்டு தாய் மொழி தினத்தைப் பிரகடனப்படுத்தியது 2000 ஆம் ஆண்டு முதல் தாய் மொழித் தினம் சர்வதேச ரீதியாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

சர்வதேச தாய்மொழி தினம் மூலம் ஒவ்வொரு நாட்டு மக்களும் தத்தமது தாய் மொழி அந்தஸ்தைப் பேணவும், பலதரப்பட்ட சமூக மொழிகள் அவற்றின் பயன்பாடு தனித்துவம் ஒற்றுமை போன்றவற்றை உறுதியுடன் கடைப் பிடிக்கவும் வேண்டும் என யுனெஸ்கோ எதிர் பார்க்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் தாய் மொழி உண்டு. அதனை எக் காரணம் கொண்டும் இழந்து விடாது பாதுகாப்பதில் ஒவ்வொருவரும் அக்கறையுடையவர்களாகத் திகழ வேண்டும்.

பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வியை அவர்களது தாய் மொழியிலேயே கற்பிக்க வேண்டும் என்பது எமது நாட்டு கட்டாயக் கல்விச் சட்டமாகும். தாய்மொழிக் கல்விக்கும் ஊக்கம் கொடுத்தல் என்பது ஏற்றுக்கொள்ளப் பட்டாலும் காலத்தின் கோலம், நாகரிக வளர்ச்சியினால் இளம்பராயத்துப் பிள்ளைகளை தாய்மொழியிலிருந்து பிரித்து வேற்று மொழியில் கற்கவைக்கும் சூழல் அண்மைக் காலமாக உருவாகி வருகின்றது.

ஒருவர் தனது கலாசாரம், பண்பாடு, நாகரிகம், கலை, இலக்கியம், தத்துவம், இசை, நடனம் என்பவற்றின் தொடர்புகளை தாய்மொழி மூலமே அறிந்து கொள்ள முடியும். தாய் மொழி யைக் கற்றுணர்ந்த பின் ஏனைய மொழிகளைத் தாய்மொழி யூடாகக் கற்கும்போது இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

சர்வதேச தாய்மொழித்தினம் என்பது ஒரு தாய் மொழிக்கான தினம் அல்ல. உலகெங்கும் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. அந்த வகையில் எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை நாம் போற்ற வேண்டும். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல இனிதாவ தெங்கும் காணோம்" என்பதிலிருந்து தமிழ்மொழியின் சிறப்பை நாம் உணர முடியும்.

உலகில் ஆயிரம் ஆயிரம் மொழி கள் பேசப்பட்டாலும் அவற்றில் தமிழ், சீனா, சமஸ்கிருதம், இலத்தீன், ஹிப்ரு, கீரிப் போன்ற வையே செம்மொழி அந்தஸ்தைப் பெற்றுள்ளன. அவற்றில் சிறப்புடன் முத லிடம் வகிப்பது எமது தமிழ் மொழிதான்.

தமிழ்மொழி மட்டும் மனித சிந்தனை. அதன் மிக நுண்ணிய உணர்வுகளை மிகத்துல்லியமாக அழுத்தத்திருந்தமாக உணர்த்தும் ஆற்றல் படைத்தது. சங்கம் அமைத்து வளர்த்த செம்மொழியாம் எம் தாய் மொழித் தமிழ்.

உலக நாடுகள் பலவற்றில் தாய் மொழிகள் பல பல்வேறு காரணங்களால் அழிவடைந்து வருகின்றன. கலாசாரம், பண்பாடு அழியும் போது தாய்மொழி அழிவுறும். எமது நாட்டில் இன்று ஆங்கில மோகம் அதிகரித்துச் செல்கிறது. எமது வழித்தோன்றல்கள் தாய்மொழியை மறந்து, இழந்து விடுவார்களோ என்ற அச்சம் மனதில் எழுவது தவிர்க்க முடியாததாக உள்ளது.

தாய் மொழியைப் பாதுகாக்க ஒவ்வொரு சமூகமும் பாடுபடும் இவ்வேளையில் எமது தாய் மொழியாம் தமிழ் மொழியைக் காப்பது அவசியம். ஒவ்வொருவரும் தாய்மொழியில் பேசவும், எழுதவும், வாசிக்கவும், தெரிந்திருத்தல் வேண்டும் என்பதே இன்றைய தாய்மொழித் தினத்தில் நாம் எடுக்கும் உறுதியாகும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** சின்னச் சின்ன சந்தர்ப்பங்களையும், வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் மதிப்பு அதிகரிக்கும்.



**இடபம்:** அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் ராஜதந்திரத்தை உடைத்தெறிவீர்கள்.



**மிதுனம்:** உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தைத் தெரிந்து கொள்வீர்கள். உறவினர்களின் அன்புத்தொல்லை குறையும். புதிய நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள்.



**கடகம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். நீண்ட நாள்களாக தள்ளிப் போன காரியம் முடியும். பயணங்களால் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும்.



**சிங்கம்:** திட்டவட்டமாக சில முடிவுகள் எடுப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களைத் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களைச் சொல்லித் தருவார்.



**கன்னி:** சில தினங்களாக இருந்த அசதி, சோர்வு, கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரி ஒத்துழைப்பார்.



**துலாம்:** சின்னச் சின்னப் பிரச்சினைகள் குடும்பத்தில் தலைத்தூக்கும். அநாவசிய பேச்சைத் தவிர்ப்பது நல்லது. எல்லோரும் உங்களைக் குறை கூறுவார்கள். வியாபாரத்தில் வேலையாள்களின் தொந்தரவுகளை விட்டுப்பிடிப்பது நல்லது.



**விருச்சிகம்:** எடுத்த வேலைகளை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள்.



**தனுசு:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நீண்ட நாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார். வியாபாரத்தில் பிரபலங்கள் வாடிக்கையாளர்களாவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.



**மகரம்:** முயற்சியால் முன்னேறுவீர்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் வேலையாள்களின் தொந்தரவு குறையும். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும்.



**கும்பம்:** நேர்மறை எண்ணங்கள் விலகும். புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். காணாமல் போன முக்கிய ஆவணம் ஒன்று கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.



**மீனம்:** தேவையற்ற அலைச்சலுக்கு ஆள்படுவீர்கள். யாரும் உங்களைப் புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களால் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

## நாளை

**மாசி-10 சனிக்கிழமை | 22.02.2014**

திதி: அட்டமி பி.இ.06.05 வரை
நட்சத்திரம்: விசாகம் கா.07.44 வரை
சுபநேரம்: 03.31-05.01 வரை
இராகுகாலம்:.09.31-11.01 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




### தன்னலமற்ற பணியே உண்மைத் துறவு

இவ்வுலகம் கோழைகளுக்காக அல்ல. எந்தச் சூழ்நிலையிலிருந்தும் தப்பியோட முயலாதே. வெற்றியையோ தோல்வியையோ எதிர்நோக்காதே. முழுமையான தன்னலமற்ற உள்ளத்துடன் சேவையில் முன்னேறுக. வெற்றி பெறவே தோன்றியுள்ள மனம், திடநம்பிக்கையுடன் இணைந்து முனைந்து முன்னேறும் என்பதை உணர்க. வேலை செய்ய உனக்கு உரிமை இருக்கிறது. ஆனால் பயனை எதிர்பார்க்கும் அளவுக்குக் கீழ்மையடையாதே. ஓயாமல் உழைத்துக் கொண்டு இரு. ஆனால் அந்த உழைப்பில் ஏதாவது ஓர் இன்பத்தைக் காண். நல்ல செயல்கள் கூட ஒரு மனிதனை பந்தத்தில் பிணைத்துவிடும். ஆகையால் நற்செயல்களிலோ அல்லது பேரும் புகழும் தேடும் விருப்பத்திலோ உன்னைப் பந்தப்படுத்திக் கொள்ளாதே. இந்த இரகசியத்தை அறிந்தவர் பிறப்பு இறப்புச் சுழலைத் தாண்டி அமரர்களாகி விடுகின்றனர். சாதாரண துறவி உலகத்தைத் துறந்து வெளியே சென்று கடவுளைப் பற்றி எண்ணுகிறான். உண்மைத் துறவியோ உலகத்திலேயே வாழ்கிறான்; உலகம் அவனைக் கட்டுப்படுத்துவதில்லை.

தன்னலம் துறந்து காடு செல்லும், நிறைவு பெறாத ஆசாபாசங்களை எண்ணி எண்ணி இன்பமடைபவர் உண்மைத் துறவியரல்லர். வாழ்க்கை என்னும் போரின் மத்தியில் வாழ்க. குகையில் வாழும் போதும் தூங்கும் போதும் யாரும் அமைதியாக இருக்க முடியும். செயல்வெறி என்னும் சுழலில் நின்று, மையமான இடத்தை அடைக. அந்த இடத்தை அடைந்து விட்டால், உலகில் உன்னை எதுவும் அசைக்க முடியாது.

## விண்வெளியில் தங்கியுள்ள கழிவுகளை அகற்றப் புதிய திட்டம்




விண்வெளி ஆராய்ச்சியின் மற்றும் ஏனைய செயற்பாடுகளின் காரணமாக விண்வெளியில் தங்கியுள்ள கழிவுகளை அகற்ற புதிய திட்டம் ஒன்றை ஜப்பான் செயற்படுத்தவுள்ளது.

இதன்படி காந்தத் தன்மை கொண்ட வலைகளை விண்வெளியில் நிறுவுவதற்கு Japan Aerospace Exploration Agency (Jaxa) தீர்மானித்துள்ளது.

ரொக்கெட் மற்றும் செய்மதியுடன் இணைத்து நிறுவப்படவுள்ள இந்தக் காந்த வலை தொழில்நுட்பத்தை கஹாவா பல்கலைக்கழகம் முதன் முறையாக பரிசோதனை செய்துள்ளது.

இந்த வலைகள் 300 மீற்றர் நீளம் கொண்டவையாகவும், 30 சென்ரிமீற்றர் அகலம் கொண்டவையாகவும் இருப்பதுடன் முக்கோண வடிவத்தை உடையவையாகவும் காணப்படுகின்றன.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | | | | | |
| 8 | | 4 | 2 | 7 | | | 6 | |
| | | 2 | 9 | 3 | | 8 | | |
| 5 | | 3 | | | 2 | | 9 | 7 |
| | | 6 | 7 | 9 | 8 | 5 | | |
| 7 | 1 | 5 | | | | 2 | | 6 |
| | | 8 | | 2 | 9 | 6 | | |
| | 4 | | | 6 | 7 | 9 | | 3 |
| | | | | | | | 2 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 2 | 4 | 5 | 1 | 9 | 8 | 3 |
| 1 | 8 | 9 | 6 | 3 | 7 | 2 | 4 | 5 |
| 3 | 5 | 4 | 8 | 2 | 9 | 1 | 6 | 7 |
| 4 | 9 | 3 | 5 | 7 | 8 | 6 | 1 | 2 |
| 5 | 2 | 1 | 3 | 6 | 4 | 8 | 7 | 9 |
| 7 | 6 | 8 | 1 | 9 | 2 | 5 | 3 | 4 |
| 8 | 1 | 5 | 2 | 4 | 3 | 7 | 9 | 6 |
| 2 | 4 | 7 | 9 | 8 | 6 | 3 | 5 | 1 |
| 9 | 3 | 6 | 7 | 1 | 5 | 4 | 2 | 8 |



# மனித உடலின் உபாதைகளை கண்டுபிடிக்க புதிய தொழில்நுட்பம்

மனித உடலின் உட்பகுதிகளில் உண்டாகும் உபாதைகளைக் கண்டுபிடிப்பதற்கு PillCam என்ற கமராவைக் கொண்ட மாத்திரைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
இந்த மாத்திரைகள் 9 வருடங்களுக்கு முன்னரே உருவாக்கப்பட்டிருந்த போதிலும் இந்த வருடம்தான் (2014) Food and Drug Administration (FDA) அமைப்பு குறித்த மாத்திரைகளை பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.
இவை குரல் வளையில் ஆரம்பித்து சிறுகுடல், பெருங்குடல், குதம் போன்றவற்றினூடு பயணிக்கக்கூடியதாக இருப்பதுடன் அந்த அங்கங்களில் காணப்படும் உபாதைகளை துல்லியமாகக் கண்டறியக்கூடியன.

# வயதானவர்களுக்கான ஜப்பானின் அபார கண்டுபிடிப்பு



அதி கூடிய வயதானவர்களைக் கொண்டுள்ள ஜப்பான் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பயனாக உலகெங்கும் உள்ள வயதானவர்களுக்கு பயன்படக்கூடிய பொருள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
அதாவது முதியவர்கள் பயன்படுத்தும் Diaper துண்டினை அடிக்கடி மாற்றம் செய்ய வேண்டிய நிலை காணப்படுவதனால் அவர்கள் பிறரின் உதவியை நாட வேண்டி இருந்தது.
ஆனால் ஜப்பானின் டோக்கியோ பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆய்வுக் குழு ஒன்று, மீள்தன்மை கொண்டதும், குறித்த கால இடைவெளியில் மாற்றம் செய்வதற்கனா சமிக்ஞையை வழங்கக்கூடிய மின் சுற்றைக் கொண்டதுமான நவீன Diaper துண்டினை உருவாக்கியுள்ளது.
இதில் வ்யர்லெஸ் அலேர்ட் தொழில்நுட்பமும் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நொக்கியா அறிமுகம் செய்யும் முதலாவது அன்ரோயிட் கைபேசி

நொக்கியா நிறுவனம் இது வரையில் சிம்பியின் மற்றும் விண்டோஸ் இயங்குதளங்களை அடிப்படையாகக் கொண்ட ஸ்மார்ட் கைபேசிகளையே அறிமுகம் செய்து வந்தது.
இந்நிலையில் இந்தமாத இறுதியில் அன்ரோயிட் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட தனது முதலாவது ஸ்மார்ட் கைபேசியை வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.
நொக்கியா எக்ஸ் (Nokia X) என்ற இந்தக் கைபேசி தொடர்பான தகவல்கள் சில மாதங்களுக்கு முன்னரே வெளியாகியிருந்த போதிலும், தற்போது அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இதன் காரணமாக மீண்டும் மக்கள் மத்தியில் நொக்கியா கைபேசிகள் பலத்த வரவேற்பைப் பெறும் என்று எதிர்பார்க்கலாம்.



# கணினி வர்த்தகத்தை கைவிடும் சொனி

கணினி வர்த்தகத்தை கைவிடுவதோடு 5,000 ஊழியர்களை பணி நீக்கம் செய்ய சொனி நிறுவனம் முடிவெடுத்துள்ளது.
இதுகுறித்து சொனி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சொனி நிறுவன தயாரிப்புகளான பிராவியா தொலைக்காட்சி, காணொலி விளையாட்டு, பிளே ஸ்டேஷன் உள்ளிட்டவை களை உலகம் முழுவதும் மக்கள் ஆவலுடன் வாங்கிப் பயன்படுத்தி வந்தனர்.
இந்நிலையில் கடந்த ஓர் ஆண்டாக அமெரிக்காவின் அப்பிள் நிறுவனத்தின் தயாரிப்புகள் மற்றும் தென் கொரியத் தயாரிப்பான சம்சுங் போன்றவைகள் உலக சந்தைக்கு பெருமளவுக்கு வந்ததைத் தொடர்ந்து சொனி நிறுவனத் தயாரிப்பான கணினி விற்பனை மிகவும் குறைந்துவிட்டது.
இதனால் சொனி நிறுவனத்துக்கு கடந்த ஆண்டு மட்டும் ரூ.6,000 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது.
எனவே சொனி நிறுவனம் கணினி தயாரிப்பை உடனடியாக நிறுத்த முடிவு செய்துள்ளது.
மேலும் சொனியின் கணினித் தயாரிப்பை ஜப்பானைச் சேர்ந்த ஜே.ஐ.பி. நிறுவனத்துக்கு கணிசமான விலைக்கு விற்க முடிவெடுக்கப்பட்டுள் ளது.
இதனைத் தொடர்ந்து சொனி நிறுவனத்தின் கணினி தயாரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள ஜப்பானைச் சேர்ந்த 1,500 பேர், மற்ற நாடுகளில் உள்ள 3,500 பேர் உள்பட 5,000 பேர் பணி நீக்கம் செய்யப்படுகின்றனர்.
அவர்கள் சொனி நிறுவனத்தின் கணினி தயாரிப்புப் பிரிவை வாங்கும் புதிய நிறுவனத்தில் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
அதுமட்டுமல்லாமல், அவர்களை சொனி நிறுவனத்தின் ஏனைய தயாரிப்புப் பிரிவுகளில் பணியமர்த்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருகிறதாம்.
மேலும் சொனி நிறுவனத்தின் கைபேசி மற்றும் காணொலி விளையாட்டு உள்ளிட்ட வர்த்தகத்தை பெருக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் இதுபோன்ற தயாரிப்புகளில் அதிக கவனம் செலுத்தவும் பணியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.


# மகத்தான சாதனை படைத்தது Twitch

உலகின் முன்னணி கேம் பிளார்ட்போர்மாக திகழும் ருவிச் (Twitch), ஒரு மாதத்தில் ஒரு மில்லியன் வரையான பயனர்களைதான் எட்டிவருவதாகத் தெரிவித்துள்ளது.
இதன் அடிப்படையில் ஒரு மில்லியன் பயனர்களினூடாக மாதாந்தம் 45 மில்லியன் பார்வையாளர்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.
இந்நிறுவனம் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் அடுத்த தலைமுறைக்கான Sony PlayStation 4 Twitch அப்பிளிக்கேஷனை அறிமுகம் செய்திருந்தது.
அத்துடன் 20 சதவீதமான ருவிச் ஒளிபரப்பாளர்கள் சொந்தமாக PlayStation 4 சாதனத்தைக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ZTE அறிமுகப்படுத்தும் பெரிய திரையுடன் கூடிய கைபேசி

ZTE நிறுவனமானது பெரிய தொடு திரையைக் கொண்ட Nub ia Z7 என்ற ஸ்மார்ட் கைபேசியை மார்ச் மாதமளவில் அறிமுகம் செய்யவுள்ளது.
இக்கைபேசி 6.44 அங்குல அளவுடையதும், 2560 X 14 40 பிக்ஷல் அளவு உடையதுமான தொடு திரையைக் கொண்டுள்ளது.
இதில் Quad Core 2.3GHz Qualcomm Snapdra gon 800 Processor, பிரதான நினைவகமாக 2 ஜிபி அல்லது 3 ஜிபி நினைவகம் ஆகியனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் அன்ரோயிட்- 4.4 கிற்கற் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட இக்கைபேசி தொடர்பான ஏனைய தகவல்கள் வெளியிடப்படவில்லை.





# கேம் பிரியர்களுக்காக அறிமுகமாகும் புத்தம் புதிய மவுஸ்

கணினி கேம் பிரியர்களுக்காக Logitech G602 என்ற புத்தம் புதிய வயர்லெஸ் தொழில்நுட்பத்தைக் கொண்ட மவுஸ் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
Windows 8, Windows 7, Windows Vista மற்றும் Mac OSX 10.6.8 ஆகிய இயங்குதளங்களில் செயற்படக்கூடிய இந்த மவுஸ் 11 பொத்தான்களை உள்ளடக்கியுள்ளது. இரண்டு AA வகை மின்கலங்களில் 125 அல்லது 250 மணித்தியாலங்கள் வரை தொடர்ச்சியாகச் செயற்படக்கூடிய வகையில் வடிவமைக் கப்பட்டுள்ளது. இதன் எடையானது 153g ஆகவும் காணப்படுகின்றது.

## யாழ். ஆஸ்பத்திரியில் கண்டெடுத்த காதணி

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ். போதனா வைத்தியசாலையில் எக்ஸ் கதிர் படம் எடுக்கும் இடத்தில் பெண்கள் அணியும் காதணி (தோடு) ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கண்டெடுக்கப்பட்ட தோடு வைத்தியசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்தைக் காட்டி அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரி அறிவித்துள்ளார்.

(ஒ-400)

## தகவல் தொழில் நுட்ப பரீட்சையில் தீவகத்தில் 88 வீதமானோர் சித்தி

யாழ்ப்பாணம்,பெப்.21

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் கடந்த டிசெம்பர் மாதத்தில் உயர்தர மாணவர்களுக்கு இடையே நடத்தப் பட்ட தகவல் தொழில்நுட்பப் பரீட்சையில் தீவக வலயத்தில் 88 வீதமானவர்கள் சித்தியடைந்துள்ளனர். இது கடந்த வருடத்திலும் 12 வீதம் அதிகரிப்பு என்று தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோண்குயின்ரஸ் தெரிவித்தார்.

"நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நூறு வீதமும் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் 83 வீதமும், றோ.க. பெண்கள் பாடசாலையில் 88 வீதமும், காரைநகர் தியாகராஜா மகாவித்தியாலயத்தில் 89 வீதமும், யாழ்ற்றன் கல்லூரியில் 90 வீதமும், வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் 82 வீதமும், ஊர்காவற்றுறை புனித அந் தோனியார் கல்லூரியில் நூறு வீதமும், கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயத்தில் 87 வீதமும், புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் 80 வீதமும், நயினாதீவு மகா வித்தியாலயத்தில் 86 வீதமும் சித்தியடைந்துள்ளனர்.

இதேவேளை இந்தப் பரீட்சைக்கு தீவக வலயத்திலிருந்து தோற்றிய 183 மாணவர்களில் 161 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்" என்றும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(வ-7)

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பவதி அருளானந்தம்



யாழ். வண்ணார்பண்ணை, கொல் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் இல.45, மணிக்கூட்டு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி அருளானந்தம் 17.02.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் -பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், ஆனைப்பந்தியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தருமலிங்கம்- அன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற அருளானந்தத்தின் மனைவியும், கலைவாணன், வசந்தகுமாரி (லண்டன்), சரவணபவானந்தன், ரவி (ஜேர்மனி), புஸ்பமாலா (கனடா), மதிவண்ணன், ரவிசங்கர், ஜெயந்தி, ரவிச்சந்திரன் ஆகியோரின் தாயாரும், ஜெயபாலன் (லண்டன்), சந்திரகாந்தா, ஜெயந்தி (ஜேர்மனி), லோகேஸ்வரன் (கனடா), பாலசரஸ்வதி, சசிகலா, சசீலன் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், மகாலிங்கம், இராசலிங்கம் மற்றும் தனபாலசிங்கம், தனலட்சுமி, இராஜகோபால் ஆகியோரின் சகோதரியும், ஹரிஸ், ஜெயவாணி, ஜெயதீபன், ஜெயறூபி (லண்டன்), காவியா(ஜேர்மனி), மயூரா (கனடா), மதுஷன், ஹரனி, மகேசவர்மன், மிதுஷன், சமித்திரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2014) வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணியளவில் இல.45, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயிலடி) இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 768 6629, 077 721 1319 (சி12502) (6.4)

தகவல்:
குடும்பத்தினர்.

## கணினிப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் அமைந்துள்ள கணினி வள நிலையத்தில் கணினி கற்கை நெறிக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை வலய கணினி வளநிலையத்தில்பெற்று எதிர்வரும் 28 ஆம் திகதிக்குமுன்னர் விண்ணப்பிக்குமாறுவலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
24.04.1992

இறைவன் அடியில்
16.02.2009

திதி: 21.02.2014

### செல்வன் விமலகுரு ஜனோஜன்

(மு/யோகபுரம் மகா வித்தியாலயம் - மாணவன்)

எம் நெஞ்சில் வாழ்ந்த நிலவாய்
நினைவுகளை விதைத்த உருவே!
நீ மட்டும் பிரிந்து போனதேன்?
எம் செல்வமே! எம்முடன் கூடி வாழ்ந்து உன்
பாசத்தை நினைவாக தந்துவிட்டு, பாரினிலே எம்மை
தவிக்க விட்ட மகனே நீ மட்டும் போனதேனோ?
கண்களுக்குள் சிறகடிக்கும் உன் பால்முகம் இன்று
எம் கண்களில் கண்ணீரை தந்ததேனோ!

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணா, தங்கை, அத்தான்மார்,
மருமகன் அனோஜன்.

மு. விமலகுரு
7ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(44916)(45.6)

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் விஜய வருஷம் மாசி மாதம் முதலாம் நாள்
13.02.2014 வியாழக்கிழமை சிவபதமடைந்த

### ஸ்ரீமதி யோகமலர் ஜெயராமக்குருக்கள்

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

மாசி 10ஆம் நாள் (22.02.2014) சனிக்கிழமை மு.ப. 10.00 மணி தசாகம்
மாசி 11ஆம் நாள் (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை ஏகோதிட்டம், மாசிகம்
மாசி 12ஆம் நாள் (24.02.2014) திங்கட்கிழமை சபிண்டீகரணம்
மாசி 13ஆம் நாள் (25.02.2014) செவ்வாய்க்கிழமை கிருஹயக்ஞம்,சமாராதனை

மேற்படி தினங்களில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் சமாராதனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


சன்னதி வீதி,
தம்பாலை, அச்சுவேலி.
021 205 8326

(44930)(12.3.6)

கந்த ஜெயராமக்குருக்களும்
குடும்பத்தினரும்.

## மரண அறிவித்தல்

### கந்தையா குழந்தைவேலு



யாழ்.திருநெல்வேலியைப் (கேணியடி) பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும், மெல்போனில் வசித்தவருமாகிய கந்தையா குழந்தைவேலு 19.02.2014 புதன் கிழமை மெல்போனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னமுத்து தம்பதியரின் மூன்றாவது மகனும், தெய்வநாயகியின் (இளைப்பாறிய ஆசிரியர் - உரும்பிராய், சைவத்தமிழ் வித்தியாசாலை) அன்புக் கணவரும், அருள்ரூபன் (மெல்போன்), சிவரூபன் (சுவிஸ்), ஜெயரூபன் (மெல்போன்), முகுந்தன் (மெல்போன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தமலர், சிவகுமாரி (சாந்தி), ஹரிணி, மலர்விழி (சுஜாதா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, நாகலிங்கம், மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரியதர்ஷினி, அர்ச்சனா, சிவானி, கிஷோர், லவன், அருண், திவ்யா ஆகியோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் திங்கட்கிழமை (24.02.2014) அல்ரோனா மயானத்தில் (மெல்போன்) முற்பகல் 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: முகுந்தன் (மகன்).
மெல்போன், ஆஸ்திரேலியா.
0061 0403 047079

(44931)(2.6.3)

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.21
கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.
வித்தியாலய அதிபர் கா.சசிதரன் தலைமையில் நடை பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வலி.தெற்கு பிரதேச செயலர் எம்.நந்தகோபாலனும், சிறப்பு விருந் தினர்களாக வலிகாமம் கல்வி வலய சமூகக் கல்வி பாட ஆசிரிய ஆலோசகர் எஸ்.இராஜவரோதயம், சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.பி.பீரிஸ் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ)

♦♦♦

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை அதிபர் திருமதி சா. வாகீசன் தலைமையில் பாடசாலை மைதானத் தில் நடை பெறவுள்ளது.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற் குணராசாவும் கலந்து கொள்வர். (வ-10)

♦♦♦

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சீ.சிவநேசன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மைதிலி தேவராஜாவும் சிறப்பு விருந்தினராக குறித்த பாடசாலையின் ஓய்வு பெற்ற உப அதிபர் திருமதி சாவித்திரிதேவி யோகதாசனும் கலந்து கொள்வர். (வ)

♦♦♦

வரணி குடமியன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.
பாடசாலை அதிபர் வை.நாகநாதன் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு பிரதம விருந்தினராக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜாவும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோ சகர் ஸ்ரீரங்கனும் கலந்து கொள்வர். (வ-9)

♦♦♦

செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செல்வி சா.மாணிக்கம் தலைமை யில் நடைபெறும்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கரிகணன் பதிப்பக உரி மையாளர் திரு.திருமதி ராஜ்குமார் கலந்து கொள்வர். (வ)

♦♦♦

கைதடி சேது காவலர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி இ.திருஞானசிவம் தலைமையில் நடை பெறும்.
இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென் மராட்சி வலயக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப் பாளர் வே.பால சுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.துரைராஜா, வடமாகாண சபை கணக்காய்வாளர் வே.தயாளன் ஆகி யோரும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் அ.மனோரஞ்சிதனும் கலந்து கொள்வர். (ஓ-9-288)

♦♦♦

மட்டுவில் கமலாசனி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம் பெறும்.
அதிபர் தா.கணேசபாலேந்திரன் தலைமை யில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவ நாதன் கலந்து கொள்வார். (வ-9)

## பேடன் பவல் தின நிகழ்வுகள்

நெல்லியடி, பெப்.21
பருத்தித்துறை மாவட்ட இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் பேடன் பவல் தினம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் ச.திரவிய ராசா தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப் பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், சிறப்பு விருந் தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப் பாளர் ச.சற்குணராசா,கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ச.வேலழகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். அனைத்து சாரணர் களையும், பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது. (ஓ)

♦♦♦

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியின் பேடன்பவல் தின நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு சின்னத்தம்பி கலை அரங்கில் அதிபர் பா.அரியதாஸ் தலை மையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட சாரணர் ஆணையாளர் வே.சண்முகலிங்கம் கலந்து கொள்வார். (வ)

## மாற்றுவலுடையோருக்கு தொழிற்பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்.பெப்.21
யாழ்.வலுவிழந்தோர் புனர்வாழ்வுச்சங்கத்தால் மாற்று வலுவுடையவர்களுக்கான தொழில் பயிற்சி நெறிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்பட வுள்ளன.
மாற்றுத்திறனாளிகள் சுயதொழிலை மேற் கொள்ளக் கூடியதாக தையல், அழகுக் கலை, புத்தகம் கட்டுதல் ஆகிய பயிற்சி நெறிகள் 6 மாத காலத்தில் வழங்கப்படவுள்ளன.
பயிற்சி நெறியில் யாழ். மாவட்டம் உட்பட வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் இணைந்து கொள்ளலாம்.
ஆர்வமுடையோர் ஆடியபாதம் வீதி கொக்கு விலில் அமைந்துள்ள யாழ்.வலு விழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்துடன் தொடர்பு கொள் ளலாம். (வ-14)

# றெக்ஷியனின் மனைவி பிணை விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப். 21
நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலை வர் தானியல் றெக்ஷியனது கொலைக் குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள றெக்ஷியனின் மனைவியான அனித்தாவையும் பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ்.மேல்நீதிமன்றில்பிணைவிண் ணப்பம்தாக்கல்செய்யப்பட்டுள்ளது.
றெக்ஷியனது கொலைக் குற்றச் சாட்டில் ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரும் வடமாகாணசபை எதிர்க்கட்சித் தலைவருமான கந்தசாமி கமலேந்திரன் (கமல்), அனித்தா மற்றும் யசிந்தன் ஆகி யோர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் கமலைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி ஏற்கனவே யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண் ணப்பம் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. இந்த நிலையிலேயே அனித்தா சார்பிலும் பிணை விண் ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள் ளது.
கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக் கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் இரண்டா வது சந்தேகநபரான யசிந்தன் சார்பில் இதுதொடர்பான வழக்கு நடைபெறும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் இதுவரை சட்டத்தர ணிகள் எவரும் முன்னிலையாகி யிருக்க வில்லை.
நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலை வர் தானியல் றெக்ஷி யன் கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி சுட்டுக்கொல் லப்பட்டார். அவரது கொலை தொடர்பான குற்றச்சாட் டில் இந்த மூவரும் கடந்த டிசெம்பர் மாதம் தொடக்கம் விளக்கமறிய லில் வைக் கப்பட்டுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது. (வ-4)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**கலைப்பீடம்**
**இரண்டாம் அரையாண்டு விரிவுரைகள்**
**கல்வியாண்டு-2011/2012**

கலைப்பீட மாணவர்களுக்கான இரண்டாம் அரை யாண்டுக்கான விரிவுரைகள் யாவும் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

| | |
|---|---|
| கலைமாணி முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்கள் | -24.02.2014 |
| நான்காம் வருட மாணவர்கள் | - 10.03.2014 |
| சட்டமாணி முதலாம்,இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்கள்- | -24.02.2014 |
| நுண்கலைமாணி இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் | -11.03.2014 |

மாணவர்கள் அனைவரும் குறிப்பிட்ட திகதிகளில் விரிவுரை களுக்குத் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.

பதிவாளர்
18.02.2014
(சி/12524)(3.8.4)

**கிளி/பளை மத்திய கல்லூரி**
காணி கொள்வனவு நிதிக்காக பழைய மாணவர்சங்கம் நடத்தும்
**மாபெரும் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு**

மேற்படி பரிசு குலுக்கல் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.
குலுக்கல் திகதி பத்திரிகை மூலம் பின்னர் அறிவிக்கப்படும்.

தலைவர்/செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
**பளை மத்திய கல்லூரி.**
(சி/12522)(3.6.4)

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**யாழ்ப்பாணம்**
**வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி**
**2014**

**காலம்:**
**21.02.2014 வெள்ளிக்கிழமை**
**நேரம்:**
**பிற்பகல் 1.30 மணி**
**பிரதம விருந்தினர்:**
**திரு.கந்தசாமி சுசீந்திரன்**
BA, AIB (SriLanka)
(பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**பரிசில் வழங்கல்:**
திருமதி **ஜெயந்தி சுசீந்திரன்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**
(சி/12520)(3.6.4)

**ஆத்ம சாந்திக் கிரியை அழைப்பு**



எமது குடும்பத் தலைவர்
அமரர்
**கந்தையா துரைராஜா**
அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (21.02.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். மேற்படி கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

A9, பிரதான வீதி,
குஞ்சுக்குளம், மாங்குளம்.

**குடும்பத்தினர்.**

**முதலாம் ஆண்டு நினைவலைகள்**





மீசாலை மேற்கு, மீசாலையைச் சேர்ந்த

| அமரர் ஆறுமுகம் மார்க்கண்டு | திருமதி நாகம்மா மார்க்கண்டு |
|---|---|
| (சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ. சங்க தலைவர், சித்த மருத்துவ உற்பத்தி விற்பனை வைத்திய சேவை சங்க தலைவர்) | |
| மனம் மகிழ: 17-03-1940 | 05-07-1936 |
| மனம் நெகிழ: 04-03-2013 | 17-06-2012 |

ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை
எம் துயரம்
என்றென்றும் எம்மை விட்டகலா
உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்
சிவபாதம் பவுண் சிபீக்கா (ஜேர்மனி)
(C/12519)(2.6.3)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



திருமதி
**இராசம்மா இராசா**
தோற்றம்
04.04.1924
மறைவு
23.01.2014

கடந்த 23.01.2014 சிவபதமடைந்த எங்கள் அன்புத் தாயாரின் இறுதிச் சடங் கில் கலந்துகொண்ட அனைவருக்கும். தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும். கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோ ருக்கும். நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறோம். நாளை (22.02.2014) சனிக்கிழமை வவுனியா. பூந்தோட்டத்தில் உள்ள அவரது மகள் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பூந்தோட்டம், வவுனியா
(44933)(45.3.6)
குடும்பத்தினர்.

# பூநகரி பிரதேச சபை

## பொது அறிவித்தல் - 2014

**01. படவரைஞராகப் பதிவு செய்தல் - 2014**

2014 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2014 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்ளவும், புதுப்பித்துக் கொள்ளவும், எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2014**

இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருள்களை விநியோகிப்போர் 2014 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரத்தைத் தத்தமது பிரிவுக்குட்பட்ட உப அலுவலகங்களில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி, பூநகரி, இரணதீவு, பல்வராயன்கட்டு உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரிய கட்டணங்களை 31.03.2014 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**03. வீடமைப்பு நகரசீர்திருத்தக் கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

3.1. பூநகரி பிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க் கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல் வேலைகளைச் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதை அறியத்தருகின்றேன்.

3.2. ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டிமுடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

3.3. சபையின் அனுமதிபெற்றுக் கட்டடம் கட்டிமுடித்தவர்கள் கட்டிமுடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**04. விளம்பரங்களை அமைத்தல்/ காட்சிப்படுத்தல்**

இப்பிரதேசசபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டு/ காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை 31.03.2014 ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப்பலகை ஒன்று மட்டும் காட்சிப்படுத்த முடியும். விளம்பரங்களுடனான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள பெயர்ப் பலகைகளுக்குப் பிரதேச சபையின் அனுமதி பெறப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத பெயர்ப்பலகைகள் பிரதேச சபையால் அகற்றப்படும்.

**05. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்த பகுதியில் வைத்து கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி, உயிர்க்கோழிகள் விற்பனையைத் தடை செய்தல்**

பூநகரிப் பிரதேச சபையின் பொதுச்சந்தைகள் இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் ஒரு கிலோமீற்றர் வரையான சுற்றாடலில் மரக்கறிகள், கடலுணவுகள், இறைச்சி வகைகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**06. பொது இடங்களில் கழிவுகள் போடுதல்**

பூநகரிப் பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருள்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது.

தவறின் பிரதேச சபை கட்டளைச்சட்டம் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**07. பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளைப் போடுதல் தடை செய்யப்பட்டுள்ளது.**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப் பொருள்களைப் போடுதல் தடை செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப் பொருள்களைச் சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணத்தினை செலுத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**08. பொதுச் சுகாதாரம் பேணுதல்**

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொதுச் சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளைத் துப்புரவு செய்து சுகாதாரத்தைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**09. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம் பெறல் - 2014**

2014 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி, மிருகங்களுக்கான உரிமத்தை பங்குனி 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**10. சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL) 2014**

இப்பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் சிறிய மற்றும் நடுத்தர வியாபார/ தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை 31.03.2014 இற்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெறத் தவறுபவர்கள் 2014 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட வியாபார/ தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**11. தரகர் முறை நீக்கல்**

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமமான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர்.

**பொ. சிறிஸ்கந்தராசா,**
**தலைவர்,**

**பிரதேசசபை, பூநகரி.**

(C/12526) (2.45.6.3)


# றொகான் குணரட்ணவை இழப்பீடு செலுத்த உத்தரவு

*கனேடிய தமிழர் பேரவைக்கு எதிராகக் கருத்து வெளியிட்டமைக்காக*

ஒன்ராறியோ. பெப்.21

கனேடியத் தமிழர் பேரவை கனடாவில் உள்ள புலிகளின் முக்கிய அமைப்பாகும் என்று கருத்து வெளியிட்டமைக்காக றொகான் குணரட்ண 53,000 டொலர்களை இழப்பீடாகச் செலுத்துமாறு ஒன்ராறியோ உயர் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சிங்கப்பூர் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தின் அரசியல் வன்முறை மற்றும் பயங்கரவாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பன்னாட்டு மையத்தின் தலைவராக இலங்கையைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளர் றொகான் குணரட்ண பணியாற்றி வருகிறார்.

2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 'லக்பிம' ஊடகம் இறுதிப் போரில் 1,400 பேர் மட்டுமே இறந்தார்கள். கனடா தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பு குகையாகத் தோற்றம் கொண்டுள்ளது என றொகான் குணரட்ண எச்சரிக்கிறார்' எனத் தலைப்பிட்டு ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது. மேலும் 'தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு கனேடியத் தமிழ்க் காங்கிரஸ்என்றபெயரில் இயங்குகிறது. இந்த அமைப்பு கனடாவில் உள்ள புலிகளின் முக்கிய முகப்பு அமைப்பாகும்.' 'கனேடிய அரசுக்கு இது தெரியும். இப்போது கனேடிய அரசு அது குறித்த விசாரணையை மேற்கொண்டுள்ளது' என்று றொகான் குணரட்ண கூறினார் என்றும் 'லக்பிம' அதில் தெரிவித்திருந்தது.

அவர் வெளியிட்ட கருத்துக்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை எனத் தெரிவித்து கனேடியத் தமிழர் பேரவை றொகான் குணரட்ணவுக்கு எதிராக அவதூறு வழக்குத் தொடுத்திருந்தது.

இந்த வழக்கு மீதான தீர்ப்பு கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி ஒன்ராறியோ உயர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதியரசர் ஸ்ரீபன் பயர்ஸ்ரோன், றொகான் குணரட்ணவை கனேடியத் தமிழர்பேரவைக்கு 37 ஆயிரம் டொலர் பொது இழப்பீடாகவும், 16 ஆயிரம் டொலர் வழக்குச் செலவாகவும் செலுத்துமாறு உத்தரவிட்டார். (த-வ)

# இலங்கையை முடக்க பல அமைப்புகள் முயற்சி

*தோற்கடிப்போம் என்கிறார் பஸில்*

கொழும்பு.பெப்.21

அரச சார்பற்ற அமைப்புகள் சில சர்வதேசத்தினருடன் இணைந்து இலங்கையை அனைத்துலக ரீதியில் முடக்க முயற்சிகளை முன்னெடுக்கின்றன. மேல், தென் மாகாண சபைத் தேர்தலில் அரசை வெற்றியடையச் செய்து அதை முழுமையாக தோற்கடிப்போம் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட வேட்பாளரும், சுயதொழில் புரிவோர் சம்மேளனத்தின் தலைவருமான மஹிந்த கஹகந்தவின் தேர்தல் அலுவலகத்தை கொம்பனித் தெருவில் திறந்துவைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் தேர்தல் மாகாணசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் மட்டுமல்ல. நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் தேர்தலாகும். இதற்கு முன்னர் இருந்த ஆட்சியாளர்கள் தேர்தல் வரைபடத்தைச் சுருட்டி வைத்திருந்தனர். ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்கள் கருத்தை தெரிவிப்பதற்கு எப்போதும் வாய்ப்பளித்து வருகின்றார்.

நாட்டு மக்கள் ஜனாதிபதிக்கும், அரசுக்கும் பல சந்தர்ப்பங்களில் ஆதரவு தெரிவித்துள்ளனர். அதனூடாக அரசால் நாட்டின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடிந்தது -என்றார். (ச)

# தீர்மானத்தை இந்தியா ஆதரித்தால் பாதிப்பு

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரித்தால், அது இந்திய - இலங்கை உறவுகளில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று இலங்கை அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சார்க் அமைப்பின், வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டம் மாலைதீவில் நடைபெற்று வரும் நிலையில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானம், சார்க் நாடுகள் மத்தியில் பிளவை ஏற்படுத்தியுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ச)

# மீன் பிடித்தலை தடைசெய்தால் மாடு அறுப்பதை கைவிடுவோம்

*முஸ்லிம் மக்கள் கட்சித் தலைவர் சவால்*

உயிர்கள் எதனையும் கொல்வது கூடாது என்ற பௌத்த தர்மத்தின் அடிப்படையில் மீன் பிடித்தலையும் அரசு முதலில் தடைசெய்யுமாக இருந்தால் மாடு அறுப்பதற்கான தடையை கொண்டு வர நாம் எதிர்க்க மாட்டோம்.

இவ்வாறு முஸ்லிம் மக்கள் கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் சவால் விடுத்துள்ளார்.

மாடு அறுக்கும் நிலையங்களை மூடுவது குறித்து சிங்கள ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டை பொறுத்தவரை நாம் அறிந்த காலத்திலிருந்து மத விடயங்களில் சகல மக்களுக்குமிடையில் நல்ல புரிந்துணர்வு இருந்தது. இன்றைய ஆட்சியில்தான் இத்தகைய மத சிந்தனைகளை காண்கிறோம்.

பௌத்த மதத்தை பொறுத்தவரை அனைத்து உயிர்கள் மீதும் கருணை செலுத்தும் படிதான் கூறுகிறதே தவிர சில உயிர்கள் மீது கருணையும் மற்றும் சில உயிர்களை கொல்லலாம் எனவும் சொல்வதாக நான் காணவில்லை. மீனுக்கும் உயிர் இருக்கிறது. அந்த மீனைக் கொன்று சாப்பிடுவதை பௌத்த பெரும்பான்மை நாடு என சொல்லிக் கொள்ளும் இந்த நாட்டில் நாம் காண்கிறோம். அதே போல் கோழியும் இறைச்சிக்காக கொல்லப்படுகிறது. இவற்றின் மீது பௌத்த தேரர்களுக்கு கருணை இல்லையா?

மாடு அறுக்கும் நிலையங்களை பெரும்பாலும் முஸ்லிம்களே நடத்தி வருகிறார்கள். இந்த நிலையில் மாட்டிறைச்சி சாப்பிட வேண்டாம் என்பதாயின் அதனை பௌத்த தேரர்கள் தமது சிங்கள மக்களிடம் சொல்லலாம். அதுதான் தர்மம். அதனை விடுத்து முஸ்லிம்கள் விடயத்தில் தலையிட வேண்டிய அவசியம் இல்லை.

நாட்டில் பல சாராயக் கடைகள் இருக்கின்றன. உலமாக்களான நாம் சாராயம் குடிக்க வேண்டாம் என எமது மக்களைப் பார்த்துக் கூறுகின்றோம். அதேபோல் பன்றி இறைச்சி சாப்பிட வேண்டாம் என நாங்கள் முஸ்லிம்களிடம் கூறுகிறோம். அவர்கள் அதனை ஏற்கிறார்கள். பன்றி இறைச்சிக் கடைகளை மூடுங்கள் என நாம் உண்ணாவிரதம் இருக்கிறோமா?

இந்த நாட்டில் உள்ள பல பௌத்த பிக்குகள் மிகவும் நல்லவர்கள். விடயங்களை புரிந்துணர்வுடன் பார்ப்பவர்கள். ஒரு சிலரே இப்பிரச்சினைகளை எழுப்புகின்றனர். நாட்டில் உள்ள மாடு அறுக்கும் நிலையங்களை மூடி விட்டு வெளிநாட்டிலிருந்து மாட்டிறைச்சி கொண்டு வருவதன் மூலம் அரசுக்கு இலாபம் கிடைக்கும் என்பதனாலேயே பிக்குகளை ஏவி விட்டுள்ளதாகவே இவ் விடயத்தைப் பார்க்கிறோம். -என்றார். (ச-10)

# கண்ணீர் அஞ்சலி



எமது காரியாலயத்தில் கடமை
யாற்றும் சக ஊழியர்
திருமதி கார்த்திகா கமலதாசன்
அவர்களின் பாசமிகு சகோதரன்

**அ.செந்தூரனின்**

பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிராந்திய முகாமையாளரும், ஊழியர்களும், வடபிராந்திய அலுவலகம்,
தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்.

(44945)(3.6.4)



# மரண அறிவித்தல்

## இராசையா இளையதம்பி

(முன்னாள் ஊழியர்-இலங்கை மின்சார சபை)

யாழ். குப்பிளான் கேணியடியைப் பிறப்பிடமாகவும், கனடா, றொரன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இளையதம்பி 18.02.2014 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சக்திவேல் மற்றும் தங்கராணி (கனடா), கலாராணி (பிரான்ஸ்), தணிகைவேல் (கனடா), மகேந்திரம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் கந்தையா (ஓய்வு பெற்ற R.M.P), பரமநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருணாசலம் (ஓய்வு பெற்ற அதிபர்), மார்க்கண்டு (டென்மார்க்), சின்னராசா (ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்), கந்தையா (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் மைத்துனரும், விமலேந்திரன், சிவசாந்தி ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2014) சனிக்கிழமை கனடா றொரன்ரோவில் நடைபெறும். அன்றைய தினம் நினைவுகூரும் நிகழ்வானது குப்பிளானிலுள்ள அவரின் பெறாமகள் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

(44942)
(10.6.3)

தகவல்: க.சின்னராசா
(மைத்துனர்)



# மரண அறிவித்தல்

## திருமதி பிலோமினா (தவமணி) டானியல்



பலாலியைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா (தவமணி) டானியல் (20.02.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டானியலின் அன்பு மனைவியும் குணமணி காலஞ்சென்ற செல்லமணி, பத்திராசா, தேவதாஸ் ஆகியோரின் அன்புச்சகோதரியும் மேரிஅன்னா (பேளி), ஜெயக்குமார், விமலன், அமலன் ஆகியோரின் அன்புத்தாயும் சிங்கராஜா (சிங்கா), ஜெயந்தினி, ராஜினி, தமயந்தி ஆகியோரின் அன்புமாமியும் போல்ராஜ், கபில்ராஜ், நெவில்ராஜ், ஜோயல்ராஜ், இவோன், நத்தாணியேல், மரியா, ஜன்சிகா, றினோஜ், நிருசலா, நிலுக்ஷன், நிகாசினி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் (21.02.2014) வெள்ளிக்கிழமை யாழ். மரியன்னை பேராலயத்தில் இறுதித் திருப்பலி பி.ப. 3 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
(சிங்கராஜா - சிங்கா)


# அளவெட்டி தெற்கில் நடமாடும் சேவை

அளவெட்டி, பெப்.21

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் மாதாந்த நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை (J/219) கிராம சேவையாளர் பிரிவில் அளவெட்டி தெற்கு கலைவாணி சனசமூக நிலையத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை இடம் பெறும். இங்கு மருத்துவ பரி சோதனைகளும், ஆலோசனைகளும் வழங்கப்படும் என தெல்லிப்பழை பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (ஓ-36)

# போலி வேட்புமனு குறித்து விசாரணை செய்யப்படும்

*தேர்தல்கள் ஆணையாளர் கூறுகிறார்*



மஹிந்த தேசப்பிரிய

கொழும்பு,பெப்.21

தெற்கு மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பு மனுக்களில் காணப்படும் போலித் தகவல்கள் குறித்து விசாரணை நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

சில மாவட்டங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பு மனுக்களில் உள்ள நபர்களின் பெயர், முகவரிகள் போலியானவை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து ஆராய்ந்து சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு பிரச்சினை காணப்படும் அரசியல் கட்சிகள் அது குறித்து எனக்கு அறிவிக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் அனைத்துக் கட்சிகளுக்கும் சம உரிமை வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தமிழகத்தில் குற்றங்கள் குறைவு

சென்னை, பெப்.21

இந்தியாவிலேயே குற்றங்கள் குறைந்த மாநிலம் தமிழகம் தான் என்று தெரிவித்துள்ளார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா.

"தமிழகத்தில் தான் குற்றங்கள் குறைவாக உள்ளதாக, மத்திய அரசு எடுத்த புள்ளி விவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. குற்றங்கள் நடக்காத இடம் இல்லை. ஆனால் குற்றங்கள் குறைவாக உள்ளதா, நடந்த குற்றங்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதைத் தான் பார்க்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஐ.நா. உதவியுடன் மகளிர் குழுக்கள்

கிராமங்கள் தோறும் மகளிர் குழுக்களை அமைப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையுடன் மத்திய பிரதேச மாநில அரசு ஒப்பந்தம்ஒன்றைமேற்கொண்டுள்ளது. அதற்கான ஆரம்ப விழாவில் பங்கேற்ற மாநில முதலமைச்சர் சிவ்ராஜ் சிங்சவுகான், "பெண்களின் உரிமைகளை காப்பதற்கும் அவர்களது வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்குமாக பெண்கள் குழு அனைத்து கிராமங்களிலும் அமைக்கப்பட உள்ளது. பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் மகளிர் வளர்ச்சிக்கு இந்த குழுக்கள் மிகவும் உதவிகரமாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார். (ற)


# துயர் பகிர்வு



எமது பாடசாலை ஆசிரியர்
அ. வத்சலன் அவர்களின் பாசத் தம்பி

**அமிர்தலிங்கம் செந்தூரன்**

அவர்கள் இறையடி சேர்ந்த செய்தி
கேட்டு உளத்துயரில்
உறைகின்றோம்...

"ஆற்ற முடியாத ஆருயிர் இழப்பு இது
தேற்ற முடியாத குடும்பச் செல்வத்தின்
இழப்பு இது - அதனால்
போற்றியே கேட்கின்றோம் இறைவா
உன் பாதச் சுவடுகளில் எம்மவனையும்
சேர்த்துக் கொள்..."

அன்னாரின் இழப்பினால் துயரச் சுமையை சுமந்து நிற்கும் குடும்பத் தாருக்கு எம் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர் ஆத்ம சாந்திக்காக மீண்டும் மீண்டும் இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

யாழ்/புங்குடுதீவு கமலாம்பிகை
கனிஷ்ட மகா வித்தியாலயம்.

(44951) (10.14)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.



# மரண அறிவித்தல்

## சதாசிவக்குருக்கள் சண்முகசுந்தரம்

( ஓய்வூதியர் வலிகாமம் மேற்கு பிரதேசசபை
உப அலுவலகம் சங்கானை)



வியாபாரிமூலை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், சங்கானை அரசடி வைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவக் குருக்கள் சண்முகசுந்தரம் ( ஓய்வூதியர் வலி. மேற்கு பிரதேசசபை உப அலுவலகம் சங்கானை) நேற்று (20.02.2014) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவக்குருக்கள் - கனகசுந்தரியம்மா தம்பதியரின் மூன்றாவது மகனும் காலஞ்சென்ற சிவசோதி - சரஸ்வதி தம்பதியரின் அன்புமருமகனும் கார்த்திகேயினியின் அன்புக் கணவரும் யமுனா (பிரான்ஸ்), கங்கா (தற்காலிக உதவி விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருள்லிங்கத்தின் பாசமிகு மாமனும் திருஞானசம்பந்தக்குருக்கள் (கனடா), குமாரசாமி (கனடா), ஆனந்தராசா (கனடா) மற்றும் பத்மாவதி (பிரான்ஸ்), பரமேஸ்வரி (லண்டன்), வேதநாயகி (பிரான்ஸ்) மற்றும் காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் சந்திராம்பாள் காலஞ்சென்ற சச்சிதானந்தம், கமலாதேவி - மாணிக்கவாசக்குருக்கள் காலஞ்சென்ற உருத்திரகுமார், ஈஸ்வரி மற்றும் அருட்குமரன் - வசந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2014) வெள்ளிக்கிழமை காலை. 08 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கராச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அரசடி வைரவர் கோவிலடி, சங்கானை
தொடர்பு - 021 3007303,
077 8580314, 0033325407721

தகவல் : பாசமிகு அன்புமனைவி,
பிள்ளைகள், மருமக்கள்



# மரண அறிவித்தல்

## சிவகுரு ஜெயபாலரத்தினம் (பெரிய குஞ்சு)



மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், 1ஆம் கட்டை, கிராம்புவில், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு ஜெய பாலரத்தினம் (18.02.2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகையா-தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும், கோபிராஜ் (இத்தாலி), ஸ்ரீராஜ் (கனடா), நிரூசியா, ரவிராஜ் (பிரான்ஸ்), தர்சிகா, தனுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுசியா (இத்தாலி), தவறூபி (கனடா), வசீகரன் (ஆசிரியர், யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை) சசிராஜ் ஆகியோரின் அன்பு மாமனும், பிரியந்தி, அபிநயா, தக்ஷன், பவிஷனா ஆகியோரின் அன்புப் பேரனும், தவமணி, அமிர்தாம்பிகை, காலஞ்சென்றவர்களான சண்முகசுந்தரம், சிவயோகநாதன் மற்றும் செல்வரஞ்சினி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற கதிரவேலு, சிவகுரு, சத்தியகலா, செல்வநாயகி, சுந்தரலிங்கம், கதிரவேற்பிள்ளை, நல்லதம்பி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் நல்லம்மா ஆகியோரின் பெறா மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சின்னராசா (கனடா) நடராசா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1 ஆம் கட்டை,
கிராம்புவில், சாவகச்சேரி.


(44947)(10.14)

தகவல்:
குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

## திருமதி புவனேஸ்வரி சுப்பிரமணியம்



தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சுப்பிரமணியம் நேற்று (20.02.2014) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (யூனியன் மணியம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் சுந்தரவதனி (முகாமையாளர்- கிராமிய வங்கி, சங்கானை), சிவசுந்தரி (டென்மார்க்), சுந்தரராசா (கண்ணன்), மோகனசசி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயும், ஆனந்தராசா, கனகராசா, கிருஷ்ணாதேவி (வெளிக்கள உத்தியோகத்தர் - சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ்ப்பாணம்), குபேந்திரன் ஆகியோரின் மாமியும், விக்னேஷ், தினேஷ், கார்த்திகன், அனுசாயினி, சங்கரி, நிரோஜன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான வெற்றி வேற்பிள்ளை, தருமநாயகி, கணேஸ்வரி, நகுலேஸ்வரி, சபாநாயகம், சிவனேஸ்வரி மற்றும் இராமலிங்கபிள்ளை, பிறேமாவதி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, கனகாம்பிகை, நமசிவாயம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.
021 225 1004

(கி/12525)
(10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

# 57 மில்லியன் பிள்ளைகள் பாடசாலை செல்வதில்லை

## யுனெஸ்கோ அறிக்கையில் அம்பலம்

கொழும்பு,பெப்.21

2011ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட சர்வதேச மட்டத்திலான ஆய்வில் உலகெங்கும் சுமார் 57 மில்லியன் பிள்ளைகள் பாடசாலை செல்வதில்லை என்று தெரியவந்துள்ளது.

யுனெஸ்கோவின் 'சகலருக்கும் கல்வி' என்ற திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்ட ஆய்வின் அறிக்கையிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளில் 54 வீதமானோர் பெண்கள். அரபு இராச்சியத்தில் இது 60 சதவீதமாக உள்ளது.

2000 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தொகையில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை என்று அந்த அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

தென் மற்றும் மேற்காசிய நாடுகளில் பாடசாலை செல்லாத பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை 1999 ஆம் ஆண்டில் 64 சதவீதமாக இருந்தது.

2000 ஆம் ஆண்டில் அது 57 சதவீதமாகக் குறைந்துள்ளது.

போராலும் உள்நாட்டுக் கலவரங்களாலும் பாதிக்கப்பட்ட நாடுகளிலேயே பாடசாலைக் கல்வியைப் பெறமுடியாத பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

அத்தகைய நாடுகளில் உள்ள 28.5 மில்லியன் பிள்ளைகளில் பாடசாலை செல்லாத 95 சதவீதமானவர்கள் கீழ் மட்ட அல்லது மத்தியதரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

அவர்களில் 55 சதவீதமானோர் பெண்கள் என்று அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**போராலும் உள் நாட்டுக் கலவரங்களாலும் பாதிக்கப்பட்ட நாடுகளிலேயே பாடசாலைக் கல்வியைப் பெறமுடியாத பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.**

இதேவேளை இலங்கையில் சகலருக்கும் கல்வி என்ற திட்டம் மும்முரமாக முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.

2015 ஆம் ஆண்டின் இறுதியில் அந்த இலக்கு எட்டப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (ச-22)


**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



**வீடு வாடகைக்கு**

கலாசாலை வீதி திருநெல்வேலியில் சாமிஅறை, 02 படுக்கைஅறை, பெரியகுசினி, சாப் பாட்டுஅறை, பெரிய ஹோல், 02 கழிவறை கள் ஆகியன கொண்ட வசதியான வீடு வாடகைக் குண்டு. **தொடர்பு: 077 4962404**



**Guest House விற்பனைக்கு**

இல. 873ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் சகல தளபாட வசதிகளுடன் ரூறிஸ்ற் (Tourist) அனுமதிப்பததிரத்துடன் 3 பரப்புக்காணியில் இயங்கிக் கொண்டிருக்கும் Guest House உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்பு 077 4766147, 021 2219220**



**English Classes**

தனி மற்றும் குழு வகுப்புக்கள்
Gr - 3 - O/L
T.P NO : 077 1072904


## தேங்காய்ப்பால் ஏற்றுமதியால் 2013 இல் அதிக வருமானம்

*தென்னை அபிவிருத்தி அமைச்சு தகவல்*

இலங்கையில் இருந்து தேங்காய்ப் பாலை ஏற்றுமதி செய்துள்ளதன் மூலம் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் அதிக வருமானம் கிடைத்துள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலத்துக்குள் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள 7,686 மெற்றிக்தொன் தேங்காய்ப்பால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என்று தென்னை அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலத்துக்குள் அது 11,549 மெற்றிக் தொன்களாக வளர்ச்சி கண்டுள்ளது என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

தேங்காய்ப்பால் ஏற்றுமதியில் 2012 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலத்துள் பெறப்பட்டுள்ள வருமானம் 1,444 மில்லியன் ரூபாவாகும்.

2013 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துள் தேங்காய்ப் பால் ஏற்றுமதியில் கிடைத்துள்ள வருமானம் 2030 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. (ச-22)

# வெற்றிடங்களுக்கு மாணவர்கள் இணைப்பு

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு*

கொழும்பு,பெப்.21

2012 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய, பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர், நிலவும் வெற்றிடங்களுக்கு மாணவர்களை இணைக்கும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மட்டத்தில் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று ஆணைக் குழுவின் தலைவர் ஷனிக்கா ஹிரிம்புரேகம குறிப்பிட்டார்.

அடுத்தமாத இறுதிக்குள் இந்த நடவடிக்கைகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, 2013 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்வதற்கான கையேடு எதிர் வரும் ஏப்ரல் மாதம் வெளியிடப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

பரீட்சைகள் திணைக்களத்தால் பெறுபேறுகள் தொடர்பான மீளாய்வு அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர், இந்த கையேடு வெளியிடப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)


**பதவி வெற்றிடம் - பணிப்பாளர்**

தேசிய மற்றும் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட நாடு முழுவதும் வலையமைப்புடைய இலாபமீட்டும் புகழ் பெற்ற தொழில் பயிற்சி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையை பொறுப்பேற்று நடத்துவதற்கு பணிப்பாளர் ஒருவரைத் தேடுகின்றோம்.

இவர் ரூபா ஒரு மில்லியன் (1000,000/=) பணத்தை வைப்பிடக் கூடியவராக இருக்க வேண்டும். இலாபத்தில் 50% பணம் கொடுப்பனவாக வழங்கப் படும்.

துரித அழைப்பு: (சி/12529) (10.6)

**0710 600 600, 0715 980 980**


**முதலாம் ஆண்டு நினைவு**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்



மண்ணின் மடியில் 16.12.1952 | இறைவன் அடியில் 04.03.2013

**ஸ்ரீமான் இரத்தினசிங்கம் செல்வராஜன் (ஐடியல்)**

திதி : 22.02.2014

கடந்து போன காலங்களில்
கலையாது இருப்பது
உமது லட்சியங்களும் நினைவுகளுமே

நெல்லியடி. குடும்பத்தினர்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது கல்லூரியில் சிரேஷ்ட ஆங்கில ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் கடமையாற்றிய

**திருமதி சுனேத்திரா (ராதா) செல்வரத்தினம்**

அவர்கள் ஆங்கில பாடத்துறை ஆசிரிய ஆலோசகராக (I.S.A) பதவி உயர்வுபெற்று யாழ். கல்வி வலயத்தின் கோப்பாய் கல்விக் கோட்டத்தில் கடமையேற்றதை மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.


CEYLON THEATRES
**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**
(Opposite Jaffna Teaching Hospital)
விசாரணை 021-2227712
www.facebook.com/CeylonTheatres
Web: www.ceylontheatres.com

இப்பொழுது திரையில் DAILY - 10.30am, 2.30pm, 6.30pm












**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**

மலர்வு 1934.08.05 | உதிர்வு 2014.01.22



அமரர் **இராசகுரு அரியரட்ணராசா**

கடந்த (22.01.2014) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் இராசகுரு அரியரட்ணராசா அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியை (21.02.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நிகழவிருப்பதால் அத்தருணம் தாங்கள் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் பிரிவுத்துயரில் பங்கு கொண்டு அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சிவமகால் நுணாவில் மேற்கு, சாவகச்சேரி, குடும்பத்தினர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நான்

மகேஸ்வரி.

மத்திய அரசு கொடுத்துள்ள மனுவைச் சோனியா காந்தி மனது வைத்தால் திரும்பப் பெறச் செய்ய முடியும் எனவும் அவர் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சாந்தன் உள்ளிட்ட ஏழு பேரையும் விடுவிப்பதாகத் தமிழக அரசு நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்திருந்தது. இந்த நிலையில் தமிழக அரசின் முடிவுக்கு எதிராக இந்திய மத்திய அரசினால் உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதனையடுத்துத் தமிழக அரசின் விடுதலை முடிவுக்கு இடைக்காலத் தடை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது உயர்நீதிமன்றம்.

இது தொடர்பில் உடுப்பிட்டியில் வசித்து வரும் சாந்தனின் தாயாரான தில்லையம்பலம் மகேஸ்வரியிடம் கேட்ட போது,

எனது மகன் விடுதலை செய்யப்பட்டுள்ளான் என்ற செய்தியால் சந்தோஷத்தில் இருந்தேன். இந்தச் செய்தி மனதை உலுக்குவதாக உள்ளது. எனது கணவர் தான் மகனைப் பார்க்காமல் உயிரிழந்து விட்டார். நானாவது 24 வருடங்களின் பின்னர் எனது மகனைப் பார்க்க வேண்டும். நான் சாவதற்கிடையில் என்ர கையால சமைத்த உணவை இரண்டு வாயாவது என்ர பிள்ளைக்கு என்ர கையால கொடுக்க வேண்டும். அதுக்காகவாவது எனது பிள்ளையை விடுவிக்க வேண்டும் என்று நான் கெஞ்சிக் கேட்கின்றேன். எனது பிள்ளையை மன்னித்து விடுதலைக்கு உதவுமாறு சோனியாகாந்தி குடும்பத்தை இரஞ்சிக் கேட்கின்றேன். சோனியா காந்தி மனது வைத்தால், மத்திய அரசு தாக்கல் செய்த மனுவை விலக்கிக் கொண்டு எனது மகனின் விடுதலையை உறுதிப்படுத்த முடியும்.

எனவே மீண்டும் ஒருமுறை சோனியா காந்தி குடும்பத்தாரிடம். எனது மகனின் விடுதலைக்காக இரஞ்சிக் கேட்கிறேன். சோனியாகாந்தியும் ஒரு தாய் என்றதனடிப்படையில் எனது உணர்வுகளைப் புரிந்து கொண்டு விடுதலை செய்வார் என்று எதிர்பார்க்கிறேன்-என்று தெரிவித்தார். (த-5)

### முருகன்

தடையை விதித்துள்ளது. தூக்கு தண்டனையைக் குறைத்தல் என்ற தீர்ப்பின் மீதான மறுசீராய்வு மனு நிலுவையில் உள்ள நிலையில், சிறையில் இருந்து குற்றவாளிகள் விடுவிக்கப்படக் கூடாது என்று மத்திய அரசு தனது மனுவில் கோரியிருந்தது.

நேற்றைய விசாரணையின் போது ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் 7 பேரையும் விடுவிக்கும் தமிழக அரசின் முடிவில், அதற்குரிய சட்டநடைமுறைகள் சரிவர பின்பற்றப்படவில்லை என்றும் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

முருகன், சாந்தன் பேரறிவாளன் ஆகிய மூவரையும் விடுவிக் கக்கூடாது என்று மத்திய அரசு தெரிவித்திருக்கும் ஆட்சேப னைகள் தொடர்பாக இரண்டு வாரத்திற்குள் பதிலளிக்க தமிழக அரசுக்கு நீதிமன்றம் உத் தரவிட்டுள்ளதுடன், இந்த வழக்கை மார்ச் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

ராஜீவ் கொலை வழக்குக் கைதிகள் ஏழு பேரில், பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர்களின் கருணை மனுக்களை விசாரித்து முடிவெடுக்க இந்தியக் குடியரசுத் தலைவர் எடுத்துக்கொண்ட பத்து ஆண்டுகளுக்கும் மேலான கால தாமதத்தை காரணம் காட்டி, அவர்களின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து இந்திய உச்சநீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்திருந்தது. மேலும், அவர்களை விடுதலை செய்வது குறித்துத் தமிழக அரசே முடிவு செய்யலாம் என்றும் உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருந்தது.

இதையடுத்து, சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ராபேர்ட் பயஸ், ஜெயகுமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேரையும் விடுதலை செய்யத் தமிழக அரசு முடிவு செய்தது. இந்த முடிவு மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும் என்றும் முதல்வர் ஜெயலலிதா சட்டசபையில் நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

மேலும் மத்திய அரசு 3 நாட்களுக்குள் தமது கருத்தினைத் தெரிவிக்காமல் காலம் தாழ்த்தினால் இந்திய அரசமைப்புச் சட்டம் 432 இல் மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி 7 பேரும் விடுவிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், தூக்குத் தண்டனை இரத்துச் செய்யப்பட்ட மூவரின் விடுதலையை எதிர்த்து இந்திய மத்திய அரசு உயர் நீதிமன்றத்தில் தொடுத்திருந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் அந்த மூவரின் விடுதலைக்கு நேற்று தடை விதித்திருக்கின்றனர்.

அதேசமயம், ராஜீவ் கொலை வழக்கில் ஏற்கனவே ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த நளினி உள்ளிட்ட நான்கு பேரை விடுதலை செய்ய உச்சநீதிமன்றத்தின் இன்றைய தீர்ப்பில் குறிப்பிட்ட எந்தத் தடையும் விதிக்கப் படவில்லை என்று தமிழக அரசின் சார்பில் இந்த வழக்கில் ஆஜரான சட்டத் தரணி ராகேஷ் திவிவேதி தெரிவித்தார்.

அப்படியானால் அந்த நால்வரையும் தமிழக அரசு முன்பு திட்டமிட்டபடி விடுவிக்குமா என்று செய்தியாளர்கள் கேட்ட போது, அது குறித்து தமிழக அரசுதான் முடிவெடுக்க வேண்டும் என்றும் தம்மால் இந்த கேள்விக்கு பதிலளிக்க முடியாது என்றும் தெரிவித்தார் தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி ராகேஷ் திவிவேதி. (த)

### தென்னா

இலங்கை அரச குழு வொன்று தென்னாபிரிக்காவுக்குச் சென்றுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விரைவில் தென்னாபிரிக்காவுக்கு வருகைதரும் என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளமை தொடர்பில் கேட்ட போதே சம்பந்தன் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

கடந்த வருடம் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்றியிருந்த தென்னாபிரிக்கா ஜனாதிபதி ஜேக்கப் சூமோ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்து பேசியிருந்தார். இந்தச் சந்திப்பின்போது இருதரப்பும் தென்னாபிரிக்கா சென்று அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள விரும்பினர்' என்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் இப் ராஹிம் பி.பி.சி. செய்திச் சேவையிடம் தெரிவித்திருந்தார்.

இதனடிப்படையிலேயே, அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா தலைமையிலான குழுவினர் கடந்தபுதன்கிழமை தென்னாபிரிக்காவுக்குப் பயணமாகியுள்ளனர். அரச குழுவைப் போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விரைவில் தென்னாபிரிக்கா வரவுள்ளதாக இப்ராஹிம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அவ்வாறானதொரு எந்த அழைப்பும் தங்களுக்கு கிடைக்க வில்லை. அவ்வாறான நிகழ்சி நிரலே இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் 'உதயனிடம்' தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வருடம் தென்னாபிரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்த பின்னர் கருத்து வெளியிட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், தென்னாபிரிக்காவின் அணுகுமுறைகளில் சந்தேகம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜெனிவா அமர்வுகள் நெருங்கி வரும் நிலையில் தென்னாபிரிக்கா இந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### யாழ்ப்பாணத்தில்

ரிப்பு நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன. இதன் பின்னர் குறித்த நடவடிக்கைகளை அந்தந்தப் பிரதேச செயலாளர்களே முன்னெடுப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் கடந்த 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனாக பண்டார தென்னக்கோன், பாதுகாப்புத் தேவைக்காக இனிமேல் தனியார் காணிகள் சுவீகரிக்கப்படமாட்டாது என்று கூறியிருந்தார். அரச அதிபர், பிரதேச செயலர்கள், படை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறி னார்.

ஏற்கனவே சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடங்கிய காணிகள் தொடர்பில் அமைச்சர் எதுவும் தெரிவித்திருக்கவில்லை. வழங்கப்பட்டது பட்டியல் குறித்த கூட்டத்தில் வைத்து. பிரதேச செயலாளர்கள் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கின்றார்கள் இல்லை என்று இராணுவ அதிகாரிகள் பகிரங்கமாகக் குற்றம்சாட்டியிருந்தனர். அத்துடன் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் சுவீகரிக்கவேண்டிய தனியார் காணிகளின் பட்டியலும் பிரதேசசெயலாளர்களுக்கு இந்தக் கூட்டத்தில் வைத்து வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய பிரதேச செயலாளர்கள், காணி சுவீகரிப்பு அலுவலர்களுக்கான ஒப்பத்தை யிட்டுச் சுவீகரிப்பு அறிவித்தல்களை ஒட்டத் தொடங்கியுள்ளனர். இதற்கு உதவியாக ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் பட்டதாரிப் பயிலுநர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

நுணாவில் சந்தியில் 5 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தனியார் காணிகளைச் சுவீகரிப்பதற்காக அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது. குறித்த காணிகளுக்குரிய உரிமையாளர்கள் 7 பேர் தமது காணி ஆவணங்களுடன் வடக்கு முதலமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இது தொடர்பில் சட்டநடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக நம்பகரமாக அறியமுடிகின்றது. (த-5)

### சட்டவிரோதமாக

தகவலையடுத்துச் சம்பவ இடத்துக்குச் சென்ற அவர் கள் ஐந்து பேரையும் கைது செய்தனர்.

அவர்கள் மூளாய் மற்றும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஐந்து பேரும் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (த-4)

### 75

இதுவரையில் மொத்தமாக 75 மனித எலும்புக்கூடுகள் இந்தப் புதைகுழியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மன்னார் - திருகேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மாபெரும் மனிதப் புதைகுழியில் 27 ஆவது தடவையாக நேற்று அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

மன்னார் நீதிவான், விசேட நிபுணர் குழுவினர் மற்றும் பொலிஸார் ஆகியோர் முன்னிலையில் காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை குறித்த புதைகுழியில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றபோது அதிலிருந்து 5 முழுமையான எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் புதைகுழியிலிருந்து ஏற்கனவே மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளில் மேலும் 9 எலும்புக்கூடுகள் நேற்று பொதி செய்யப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

இதுவரையில் 60 மனித எலும்புக்கூடுகள் இவ்வாறு மன்னார் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த மனிதப் புதைகுழியில் இன்றும் அகழ்வுப் பணிகள் இடம்பெறும் என்று மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் தெரிவித்தார்.

### வடக்கு

கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள சிவில் விமான போக்குவரத்து அமைச்சர், நகைப்புக்கிடமான தீர்மானம். களநிலைமைகள் தொடர்பில் எதுவுமே ஆராயாமல் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்கனவே இரண்டு சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. அவ்வாறு இருக்கையில் இன்னொரு சர்வதேச விமான நிலையம் அமைப்பதென்பது பொருத்தமற்றது.

சர்வதேச விமான நிலையம் ஒன்று அமைக்கப் பட வேண்டுமானால், சில தேவைப்பாடுகள் மற்றும் வசதிகள் இருக்க வேண்டும். தற்போது நாட்டில் இன் னொரு சர்வதேச விமான் நிலையம் தேவையில்லை- என்றார். (த-5)

### 58

ளது. 2013-2014 ஆம் ஆண்டுக்கான காலபோகத்தில் 91 ஆயிரத்து 540 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெல் உற்பத்தி மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டபோதும் 64 ஆயிரத்து 484 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெல் விதைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 325 ஆயிரத்து 710 மெற்றிக் தொன் விளைச்சல் எதிர்பார்க்கப்பட்ட போதும் போதியளவு மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறாத காரணத்தால் 138 ஆயிரத்து 16 மெற்றிக் தொன் விளைச்சலே கிடைக்கப்பெறும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது-என்றார். (த-14)

### ராணுவக்

அகற்றப்பட்டுள்ளது.

வலி. வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில் கடந்த சில வாரங்களாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றநிலையிலேயே குறித்த வளைவு அகற்றப்பட்டுள்ளது.

வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தின், பலாலி வீதியினூடான வாசலில் குறித்த பெயர் வளைவு நிறுவப்பட்டிருந்தது. வசாவிளான் சந்தியில் சிமெந்து தூண்கள் அமைக்கப்பட்டு அதில் 'இராணுவக் குடியிருப்புக்குச் சொந்தமானது' என்று வாசகம் பொறிக்கப்பட்ட வளைவு நிறு வப்பட்டிருந்தது. கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இது நிறுவப்பட்டிருந் தது.

இந்த நிலையில் புதிய இராணுவத் தளபதி ஜனவரி மாதம் பொறுப்பெடுத்த பின்னர், படிப்படியாக இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டிருந்தன.

அத்துடன் வலி. வடக்கு மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதாகவும், அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் 'இராணுவக் குடியிருப்புக்குச் சொந்தமானது' என்ற வாசகம் அடங்கிய வளைவு அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது. (த-5)

### பாதுகாப்பு

நூலகத்துக்குச் சென்று நூல்களை அன்பளிப்புச் செய்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு முதலமைச்சர் ஆகியோரையும் இவர்கள் சந்தித்தனர்.

இதனைவிட வலி. வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்று அந்த மக்களைச் சந்தித்த பின்னர் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியையும் பிரிட்டன் குழுவினர் சந்தித்திருந்தனர்.

#### பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

இந்தச் சந்திப்புக்கள் தொடர்பில் நேற்றுக் கருத்து வெளியிட்டுள்ள ஜோன் ரங்கின், இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்கள் உயர் பாதுகாப்பு வலயத்தினால் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர். உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியுடன் தான் கலந்துரையாடினேன் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார். குறிப்பாகப் பாலியல் ரீதியான வன்முறைகளை அவர்கள் எதிர்கொள்வதாகத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

என்னுடனான சந்திப்பில் கலந்து கொண்ட எவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் மீளவும் வரவேண்டும் என்று விரும்பவில்லை. இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதே அவர்களது விருப்பம் என்பதைச் சுட்டிக்காட்டினர் என்றும் தூதுவர் கூறியுள்ளார். (த-5)

### கமல்

யல் நீடிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது கமல் உட்பட மூவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷயன் கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் பிரதான சந்தேக நபராகக் கமல் கடந்த டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அதற்கு முதல்நாள் வேலணையில் வசித்து வந்த யசிந்தன் என்பவரும் றெக்ஷயனின் மனைவி அனித்தாவும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். கடந்த டிசெம்பர் மாதம் முதல் அவர்கள் மூவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கமல் மற்றும் அனித்தா ஆகியோரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ். மேல் நீதிமன்றில் பிணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# வடமராட்சி வலய கரப்பந்தில் உடுப்பிட்டி அசத்தல் வெற்றி

## மூன்று பிரிவுகளிலும் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப்.21
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அனைத்து வயதுப் பிரிவிலும் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி சம்பியனாகியது.
இந்தப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.
முதலில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி இந்த வருடச் சம்பியனாகியது.



இந்தப் பிரிவில் மூன்றாமிடத்துக்காக இடம்பெற்ற ஆட்டத்தில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும், நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் 2:0 என்ற அடிப்படையில் வென்று வெற்றியைத் தமதாக்கியது.
தொடர்ந்து இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும் மோதின. இதில் உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி 2:0 என்ற நேர் செற்களில் வென்று இந்த வருட சம்பியனாகியது. இதில் இரண்டாமிடத்தை தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும் மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.
அடுத்து இடம்பெற்ற 17 வயது ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரியும், தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அணி 25:17, 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் 2:0 என்ற நேர் செற்களில் வென்று சம்பியனாகியது.
இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தைப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பெற்றுக் கொண்டது. (த-400-23)

## அரச அதிபர் கிண்ணத்துக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி நாளை


யாழ்ப்பாணம், பெப்.21
யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டிகளில் ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.



பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம் மாவட்டச் செயலக நுழைவாயிலில் இருந்து ஆரம்பித்து கச்சேரி- நல்லூர் வீதி வழியாகச் சென்று சங்கிலியன் பூங்காவின் இடதுபக்கம் திரும்பி செம்மணி வீதியூடாக யாழ்.வரவேற்புச் சந்தியை அடைந்து ஏ-9 வீதி வழியாக யாழ்.மாவட்டச் செயலகத்தை வந்தடையும்.
ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம் யாழ்.மாவட்டச் செயலக நுழைவாயிலில் ஆரம்பித்து கச்சேரி நல்லூர் வீதி வழியாகச் சென்று முத்திரைச் சந்தியை அடைந்து அங்கிருந்து பருத்தித்துறை வீதி வழியாக கோப்பாய் சந்தி வரை சென்று வலது பக்கமாக கைதடி - மானிப்பாய் வீதியூடாக கைதடிச் சந்தியை அடைந்து அங்கிருந்து ஏ-9 வீதி வழியாக மீண்டும் மாவட்டச் செயலகத்தை வந்தடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

## சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.21
வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தினால் ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் மாவட்ட மட்டச் சதுரங்கப் போட்டி நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளது. (த-23)



## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், பெப்.21
மருதங்கேணி கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு பெண் களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)



யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத்தின் ஆதரவுடன் மணிவதனன் ஜெய்சித்திரா சகோதரர்களின் 19 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் பெண்களுக்கான மேசைப்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது. வெற்றி பெற்ற அணியினர் விருந்தினர்களுடன். (த-23)

## சதுரங்கப் போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப்.21
வலிகாமம் வலய பாடசாலைகளுக்கு இடையே நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருந்த சதுரங்கப் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
அன்றைய தினங்களில் ஆளுநர் கிண்ணத்துக்கான மாவட்ட போட்டி நடைபெறவுள்ளதால் அடுத்த மாதம் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் இராமநாதன் கல்லூரியில் குறித்த போட்டிகள் இடம்பெறும் என உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் கோ.குலசிங்கம் அறிவித்துள்ளார். (த-23)

## இணுவில் கலை ஒளி சம்பியன்

யாழ்ப்பாணம், பெப்.21
உடுவில் பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான கரப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் இணுவில் கலை ஒளி மன்ற இளைஞர் கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சூராவத்தை நியூ வொரியர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இணுவில் கலை ஒளி மன்ற இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது.
3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் இணுவில் கலை ஒளி மன்ற இளைஞர் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (த-23)

## மகளிர் தினத்தையொட்டி பாரம்பரியப் போட்டிகள்

தென்மராட்சி, பெப்.21
சாவகச்சேரி நகர் (ஜே/300) மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் எதிர்வரும் எட்டாம் திகதி நடைபெறவுள்ள உலக மகளிர் தினத்தையொட்டி பிரிவுக்குட்பட்ட ஆண், பெண்களுக்கான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.
இதற்கான பதிவுகள் சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள சங்க அறிவக மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றன.
போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தமது பெயர்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் சங்கச் செயலாளர் திருமதி ஸ்ரீ.சுசாந்தியிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் அறிவித்துள்ளார்.
18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு கீழ் பிரிவு, மேற்பிரிவு என இரு பிரிவுகளாக தேங்காய் துருவுதல், கிடுகுபின்னல், இலை எண்ணுதல், உடை அணிதல், செம்பு ஓட்டம், வேகநடை, பூமாலை கட்டுதல் ஆகியவையும் குழுப் போட்டிகளாக கயிறு இழுத்தல், சங்கீதக் கதிரை ஆகியவையும் நடத்தப்படும்.
ஆண்களுக்கு சங்கீதக் கதிரை, கால் கட்டி ஓட்டம், சாக்கோட்டம், பலூன் உடைத்தல், கரண்டி ஓட்டம் ஆகியவை இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

**ஆண்களுக்கு சங்கீதக் கதிரை, கால் கட்டி ஓட்டம், சாக்கோட்டம், பலூன் உடைத்தல், கரண்டி ஓட்டம் ஆகியவை இடம்பெறும்.**

## பூப்பந்தாட்ட போட்டிகள்



யாழ்ப்பாணம்,பெப்.21
வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 15, 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டி நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது. (த-23)

# பெண்கள் உதைபந்தில் வெற்றியீட்டிய அணிகள்

வலி.வடக்கு, பெப்.21
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பெண்களுக்கான லீக் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியின் முடிவுகள் வருமாறு
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மகாஜனக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலத்துக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்துக்கும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மாதகல் சென்.ஜோசப் வித்தியாலயம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மகாஜனக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.




சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-86)



பார்சிலோனா அணி

# மன்செஸ்டர் சிற்றி அணியை வீழ்த்தியது பார்சிலோனா



மன்செஸ்டர் சிற்றி அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் தொடரின் லீக் போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஐரோப்பிய நாடுகளை சேர்ந்த உள்ளூர் அணிகள் பங்கேற்கும் ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் தொடர் உலகின் பல்வேறு பகுதிகளில் நடக்கிறது.

இங்கிலாந்தின் மன்செஸ்டரில் நடந்த காலிறுதிக்கு முந்தைய சுற்றின் முதல் லீக் போட்டியில், நான்கு முறை சம்பியன் பட்டம் வென்ற பார்சிலோனா, மான்செஸ்டர் சிற்றி அணிகள் மோதின. ஆரம்பம் முதல் இரு அணி வீரர்களும் கடினமாகப் போராடிய போதும் முதல் பாதியில் இரு தரப்பினராலும் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை.

பின் விறுவிறுப்பாக நடந்த இரண்டாவது பாதியின் 57 ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்டனை உதை வாய்ப்பை பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சி கோலாக மாற்றினார். இதற்கு மன்செஸ்டர் சிற்றி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை.

தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு டேனி அல்விஸ் (90) கடைசி நிமிடத்தில் மீண்டும் ஒரு கோல் அடித்தார். முடிவில், பார்சிலேனா அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இரு அணிகள் மோதும் இரண்டாவது லீக் சுற்று போட்டி வரும் மார்ச் 12ஆம் திகதி பார்சிலோனாவில் நடக்கிறது. (டு)

# 9 ஆவது இடத்தில் கோஹ்லி

டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் விராட் கோஹ்லி 9ஆவது இடத்தைப்பிடித்துள்ளார். சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டது.

இதில், கோஹ்லி முதன்முறையாக முதல் பத்து இடங்களுக்குள் முன்னேறியுள்ளார். நியூஸிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்டில் கோஹ்லி சதம் அடித்ததே இந்த முன்னேற்றத்துக்கான காரணம்.

கோஹ்லி தவிர்த்து புஜாராவும் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடித்துள்ளார். புஜாரா தற்போது 7 ஆவது இடத்தில் உள்ளார்.

நியூஸிலாந்து அணித்தலைவர் பிரண்டன் மக்கலம் தன் கிரிக்கெட் வாழ்வில் முதன் முறையாக தரவரிசையில் 12ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

பந்து வீச்சாளர்கள் வரிசையில் இந்தியாவின் அஸ்வின் 2 இடங்கள் பின் தங்கினார். இருப்பினும் அவர் முதல் பத்து இடத்துக்குள் இடம்பிடித்தார். பிரக்யான் ஓஜா 12ஆவது இடத்தில் நீடிக்கிறார். நியூஸிலாந்தின் டிம் சௌத்தி முதன்முறையாக 9ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். ஆஸ்திரேலியாவின் மிச்செல் ஜோன்சன் 4 ஆவது இடத்திலும், தென்னாபிரிக்காவின் பிலாந்தர் முதலிடத்திலும் உள்ளனர். (டு)



கோஹ்லி

# காதலருடன் ஊர் சுற்றும் செரீனா



தனது காதலருடன் ஜாலியாக செரீனா வில்லியம்ஸ் சுற்றித் திரிவது போன்ற புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

முன்னணி ரென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ், தனது பயிற்சியாளரான பற்றிக்கைக் காதலித்து வருகிறார். இருவரும் ஒன்றாக ஊர் சுற்றுவதுடன், அடிக்கடி கடற்கரைப் பகுதிகளுக்கும் சென்று வருகின்றனர்.

இருவருக்குமே பிடித்த இடம் மொரிசியஸ் தான். கடந்தாண்டு ஜோடியாக சென்றது போன்று இந்த ஆண்டும் அங்கு சென்றிருந்தனர்.

இவர்கள் நெருக்கமாக இருக்கும் புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகியுள்ளன. இதேபோன்று பரிசில் சுற்றிதிரிந்த போது எடுத்த படங்களும் வெளியாகியுள்ளன. ஆனால் சுற்றித் திரிவதற்காக மட்டும் மொரீஷியஸ்தீவுக்குச்செல்லவில்லைஎன்றும், பயிற்சி பெறவே சென்றதாகவும் தெரிவித்துள்ளார். (டு)

# பொலார்ட் இல்லை

மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் 20/20 உலகக் கிண்ணத்துக்கு அறி விக்கப்பட்டுள்ள அணியில் இருந்து பொலார்ட் நீக்கப்பட்டுள்ளார். காயம் காரணமாக அவர் அணியில் இடம் பெறவில்லை என்று கூறப்படுகிறது. கிரண்பொலார்ட் சிறந்த அதிரடிஆட்டக்காரராகவும் சகலதுறை வீரராகவும் திகழ்பவர். காயம் காரணமாக அவர் அவதிப்படுவதால் அணியில் அவர் இடம்பெறவில்லை என்று மேற்கிந்தியக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அவர் இன்னும் மூட்டுக் காயத்தில் இருந்து முழு வதும் குணமாகவில்லை என்று அது தெரிவித் துள்ளது.

உலகக் கிண்ண 20/20 போட்டிகள் அடுத்த மாதம் பங்களாதேஷில் தொடங்குகின்றன. இந்நிலையில் உலகக் கிண்ணப் போட்டிக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில், டரன் சமி (அணித் தலைவர்), சாமுவேல் பத்ரி, பிராவோ, ஜான்ஸன் சார்ல்ஸ், ஷெல்டன் கோட்ரல், அண்ட்ரே பிளெட்சர், கிறிஸ் கெய்ல், சுனில் நரேன், தினேஷ் ராம்டீன், ரவி ராம்போல், ஆன்ரே ரஸல், மார்லன் சாமுவேல்ஸ், கிறிஷ்மர் சண்டோக், சிம்மன்ஸ், டுவைன் ஸ்மித் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (டு)



பொலார்ட்

“ காயம் காரணமாக அவர் அவதிப் படுவதால் அணியில் அவர் இடம்பெற வில்லை என்று மேற் கிந்தியக் கிரிக்கெட் சபை தெரிவித் துள்ளது.

# சோச்சியில் நோர்வே முன்னிலையில்

ரஷ்யாவின் - சோச்சி நகரில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் போட்டித் தொடரின் பதக்கப்பட்டியலில் நோர்வே முதல் இடத்தில் உள்ளது. நோர்வே 9 தங்கம், 4 வெள்ளி மற்றும் 7 வெண்கலப் பதக்ககங்கள் உள்ளடங்களாக 20 பதக்கங்களைப் பெற்றுள்ளது. ஜேர்மனி, 8 தங்கம், 3 வெள்ளி மற்றும் 4 வெண்கலம் உள்ளடங்களாக 15 பதக்கங்களை வென்று இரண்டாம் இடத்தில் உள்ளது. ஐக்கிய அமெரிக்கா 7 தங்கம், 5 வெள்ளி மற்றும் 11 வெண்கலம் அடங்களாக 23 பதக்கங்களை வென்று, மூன்றாம் இடத்தில் உள்ளது. ரஷ்யா, நெதர்லாந்து மற்றும் சுவிற்சர்லாந்து என்பன ஆறு தங்கப் பதக்கங்களுடன் நான்காம், ஐந்தாம் மற்றும் ஆறாம் இடங்களில் உள்ளன. (டு)

SOCHI 2014

# சங்காவின் சதம் கைகொடுக்க தொடரைக் கைப்பற்றியது இலங்கை


சங்கா

மிர்பூர் மைதானத்தில் இடம்பெற்ற இலங்கை பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 61 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணிசார்பில் குமார் சங்கக்கார 115 பந்துகளில் 14 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 128 ஓட்டங்களையும், பிரியஞ்சன் 60 ஓட்டங்களையும் மத்தியூஸ் 56 ஓட்டங்களையும் பெற்றனர். பங்களாதேஷ் பந்து வீச்சில் ருபெல் ஹீசைன் 3 இலக்குகளையும் சோக் ஹசி, சொகைப் அல் ஹசன், அரபாத் சன்னி ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். தொடர்ந்து 290 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய பங்களாதேஷ் அணி 43 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 228 ஓட்டங்களை மட்டும் பெற்று 61 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அவ்வணி சார்பாக முஸபிதுர் ரகிம் 79 ஓட்டங்களையும் அனமுல் ஹக் 42 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். இலங்கைப் பந்து வீச்சில் மலிங்க, சேனநாயக்க, திஸர பெரேரா மற்றும் மெண்டிஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக குமார் சங்கக்கார தெரிவு செய்யப்பட்டார். (த-400)


மத்தியூஸ் - சங்கா


அமர் நாத்


டோனி

# ஆக்ரோஷமாக ஆட வேண்டும்!

## முன்னாள் வீரர்கள் பாய்ச்சல்

சமீபகாலமாக இந்திய கிரிக்கெட் அணி வெளிநாட்டு மண்ணில் டெஸ்ட் போட்டிகளில் சொதப்பி வருகிறது.

கடைசியாக அந்நிய மண்ணில் நடந்த 14 டெஸ்ட் போட்டிகளில் ஒன்றில் கூட வெற்றிபெறவில்லை.

இதனையடுத்து அணித்தலைவர் பதவியில் இருந்து டோனியை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இதுகுறித்து இந்திய அணியின் முன்னாள் வீரர் மொகிந்தர் அமர்நாத் கூறுகையில், அணித்தலைவர் டோனி தற்காப்பு ஆட்ட யுக்தியைக் கடைப்பிடிக்கிறார்.

இதன் மூலம் எதிரணி சரிவில் இருந்து மீண்டு வர வழிவகுக்கிறார். உள்ளூரில் மட்டுமே டோனியின் சாதனை மற்ற இந்திய அணித்தலைவர்களை விட சிறப்பாக இருக்கிறது.

வெளிநாட்டு மண்ணில் இந்திய அணி வெற்றிபெற வேண்டும் என்றால் மன்சூர் அலிகான் பட்டோடி போன்ற ஆக்ரோஷமாகச் செயல்படக்கூடிய அணித் தலைவர் அணிக்கு தேவையாகும்.

கோஹ்லியை அணித்தலைவராக நியமிக்கலாம். ஒவ்வொரு வகையான ஆட்டத்துக்கும் தனித்தனி அணித் தலைவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

சௌரவ் கங்குலி கூறுகையில், டோனியின் டெஸ்ட் தலைமை வெறுப்பூட்டும் வகையில் உள்ளது. ஆனால் அணித் தலைவரை மாற்றுவது அணிக்கு இப்போது உகந்ததாக இருக்காது. டெஸ்ட் அணியில் டோனி நீடிப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

ஆனால் வெளிநாடுகளில் அவர் வெற்றிச் சதவீதத்தை அதிகரிக்க வேண்டியது முக்கியம் என்று தெரிவித்துள்ளார். (த-400)

# கால் இறுதிக்கு முன்னேறிய அணிகள்




19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் முதற் சுற்றுப் போட்டிகள் நிறை வடைந்துள்ளன. குழு 'ஏ' மற்றும் குழு 'பி' இற்கான போட்டிகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. இதில் குழு 'ஏ' இல் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் வெற்றி பெற்று முதலிரு இடங்களைப் பெற்று காலிறுதிச் சுற்றுக்கு தெரிவாகின. இந்தியா அணி பபுவா நியூகினியா அணியை வெற்றி பெற்றதன் மூலம் 6 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்றது. பாகிஸ்தான் அணி ஸ்கொட்லாந்து அணியை வெற்றி பெற்று 4 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தைப் பெற்றது. குழு 'ஏ' இல் ஸ்கொட்லாந்து, பபுவா நியூகினியா அணிகள் முறையே மூன்றாம் நான்காம் இடங்களைப் பெற்றன.

குழு 'பி' இல் ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு வாய்ப்புக்கள் இருந்த போதும் பங்களாதேஷ் அணியை வெற்றி கொண்ட ஆஸ்திரேலியா அணி 4 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்று காலிறுதிப் போட்டிக்கு தெரிவானது. ஆப்கானிஸ்தான் அணி நமிபியா அணியை வெற்றி கொண்டு 4 புள்ளிகளுடன் காலிறுதிப் போட்டிக்கு தெரிவானது. பங்களாதேஷ் அணி 4 புள்ளிகளைப் பெற்ற போதும் ஓட்ட நிகர சராசரி வேகத்தின் அடிப்படையில் ஆஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான் அணிகள் முதலிரு இடங்களைப் பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகின. நமிபியா அணி குழு 'பி' இல் நான்காமிடத்தைப் பெற்றது. (த-400)

# அயர்லாந்து வெற்றி

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணிக்கும் அயர்லாந்து கிரிக்கெட் அணிக்கும் இடையில் நடைபெற்ற 20-20 போட்டியில் அயர்லாந்து அணி 6 இலக்குகளினால் வெற்றி பெற்றது. இதன் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறிஸ் கெயில் கூடுதலான 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ரிம் முடர்க், கெவின் ஓ பிரையன், அலெக்ஸ் குஸ்சாக் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து 117 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 19.1 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. எட் ஜொய்ஸ் 40 ஓட்டங்களையும், அன்று பொய்ண்டர் 32 ஓட்டங்களையும் பெற்றனர். சாமுவேல் பத்ரி 2 இலக்குகளைக் கைப்பற்றினார். எட் ஜொய்ஸ் போட்டியின் நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். இந்தப் போட்டி மேற்கிந்திய தீவுகள் ஜமெய்க்காவில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-400)


எட் ஜொய்ஸ்

# ஆசியக் கிண்ணம் 25இல் ஆரம்பம்

2ஆவது ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டி பங்களாதேஷில் நடத்தப்பட இருக்கின்றது. இந்தப் போட்டி எதிர் வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் 8ஆம் திகதி வரை இடம்பெறும். இதில் நடப்பு சம்பியன் பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய 5 நாடுகள் பங்கேற்கின்றன. 25 ஆம் திகதி நடைபெறும் முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் - இலங்கை அணிகள் மோதுகின்றன. இந்திய அணி ஆரம்ப ஆட்டத்தில் பங்களாதேஷை 26 ஆம் திகதி எதிர்கொள்கிறது. (த-400)



ஆசிய கிண்ணம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கு
புலமைச் சங்கமம்
வெளிவந்துள்ளது புதிய பதிப்பு
புலமைச்சங்கமம்
ஆக்கம்: M.S.M.நளீம் கெக்கிராவ
V.P.P.ஆடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்
விலை: 550/=
வெளியீடு :
யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
இல.32, சென்.அந்தனீஸ் மாவத்தை,
கொழும்பு 13. தொ.பே : 077 6258778
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

வீடு வாடகைக்கு
கிளிநொச்சி நகரில் உள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குவிடப்படும்
தொடர்புகளுக்கு : 077 3944745

கார் விற்பனைக்கு
வங்கி உத்தியோகத்தர் ஒருவரின் மிகவும் நல்ல நிலையில் உள்ள TOYOTA CORONA (18-XXXX) விற்பனைக்கு உண்டு.
சனி, ஞாயிறு தினங்களில் பார்வை இடலாம்.
தொடர்புகளுக்கு : 077 3269454 (தேவா)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி







## திருமதி
## சரஸ்வதி சிதம்பரநாதன்
## (பேபி அன்ரி)

தோற்றம்
24.03.1960

மறைவு
22.01.2014

அன்புள்ள **பேபி** அன்ரிக்கு!
**கண்ணீர்ப் பூக்களை**
உங்கள் இதயத்தில் தூவி....

பெற்ற தாய் போல எம்மை
புரந்து நீர் புகழைத் தந்தீர்
புண்ணியம் செய்தோம் நாமும்
உங்களின் உறவாய் ஆனோம்
குற்றமாய் ஏது செய்தோம்
குறையினில் எமை ஏன் நீத்தீர்
குமுறிடும் உள்ளத்தோடு
குழைந்து நாம் வாடுகின்றோம்

மற்றவர் மனத்தை என்றும்
மகிழவைப்பதுவே மூச்சாய்
இத்தனை நாளும் வாழ்ந்து
இன்றெமை நோக விட்டீர்
நற்றவான் கங்கை மீனாய்
நாள் தோறும் பொலிந்து மின்னி
நலமோடு வாழ வேண்டும்
இறையருள் வேண்டுகின்றோம்.



திருத்தணிகை,
மடத்தடி வீதி,
சாவகச்சேரி.

திலகவதி நடராஜன் (கிளி அக்கா)
நந்தகுமார் (நந்தன்), திரிவேணி (வேணி),
ரூபன் (பாப்பா), இதயவேணி (இதி)

(44954)(2,6)

# ஜெனிவாக் குழுவில் மஹிந்த சமரசிங்கவும்



மஹிந்த சமரசிங்க

கொழும்பு,பெப்.21
ஜெனிவா செல்லும் இலங்கை அரசதரப்புக் குழுவில், ஜனாதிபதியின் மனிதஉரிமை விவகாரங்களுக்கான சிறப்புத் தூதராக அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் இடம்பெறுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த தகவலை ஜனாதிபதியின் ஊடக பேச்சாளர் மொகான் சமரநாயக்க வெளியிட்டுள்ளார்.
இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழு, ஜெனிவா செல்லவுள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன.
இந்தநிலையில், கடந்த காலங்களில், ஜெனிவா கூட்டத் தொடர்களில் இலங்கைக் குழுவுக்குத் தலைமை தாங்கிய அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஜெனிவா செல்லும் குழுவில் இருந்து நீக்கி விடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்தன.
ஜெனிவா கூட்டத்தொடரில், இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் விவகாரத்தில், அமைச்சர்களான பீரிஸிக்கும், மஹிந்த சமரசிங்கவுக்கும் இடையில், நிழல்போர் ஒன்று நடந்து வந்தது.
இந்தநிலையிலேயே, ஜெனிவா செல்லும் குழுவில் மஹிந்த சமரசிங்கவும் இடம்பெறுவார் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.
அதேவேளை, ஜெனிவா செல்லும் குழுவில் இடம்பெறவுள்ள ஏனையோர் பற்றி இதுவரை முடிவு செய்யப்படவில்லை என்றுஇலங்கை ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் மொகான் சமரநாயக்க தெரிவித்தார். (ச)

# பிரேரணையை தோற்கடிக்க ஜெனிவாவில் விசேட பூசை

**பூசைகளை ஜெனிவாவிலுள்ள சர்வதேச பௌத்த விகாராதிபதி தம்மிக்க தேரர், ஹில் விட்டிகல சுஜாத ஆகிய தேரர்கள் நடத்தி வருகின்றனர்.**

கொழும்பு,பெப். 21
ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் முன்வைக்கப்படவுள்ள பிரேரணையைத் தோற்கடிப்பதற்காக ஜெனிவாவிலுள்ள சர்வதேச பௌத்த விகாரையில் நாள்தோறும் விசேட பூசை வழிபாடுகள், போதனைகள் நடைபெற்று வருகின்றன.
இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகள் முன்வைக்கும் அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் முறியடிப்பதற்காக ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கை சார்பில் பங்கேற்கும் அரச பிரதிநிதிகளுக்கு சக்தியளிப்ப தற்காகவும் இந்த விசேட வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
கடந்த 4ஆம் திகதி முதல் இந்த விசேட வழிபாடு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.
இந்தப் பூசைகளை ஜெனிவாவிலுள்ள சர்வதேச பௌத்த விகாராதிபதி வண. தவலம தம்மிக்கதேரர், வண. ஹில் விட்டிகல சுஜாத ஆகிய தேரர்கள் நடத்தி வருகின்றனர்.
இலங்கைக்கு எதிரான அமெரிக்கப் பிரேரணையை தோற்கடிப்பதற்காக ஆதரவு திரட்டும் முயற்சியில் அமைச்சர்கள் தலைமையிலான குழுவினர், ஐ.நா. உறுப்பு நாடுகளுடன் பேச்சுகளை நடத்தி ஆதரவைப் பெறும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வரும் நிலையில், மறுபுறத்தில் பிரேரணையைத் தோற்கடிப்பதற்காக பௌத்த பிக்குகளால் விசேட பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ச)




மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்போக நெல் அறுவடை விழா செங்கலடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஈரளக்குளம் பகுதியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சாள்ஸ், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் பி. உகநாதன், பிரதேச செயலர் யு. உதயஸ்ரீதர் உட்படப் பலர் கலந்துகொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தனர். (ச)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊழலை தடுக்க பரப்புரை

கொழும்பு,பெப்.21 மட்டக்களப்பு,பெப்.21
மட்டக்களப்பில் உள்ள ஊழலைத் தடுப்பதற்கான இலவச சட்ட ஆலோசனை மையத்தால் ஊழலுக்கு எதிராகச் செயற்படுங்கள், இது உங்கள் அடிப்படை உரிமை என்னும் தலைப்பில் நகரில் தீவிர பரப்புரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
துண்டுப் பிரசுர விநியோகம், மற்றும் வாகனங்களில் போஸ்டர்கள் ஒட்டும் நிகழ்வுகள் என்பன இடம்பெற்று வருகின்றன.
ஊழல் எமது சந்ததியின் எதிர்காலத்தைப் பாழாக்கும், போரின் பின்னரான புதிய சூழலில் எல்லாத்துறையிலும் ஊழல் வளர்ச்சிப் பாதையில் உள்ளது என பல வாசகங்கள் துண்டுப் பிரசுரத்தில் பொறிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

**போரின் பின்னரான புதிய சூழலில் எல்லாத் துறையிலும் ஊழல் வளர்ச்சிப் பாதையில் உள்ளது.**



ஊழலைத் தடுக்க மட்டக்களப்பில் இளைஞர்களால் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

# புகைத்தலால் தினமும் 60 பேர் உயிரிழப்பு

கொழும்பு,பெப்.21
இலங்கையில் நாளொன்றுக்கு ஆயிரத்து 200 பேர் பிறக்கையில் ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர். இவ்வாறு உயிரிழப்பவர்களுள் 60 வீதமானோர் தொற்றா நோய்களினால் உயிரிழக்கின்றனர்.
புகையிலை உற்பத்திப் பொருள்களின் பாவனையால் இலங்கையில் தினமும் 60 பேர் உயிரிழக்கின்றனர். வருடமொன்றுக்கு 20 ஆயிரம் உயிரிழப்புகள் இதனால் ஏற்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# யுவதியின் உயிரைப் பறித்தது பேஸ்புக்கில் வெளியான படம்

*கொழும்பு,பெப்.21
பேஸ்புக்கில் தனது புகைப்படத்துடன் வேறொரு இளைஞரின் புகைப்படம் தர வேற்றம் செய்யப்பட்ட காரணத்தால் 19 வயது யுவதி ஒருவர் தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.
காலி,அல்பிட்டிய, மன்னாகொடயில் உயர்தரம் கற்ற மாணவி ஒருவரே இவ்வாறு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.
சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் பேஸ்புக்கினூடாக ஜா-எல பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவருடன் குறித்த மாணவிக்கு காதல் தொடர்பு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
அந்த இளைஞர் நேற்றுமுன்தினம் மாணவியின் வீட்டுக்கு வந்திருந்த சந்தர்ப்பத்திலேயே அவர் உயிரை மாய்த்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
இதேவேளை, பேஸ்புக்கில் வெளியான புகைப்படம் காரணமாக அண்மையில் குருநாகல் ஜோன் கொத்தலாவல பாடசாலையின் மாணவி ஒருவர் மன உளைச்சலுக்கு உள்ளாகி தமது உயிரை மாய்த்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)*

# ஜனவரியில் மாத்திரம் 164 பேர் உயிரிழப்பு

கொழும்பு,பெப்.21
வீதி விபத்துக்களால் கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் 164 பேர் உயிரிழந்துள்ளனர் என்ற ஆளும் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர் தன தெரிவித்தார்.
2012 ஆம் ஆண்டில் 2444 பேரும் 2013 ஆம் ஆண்டில் 2339 பேரும் வீதி விபத்துக்களால் உயிரிழந்துள்ளனர் என்று அவர் கூறினார்.
2012 ஆம் ஆண்டில் 42,145 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் 286 பேர் அங்கவீன முற்றனர்.
2013 ஆம் ஆண்டில் 39,801 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதோடு, அதனால் 320 பேர் அங்கவீனமடைந்தனர் என்று அவர் கூறினார். (ச)

# உள்நாட்டுப் பிரச்சினைகளை அங்கேயே தீர்க்க வேண்டும்

## தென்னாபிரிக்க அரசு தெரிவிப்பு

இலங்கையில் நிலவும் உள்நாட்டுப் பிரச்சினைகள் அங்குள்ள மக்களாலேயே பேசித் தீர்க்கப்பட வேண்டும் என்று தென்னாபிரிக்கா அரசு தெரிவித்துள்ளது.
உள்நாட்டுப் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக இலங்கை அரச தரப்புக் குழுவொன்று தென்னாபிரிக்காவுக்கு பயணமாகியுள்ள நிலையிலேயே, அதன் துணை வெளியுறவு அமைச்சர் இப்ராஹிம் இப்ராஹிம் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.
"பொதுநலவாய, மாநாட்டில் பங்கேற்க இலங்கை சென்றிருந்த எமது ஜனாதிபதி, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துப் பேசியிருந்தார். அதன்போது, இருதரப்பினரும் தென்னாபிரிக்கா வந்து அனுபவங்களை பெற்றுக்கொள்ள விரும்பினர்" என்றும் இப்ராஹிம் இப்ராஹிம் கூறினார்.
இதையடுத்தே, அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் இலங்கையிலிருந்து தென்னாபிரிக்கா பயணமாயினர். இந்தக்குழுவில் அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, துணை அமைச்சர் பைசர் முஸ்தபா உட்பட பலர் இடம்பெற்றுள்ளனர்.
கூட்டமைப்பும் விரைவில் தென்னாபிரிக்கா பயணம் அரச குழுவைப் போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விரைவில் தென் ஆபிரிக்கா வரவுள்ளது என்று அமைச்சர் இப்ராஹிம் இப்ராஹிம் தெரிவித்தார்.
" இருதரப்பிடமும் இணக்கப்பாடு குறித்து தென்னாபிரிக்கா பேசவுள்ளது. இருதரப்பினரும் தென்னாபிரிக்காவில் நிலவிய அரசியல் பிரச்சினைகள் எப்படித் தீர்க்கப்பட்டன என்று அறிந்துகொள்ள ஆர்வமாக உள்ளனர். எனினும், தென்னாபிரிக்காவில் ஏற்பட்டது போல ஏன் இன்னமும் அரசுக்கும்தமிழ்த்தரப்புக்கும் இடையே இணக்கப்பாடு ஏற்படவில்லை என்பதை நாங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.
அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படாமல், இணக்கப்பாட்டால் மட்டுமே பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதையும் தென்னாபிரிக்கா, இலங்கை அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் எடுத்துச் சொல்லும்" என் றும் அவர் கூறினார். (ச)

**அரச குழுவைப் போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விரைவில் தென் ஆபிரிக்கா வரவுள்ளது.**